# TAMIL TEXT BOOK

FOR 1886.

CONTAINING

# KOORMAPURANAM.

(23RD TO 26TH CHAPTERS.)

AND BHARATAM (BHISHMAPARUVAM,

3RD DAY'S WAR-6TH DAY'S WAR.)

WITH

PATHAVURI, GRAMMATICAL NOTES

AND

GLOSSARY FOR THE BIOGRAPHY OF

**Kambar, Otakuthar, Pugalanthi.**

*EDITED BY*

**T. K Soobbaroya Chettiar,**

TAMIL PUNDIT

*Government Normal School.*

MADRAS.

PRINTED AT THE AUTHIKALANITHI PRESS.

1885.

*Price Rs.* 1-2-0.

பரமபதி துணை.

# கூர்மபுராணம்

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வெண்ணிலாக்கற்றைகான்றுவிளங்குமோர்பிறைக்[கோட்டினு]
யெண்ணிலோர்பாகங்கூந்தற்பிடியெனவிருந்தவாற்றாற்
பெண்ணொருபாகம்வைத்தபிரானருகனுருவுகாட்டு
மண்ணலங்களிநல்யானையடிமலர்சென்னிவைப்பாம்.

## பூருவகாண்டம்.

## இருபத்துமூன்றாவது

## இராவணன்வதையத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அள்[ளற்]கருஞ்சேற்றிடைபெடையோடலவனுடுஞ்சிறுகுழியைக
கள்[வ]யுயிர்கருநறும்புன்னைததாதுதூர்க்குங்கடற்கரைவாய
வள்[ள]ல்கடலந்தாளையொடுமிறுத்தல்கேட்டுவெல்லரக்கன்
றெள்[ளு]மறைநூற்றுறைபோயதோசகித்துளைவரொடுந்தேர்ந்தான். (௧)

அன்[னகா]லைவீடணன்போரரக்காகோமான்முகநோக்கிக்
கன்[னற்]கறபினுருவமைந்தகமலததடங்கட்சானகியை
யின்[னே]விடுதல்நெறியெனவுமிலங்கைவேந்தன்முனிநதுரைப்ப
மின்[னு]குவேலவீடணன்போநதிராமனுழையினமேயினான். (௨)

கல்[illegible]கருங்கட்பெணுருகாடந்தகமலககழற்காலோர்
[illegible]தடந்தோள்வீடணனைமதிநூறறுறைபோமாருதிதன்
[illegible]ற்றேறியிலங்கைநகாக்கிறைநீயென்னச்சுடர்பரப்பி
[illegible]ன்போலவிருடுருவுமெரிமாமவுலிசூட்டினான். (௩)

[illegible]ளாநீர்ககடலடைப்பானவருணற்பழிச்சியுயர்களையின்
[illegible]ப்பசயனத்தின்மேயியோரேழ்நாளுறைப்ப
[illegible]பாதர்திலனுகவெகுண்டுவரிவெஞ்சிலையினேடும்
[illegible]ால்குனிததிடலும்புகைந்தவோரேழ்புணரியுமே. (௪)

[illegible]ங்குகூடல்புகையவருணன்வெருவிக்காகுத்தன்
[illegible]தாள்பணிந்துவேலையடைப்பானுரைத்தேகச்
[illegible]தோட்செம்மனளனுலனைகட்டிப்
[illegible]ஞ்சுவேதவனாயின்பாலிறுததான். (௫)

இறத்தற்கிணையிடைப்புகுந்தசுகசாரணனையெதிர்பற்றிச்
செறித்தகழற்கால்வீடணன்போய்ச்செங்கட்கரியோன்முன்னுய்ப்ப
வொறுத்தறிதுவிடுத்தியெனவிடுப்பவொற்றர்பணிந்தேகிக்
கறுத்தநெஞ்சினிலங்கையர்கோனறியவனைத்துங்கட்டுரைத்

கரியதிரைவாரிதிசெவப்பக்கடைக்கண்சிவந்தோன்றனைக்க
திருகுசினத்தவாளரக்கன்செம்பொன்மணிக்கோபுரமிவர
வரைகொன்றுயர்ந்தமணித்தடந்தோளரக்கற்காண்பான்மணிவண்ண
னிரவிதடந்தேர்ச்செலவகற்றுஞ்சுவேதவரையின்மீதிவர்ந்தான்.

வெள்ளிப்பொருப்பையெடுத்தபுயனிவனுமென்னவீடணனைபோர்
வள்ளற்குரைத்தல்கேட்டிடலுமணிக்கோபுரத்தின்மிசைதாவிக்
கள்ளக்கொடியவரக்கனெடுஞ்செருவேற்றவன்றன்கதிர்முடிகள்
தள்ளிச்சயங்கொண்டிராமனடிதாழ்ந்தானிரவிகாதலனே.

விலங்கற்றிணிதோளங்கதனையிராமன்றூதுவிடுப்பவவ
னிலங்கைநகரினிடையெய்தியிகல்வேலரக்கன்முன்னுறலு
மலங்கல்வடிவாளிராவணனுமாரைநீசொலெனவுன்றன்
புலன்கடேயவானுதியிற்பிணித்தோன்புதல்வனெனப்புகன்றான்.

என்றலோடுமிலங்கைநகரெரித்தகவியாண்டுளதென்ன
வுன்றன்சிறுவன்வீக்கவகப்பட்டவிழிவினுளங்கொதித்துக்
கன்றியுயர்வானரத்தலைவர்கடியக்காணத்திடையொளித்துப்
பொன்றியதுவோவுய்ந்ததோவறியேனந்தப்புன்குரங்கே.

பொற்பிற்கரசைவிடுத்தியெனப்புகலமறுத்திப்புன்குரங்கை
மற்போரரக்கர்கோறியெனவந்தோராவியறமாய்த்து
வெற்பார்தடந்தோளங்கதனுமிராமனுழையின்விரைவினிற்போய்க்
கற்பாடழித்தபுயத்தரக்கனசெய்தியனைத்துங்கட்டுரைத்தான்.

கலிநிலைத்துறை.

செங்கட்புலிப்போர்த்தனவங்கதன்செப்புமெல்லைக்
கங்கைக்கிறைவன்றுணைவிற்கடற்றானைசூழ
வெங்கட்கொடியோர்மிடைகின்றவிலங்கைசூழ்தார்
மங்குற்புறம்போகுயரிஞ்சிவளைத்துக்கொண்டான்.

கனைகொன்றிரங்குகடலிற்கவிவெள்ளமெய்திப்
புரிசைப்புறததினிறுத்தார்க்கும்பூசல்கேட்டு
வரைகொன்றதிண்டோளரக்கன்றிறன்மள்ளர்யாரும்
பொருவெஞ்சிலைக்கைப்பெரியோனொடும்போரினேற்றார்.

கம்பார்களிற்றுப்பிரசங்கன்கனன்றுசெல்லச்
சம்பாதிவெற்பொன்றெறிந்தன்னவன்றன்னைமாய்த்த
வம்பார்மலர்த்தாருவின்மாருதிபோதலோடு
வெம்பாவுயிர்போகவிழுந்தனன்சம்புமாலி

வென்வேற்பிரதபன்றன்னுயிர்வீயவெம்போ
ரொன்றூர்வணங்குநளனோர்கதைகொண்டுமாய்த்தான்
கன்றூடுதின்டோட்டபனன்றனைக்காய்ந்துகேசன்
பொன்றூவுமாதர்க்கலங்கூட்டுணைப்போக்கினனே (௧௫)

வின்னுங்கவீங்குதிணிதோளுடைமித்திராக்கன
றன்னங்கம்வீழவிறல்வீடணன்றனடின்மாய்த்தான்
மன்னற்கிளையோன்விருப்பாக்கனைவாளியொன்றாற்
றென்னம்புலததோர்விருந்தேற்பச்செலுத்தினனே. (௧௬)

வெயில்கான்றிருள்சீத்தெழுவெங்கதிர்ச்செல்வன்மைந்த
னயில்வேற்பிரகத்தனைவெங்களத்தாவியுண்டான்
றுயிலாதவென்றிமயிந்தன்பொருதோமரத்தால்
வயவெஞ்சிலைவச்சிரமுட்டியைவாகைகொண்டான். (௧௭)

அழல்வெம்பகுவாய்த்திறலக்கினிகேதுவோங்கு
மெழுவென்றதிண்டோளவலிரச்சமிகேதுவொன்னார்
தொழுமெச்சகோபனவிராழிச்சுதந்தனென்னுங்
கழிவெஞ்சினத்தாருயிருண்டனன்கங்கைநாடன். (௧௮)

சுடுவெஞ்சினத்தவயமீளிதுமிந்தனென்போ
னடல்கூரசனிப்பிரபன்றனதாவிகொண்டான்
கடலுஞ்சுவற்றுங்கனல்வெங்கட்குசேனன்வெய்ய
மிடல்வித்துன்மாலியுயிர்விண்ணகதேற்றினனே. (௧௯)

இவ்வாறிராமனெரிதம்பியிலங்குவைவேல்
வெவ்வாயரக்கர்தமைவிறகொடுநூழிலாட்டு
மவ்வேலைதன்னிறநிறைவேலையினுழிவெய்யோன்
செவ்வான்களம்போற்குடபாலுறச்சென்றுசேர்ந்தான். (௨0)

அங்குறபொழுதினிருதாக்கிறைகாதன்மைந்தன்
வெங்கைச்சிலையின்கணைமாரிவிலக்கியன்றோன்
றுங்கக்கொடிஞ்சித்தடந்தேர்துகளாகவீசிச்
சிங்கக்கொடும்போத்தெனவங்கதன்சீறியார்த்தான். (௨௧)

மூன்றேரழிந்ததிறலிந்திரசித்துவானின்
மீன்றோய்படலத்தின்மறைந்துவெகுண்டுநோக்கிச்
சான்றோர்புகழுந்தனிவிற்கைத்தலைவர்தம்மே
லூன்றோய்பகுவாயரவக்கணையுந்தியார்த்தான். (௨௨)

செங்கட்புனைக்கைக்கொலைவேழஞ்சிலம்பிநூலிற்
றங்கிச்சிதைப்புண்டுகிடந்தெனதம்பியோடும்
பொங்குந்தழல்வாய்ப்புயங்கக்கணைதோள்பிணிப்ப
வெங்கட்களத்திற்கிடந்தானிகல்வென்றிவீரன். (௨௩)

கலிவிருத்தம்.

செய்யதாமரைக்கணான்செய்திநோக்கியே
வெய்யவன்காதலன்வெகுளிமீக்கொள
வையிருதலைவர்போயரக்கன்மைந்தனைக்
கையினிற்கவர்கெனக்கடிதிற்றூண்டினான். (௨௪)

தூண்டியமாருதிமுதலதூயவர்
தேண்டினர்வானிடைச்செல்லவெய்யவன்
காண்டலுங்கணைகளால்வீழ்த்தித்தாதையால்
மீண்டனன்புகுந்தமைவிளம்பினனரோ. (௨௫)

தாதையுமைந்தனைத்தழுவியொற்றராற
சீதையைக்கொணர்ந்தவர்செய்திகாட்டென
வோதலும்புட்பகத்தேறியொல்லைபோய்ப்
போதரிநெடுங்கணாள்புலம்பக்காட்டினார். (௨௬)

அரிறபவுணர்ந்தனளழுங்கனியெனத்
திரிசடைமனங்கொளத்தெருட்டத்தேறிய
புரிகுழலணங்கினைக்காக்கும்புன்மையோர்
மருமலர்ச்சோலையிற்சிறைவைத்தாரரோ. (௨௭)

ஒளியிழந்திலர்முகமுயிருண்டாமெனத்
தெளிவொடுமவீடணன்செப்புமேல்வையிற்
களியொடுந்தடஞ்சிறைக்கலுழனெய்தினான்
றளையெயிற்றரவுதன்றொடர்ச்சிவிட்டதே. (௨௮)

தாள்வரைமுடிமுதற்றழும்புதீர்ந்துயர்
கோள்விடுமதியெனக்குமரருய்ந்தெழ
நீளிருஞ்சிறையினானீவியேகினான்
றோள்வலியாலமிழ்தெடுத்ததோன்றலே. (௨௯)

முருகுறழ்செவ்வியோர்குனித்தமொய்ம்புடை
வரிசிலைநாணொலிமடித்தவாயுடைப்
பரிதிசேய்முதலியபடைஞரார்ப்பொலி
யுருமெனவிராவணன்செவியினுற்றதே. (௩௰)

கேட்டலுமிராவணன்கிளர்ந்ததானைமேற்
பூட்டுவிற்புகைநிறக்கண்ணன்போகென
வாட்டிறலொடுஞ்செருமலையமாருதி
தாட்டுணைபிடித்தனன்றரையினெற்றினான். (௩௧)

கச்சையம்புகர்முகக்களிநல்யானைபோல்
வச்சிரத்தெயிற்றவன்மலையவாலிசேய்
கச்சுவாளவன்கையிற்பறித்துநாண்மலர்ச்
செச்சைதாழ்முடித்தலைசிதறவீசினான். (௩௨)

மாருதிக்ககம்பனனுடைந்துவான்றவழ்
கார்நிறத்திராவணற்குரைக்குங்காலையிற்
பார்புதைத்தெழுமிருள்பருகிப்பாய்திரை
யார்கலியகடுகீண்டருக்கன்றோன்றினான். (௩௩)

எரிகவிழ்த்திணைவிழிபுகையவேற்றெதிர்
வருபிரகத்தனைக்கிழைவாயிலிற்
குருதிவாய்வழியுகககுதறிவீழ்த்தினு
னிருதர்வெங்கூற்றெனத்திரியுநீலனே. (௩௪)

அகம்பனன்றிரிசிராபனசனுடல்வேல்
நிகும்பனுளவாளதிகாயனீள்கும்ப
னகுங்கதிர்வேலிராவணிநராந்தகன்
றிகழ்ந்தவேல்மகோதரன்றேவராந்தகன். (௩௫)

ஈங்கிவர்முதலியதலைவரெண்ணிலர்
வாங்கியவில்லினர்மடித்தவாயினர்
வீங்கியதோளினர்வெருண்டநெஞ்சினர்
பாங்கினிலளப்பரும்படையொடேகவே. (௩௬)

மாற்றலர்வயிறெரிதவழ்ந்துமாழ்குறக்
கூற்றமுங்கண்புதைத்தஞ்சக்கொல்சினத்
தேற்றரிமுரசினமிடியினார்ப்பெழ
வாற்றல்சாலிராவணனமரிலெய்தினான். (௩௭)

கொய்யுளைச்சுவற்பரிகோடிபூட்டிய
வையமூர்ந்தடுகணைமழைபொழிந்திடும்
வெய்யனைக்காண்டலும்வெருண்டுமாருதி
யெய்யெனுமளவையினெதிர்ந்துகூறுவான். (௩௮)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

கருந்தடங்கண்ணிபங்கன்வாழ்கயிலையெடுத்தநின்புயவலிகாண்பான்
பொருந்தினனெனதுமார்பிடையொருகாற்குத்தெனநின்றுபோரிரப்ப
விரைந்தெனைமுன்னர்க்குத்துகென்றரக்கன்வெற்புறழ்மார்பெதிர்கொடுப்ப
விருந்தடங்கிரியினசனிவீழ்ந்தென்னக்குத்தினனெறுழ்வலியனுமன். (௩௯)

எறுழ்வலித்தடந்தோண்மாருதிபுடைப்பவிழிபெருங்குருதிகான்றெழுக
வறிவழிந்தொல்லையுணர்வுவந்தெய்தியாற்றலங்கவியினைவியப்பக்
கறைகெழுவேலோய்நின்முறையென்மேற்குத்தெனக்கல்செய்தோணிமிர்த்
துக், குறுகிநின்றண்டகோளகைவெடிப்பவனுமன்மேற்குத்திநின்றார்த்தான்.

வாய்வழிகுருதிபொழிதரவனுமன்மண்ணிடைமயங்கிவீழ்ந்தயரப்
பாய்புலிப்போத்தினமர்க்கெதிர்புகுந்தநீலன்மேற்பரிகொடேர்கடவிக்
காய்கனற்பகழியொன்றினால்வீழ்த்திக்கவிக்குலத்தலைவனைத்தூரந்து [ன்
சேயுறழ்கொற்றத்திலக்குவன்றடந்தோட்சிலைத்தொழில்வியந்தெதிர்புகுந்தா

அல்லியங்கமலக்கடவுளேயாகவஞ்சனவண்ணனேயாகக்
கொல்சினவடலேற்றண்ணலேயாகக்குறுகலர்க்கடந்தயூராக
வில்லிஞலிவனைவெலறகரிதென்னவெண்ணிணச்சேற்றொடுங்குருதி
பில்குநெட்டிலைவேலெறிந்துவார்சமுறகாவிலக்குவன்மார்பகம்பிளந்தான்.

குருதிவேல்பாயக்களத்திடைவீழ்ந்தவரசிளங்கோளரிதன்னை
யிருபதுகையும்வருந்தாறவெடுத்தும்மெடுப்பரிதாகிநின்றசையுந்
திருவில்முகங்கள்பத்தினுங்குருதிசிந்திடக்குத்தியீழததனுமன்
வரிசிலையிளவறனையெடுத்தேகிமணிநிறவண்ணன்முன்னுய்த்தான் (௪௩)

எய்துமவ்வேலைவேல்படுமயர்ச்சியிளவறீர்ந்தெழுந்துநின்றையன்
செய்யபங்கயத்தாடொழுதனனிற்பச்சிலைத்தொழிற்கொருவனென்றுரைக்கு
மையசெங்கமலக்காடுபூத்தனையவஞ்சனக்கொண்டல்கண்சிவந்து
வையமேத்தெடுக்குமனுமன்மேலிவாராவிராவணனோடமர்மலைந்தான். (௪௪)

காற்றுறழ்கடுப்பிற்கலினமான்றடந்தேர்கழைசுளிகவுண்மதக்களிறு
பாற்றினைக்கவரிக்கூந்தன்மாதுரகட்பாய்புலிப்போதசனவயவர்
வீற்றுவீற்றுகமறிதராவிராமன்வரிசிலைகுனித்தலும்வெருண்டு
கூறறுமெய்யபனிப்பவனுமன்மேலரக்கன்கொடுங்கணைபொழிந்துநின்றார்த்தான்.

மாருதிமருமம்பிளந்திடவரக்கன்வடிக்கணைதொடுத்தமைநோக்கிக்
கார்முகவிறனுதவிருதர்கோனகவசங்கனலுமிழபடைகலந்தடந்தே
ரூர்தருபாகனைவரிசிலையனைத்துமோரொருபகழியாற்றுணித்துத்
தார்புனைமவுலியொருபதுங்கணையாற்றளிமற்றிங்கிவைபுகல்வான். (௪௬)

கூந்தல்மான்றடந்தேரணிந்தபொற்கவசங்கொடுஞ்சிலையடுங்கணைப்புட்டில்
காந்தெரிகவிழ்க்கும்படைக்கலமின்றிநின்றனைசீதையைக்கடி
னீந்துநினுயிருய்தியேலுய்தியன்றெனிலின்றுபோய்நாளைப்
போர்ந்துவெங்களத்தினிங்ஙனையோடிவிளிதியேற்போகெனவிடுத்தான். (௪௭)

வெள்ளியம்பொருப்புமெடுத்தவனுணாமக்கலனுகிவெய்துயிர்த்துப்
பள்ளநீர்வேலியிலங்கையினெய்திப்பரியுடனமைச்சரோடெண்ணி
யெள்ளருமதுகைக்கிணையிலாக்கும்பகன்னனைப்படுதுயிலெழுப்பி
யள்ளிலைச்சூலந்திரித்துமானுடர்தமாவியுண்டிடுகெனவிடுத்தான். (௪௮)

விடுத்தலுமிமைப்பிற்செருக்களத்தெய்திவானரவீரராயள்ளி
மடுத்துவாய்ப்படுத்துக்கவுட்புடைகுதட்டிமலர்கதிர்ப்பரிதிசேய்தன்னைப்
பிடித்துயரிலங்கைபுகுதலுந்தடங்கணரக்கியர்பெய்தமென்சாந்தி
னடுத்தமெய்த்துயர்தீர்ந்திரவிசேயரக்கன்மூக்கொடுசெவிபறித்தகன்றான்.()

திருகுவெஞ்சீற்றமடங்கலேறனையான்செவியொடுமூக்கினைக்கவர்ந்த
விரவிகாதலனைத்தொடர்ந்துவெங்களத்தினேற்றவருயிர்பிழிந்துண்டு
வருதலுமிராமன்கொடுமரங்குழைத்துவடிக்கணைபற்பலதூண்டி
யருவரைத்தடந்தோள்மருமநீள்சென்னிவீற்றுவீறுறவிழவறுத்தான்.(௫௰)

களத்திடைக்கும்பகன்னனையிராமன்கடிந்தமைகேட்டவல்லரக்க
னுளத்திடைவெகுளிமீக்கொளக்கண்ணினெழுகுவெங்கனற்சிகைகதுவித்
துளிப்புயல்வறப்பக்கனன்றதிகாயன்றனமுகநோக்கிநீதுனைவி
னளப்பருஞ்சேனைசூழ்வரச்செல்கென்றறைதலுமடுகளததெதிர்ந்தான். (௫௧)

பொருப்புறழ்தடந்தோள்வாநரமெழுநூறுருவவோர்பொழிகதிர்வேலாற்
செருக்களத்தெறியுநராந்தகன்றன்னையங்கதன்பரிவொடுஞ்செகுத்தா
னுருத்துவந்துடற்றுநதேவராந்தகனையனுமனோர்குத்திறலொறுத்தான்
பருப்பதமதனால்மகோதரனவிமறிந்திடவெறிந்தனனீலன். (௫௨)

மாருதிசினவித்திரிசிராவங்கைவாள்பறித்தவன்றலைதுமித்தான்
போர்முகத்திடபன்மத்தனைக்கதையாற்புகையெழப்புடைத்துயிர்குடித்தான்
கார்முகங்குழைத்துமலராயன்கணையாலிலக்குவனமரர்கண்களிப்ப
நேரலாக்கடந்ததிறலதிகாயனெடுந்தலைதுமித்துநின்றார்த்தான். (௫௩)

கறங்குதெண்டிரைநீருலகெலாம்வென்றகதழ்சினத்தடலதிகாய
னிறந்தமைகேட்டுநிருதர்கோன்சினவியிந்திரசித்தினைவிடுப்பச்
செறிந்தகூரிருள்வாய்வெஞ்சமருடற்றித்திசைமுகன்பகழியாலிராமன்
மறங்கள்போரிளவல்வானரத்தலைவர்யாரையுமண்ணிடைவீழ்த்தான். (௫௪)

வரிசிலைக்கல்வியுருவெடுத்தனையவாளெயிற்றரக்கன்வெஞ்சமரிற்
புரிதொழிலனைத்துமிராவணற்குணர்த்துப்போநகுபேருவகையினிருப்ப
நிருதர்புங்கவனும்வீடணன்சாம்பன்றனைவினவினிகரில்போரனும
னருகுசென்றெய்திநீபிழைத்தமையாலிறந்திலர்யாருமென்றறைந்தான். ()

மெய்புகுகருவிமாற்றுறுமதகந்துணிபடுமெய்பொருத்தத்தக
மெய்தியதழும்புதீர்த்திடுமதகமின்னுயிரளித்திடுமதக
மையகேள்வெள்ளிவரைக்குநல்லிடபகிரிக்குநாப்பண்ணினிதமரு
மையறுமருந்துவரையினிலுளநீகொணர்கெனமாருதிபாய்ந்தான். (௫௬)

பாய்தலுமதனில்மருந்துகாண்கிலனப்பருவரைபறித்துவந்துய்ப்பச்
சேயதாமரைக்கட்செல்வனைமுதலோர்துயிலுணர்ந்தாரெனவெழுந்தா
ரேயவம்மலையைமாருதிமுன்னிருந்துழிவைத்துமீண்டெய்தக்
காய்சினங்கதுவியிரவிசேய்முதலோர்கடிமதிலிலங்கைதீமடுத்தார். (௫௭)

அன்னதுகேட்டுநிருதர்கோன்கும்பகன்னன்றன்மைந்தரையழையா
மின்னகுசுடர்வேற்றலைவரோடேகிவெஞ்சமர்புரிகெனவிடுப்பக்
கன்னவிற்றிரடோட்குரககுவெஞ்சேனைக்கடலுடைதரக்கலக்கிக்
கொன்னுனையயில்வேற்கப்பணஞ்சிதறிக்கூற்றமஞ்சுறவெதிர்மலைந்தார். ௫௮

அங்கதன்சினவியகம்பனனென்னுமரக்கனுக்கமருலகளித்து
வெங்கனனோர்பிரசங்கனைமறலிவிருந்தெதிர்கொள்கெனவிடுத்தான்
செங்கைவள்ளுகிராலடுசினத்துவிதன்சுரோணிதக்கண்ணனைச்செகுத்தான்
பங்கமில்மயூபாக்கனைத்திறல்மயிந்தன்பறவைகூட்டுணவுயிர்படுத்தான்(௫௯)

நள்ளிருள்விழுங்கிக்கதிரொதிரொடுக்கும்பரிதிசெய்நாகிளமபிறைதாழ்
வெள்ளெயிற்றகல்வாய்க்கும்பன்வான்மகளிர் நகைவிருந்தயின்றிடவிடுத்தா
ன், கொள்ளைவண்டறைதார்நிகும்பனைத்திறல்கூரனுமனோர்குத்தினிற்கொன்
றான், வள்ளலோர்கணையாலடல்புரிமகரக்கண்ணனையாருயிர்மாய்த்தான். ()

ஈங்கிவையரக்கன்செவிமுதலுறலுமிந்திரசித்தினைவிடுப்ப
வாங்கவன்மாயாசீதையைவிறல்கூரனுமன்முன்றடிக்கிகல்வேள்வித்
தீங்கறப்புரிவானிகும்பலைக்குறலுமாருதிதிருமறுமார்பன்
பாங்குவநதரக்கன்புரிந்தமையுரைப்பப்பருவரற்கடலில்வீழ்ந்தயர்ந்தான். ()

ஆயபோழ்தனுமனுரைத்தல்கேட்டையவழுங்கேலிராவணிவஞ்ச
மாயையிற்சீதைவகுத்தனன்றடிநதுமகஞ்செய்வானிகும்பலைக்ககன்றான்
மேயவவ்வேள்விமுற்றுறினம்மால்வெல்லுதலரிதமருடற்றித்
தீயினைச்செகுப்பானிளவலைவிடுத்தியென்றுவீடணன்றெளிந்துரைத்தான். ()

உரைத்தலுங்கமலத்தடங்கணிளவலொல்லைபோகெனத்தொழுதேகி
வரைத்தடந்திணிதோளனுமன்மேல்வந்துவானரவீரர்பின்றொடர
வரக்கர்கோனிளவல்கனன்றுமுன்னடப்பவரன்விழித்தெரித்தமுப்புரத்திற்
செருக்களஞ்செவப்பச்சிறிதுகண்சிவக்குஞ்சேவகனிகும்பலைசேர்ந்தான் சுங

அருமறைத்தக்கன்புரிமகங்கணங்களழித்தெனவடல்சினத்தரக்கன்
புரிதரும்வேள்விவாநரத்தலைவாழித்தலும்புண்டிறந்தன்ன
வெரியுமிழ்தறுகணரக்கர்கோன்சிறுவனிமைகரிந்தழலுகவிழித்துப்
பரிதிமான்றடந்தேரனையபொற்றேரிற்பாய்புலிபபோதெனவ்வாமதுமா. ()

அந்தரத்தமரரிமைப்புருக்கண்களிமைத்துவான்றுறந்தனராகல
மந்தரம்வெடிப்பமாதிரத்தலைவர்வயிறெரிதவழ்ந்துநின்றேங்கக்
கந்தடுபுழைக்கைத்திக்கயம்வெருவிக்களிமதந்துறந்துகானபடர
விந்திரன்பகைஞனண்டகோளகையுமிடிதரவரிவிஞ்ஞெறிந்தான். (சுரு)

களத்தெதிரோற்றவோரொருகவிகட்காயிரமாயிரங்கணைக
டுளைத்துவில்விசையினேமியங்கிரியுந்துனைவினிலுருவிவின்பட
வளைத்தலைப்புகுதுமரவெனச்சிலபோயனுமனதாகமூடுருவத்
தளிப்புயலேழுங்கடையுகத்திறைக்குந்தாரைபோற்கணைமழைபொழிந்தான்.

கூற்றுமெய்பனிப்பவரக்கர்கோன்விடுத்தகொடுங்கணையாவையுங்கணையால்
மாற்றிவாளரக்கன்மருமநீள்தடக்கையணிமுடிதுண்டுகள்படுத்திக்
காற்றுறழ்புரவிகலினமான்றடந்தேர்களிற்றினந்துணித்துவெங்குருதி
யூற்றிருந்தொழுகக்கவந்தமாட்டயாவிலக்குவனுறுகணைபொழிந்தான். (சுஎ)

இந்திரன்மருமம்போழ்ந்ததுமறலியீருளின்றீஞ்சுவையறிந்த
தந்தரத்தியங்கும்புட்பகவூர்தியரத்தவெம்புனலிறுடியது
செந்தழற்கடவுள்பழுவெல்லும்பொடித்ததீயவெந்திறன்முகப்பகழி
மந்தரத்தடந்தோண்மாருதிமருமம்போழ்ந்திடவலிதினின்விடுத்தான். (சுஅ)

உருசெழுதோற்றசதனுமனமாரபகலத்த றறுவெமபகழ்போழ்ந்துருவக
குருகிகானறிடனுமிலகக்குவணபுருவத்தொடுமுயாகொடுருகிலேகுழைய
வரிசிலையதறநாரதருபாகலமறிந்தனனவாமடரிமறிந்த
விளைசெனுமானறோசிதாக ... ரககணேவியனகிலமனகயிலபுருந்தான ()

ஒரிமையொடுசருமுலையேரார தாபனாறுறசரோலலேஙிஙிவாசது
போரமுகதலெயமகக கதலமனெத நமபொனறவெவவாமரய பொழியுய
காரிறகதரககம் கொழு ஙிமாரோரி கவளவாமபுரமிக ரினேசநும
பாரிரடமறியவி ரினைமபாடபாட பா யய க சயிறா புலைடதான (௧௦)

ராயிளைடய தக வளமமா மறனமுகககள ளருரலியபப
வருவனாகதடனராளிநகரசிசு ககமம பலப்படகத் கெனறுவபபத
திகாவெ ரிருருபி பலயாகரோடிகக நக ககமுழுவ சுருசெசவபப
விரவுரளபச முய ரெமுரியாதருவனமவெ சமாவிளைகரா. (௧௧)

அநதரநதமராமலரமனமுபொழிபவரட கபடைா சுடபிலாககுவபுநத
சநதிரமவுமிககடட ளாமனணதத ரமிலே ருர ற றவாககக
காசடுபுமுழநகைககடாசகளிரலே பவமகுவளவி பபுகா தருனு
மி திரனகமேயாம ாவ சி ச ரிபிருசிலதத றுக மு நகினைமுல. (௧௨)

வி ரணவரியபகாசிருகசடாமுனிகா ள ராமிய நன ாசசக
கமணைனாரா வமுழுவதா ளிபபசகாமுககககமலிமயினாவுமைாபோ
மணலவலசெவ மியினியாவல பாயவெரமசவா பமிழிசருநுசதுளிபிலிமறுச
தணைனறுநுகமம் கணணை ணை மகி நதுதமுவிகி முசிசா மிகையுரல. (௧௩)

நுகிலைவகிர கலிராவளிபமரினிசசுசமமிமயா மாபோயிலசடபழு
நூரூகிகமமி றற லவியாமுபா தோரேனப ரிபுபுயிலு முறு கிய
பாவகுமாரபரிமேதவருசிலகசளிறுப ரவெப றுனாகநராற மனடயும
யிவதுராமெலெப்புவிமுது நறுககலெவ சமாபுரிடுனயிடிகதான (௧௪)

பயிராரசோர ரபயிரும் வருசதவெடக கிறுமெனனுவசு கரிகா
ரெயபோருமு படலதலிருயராமரவிலவிலேயாடா பாசதெளிகிற
காயுமவெவக தநி கசுலைசயோரோழிறகனலவிழிபபுலவுசாறழலவாபப
பேயுமவெகுறுதசாட தமுமுவபபபெயக மமாரியினறுததுாள (௧௫)

உரவுசிதசுராமககடறவெபருநதுாலிலைதாசலமபொறறரபோபுவரபபப
புருவமயாறுசவினேறினவிழிததலிசிசோளரிருபடடபுகைசத
வருவனாததடசோளிருபநுமபலேயாவணடேகாாகைமுசடளாக
வெருவிவாரவாகளோடினாராககனவெகுளவெயுமெனகிலேசோ (௧௬)

பொருப்புறழதடநதோளமாபெருமபகசனமகோசரனபொருநனாககட்த
வுருபபவெசினைதக்கிறலவிருபாககபருடைய மபுகாமுகபபநு கதாள
மருபபுபடதத கைகவாரனமநத தாவர மரிபரிகுவாரழவ
ரிளைசசெழுகடலிறாததுழனசெலலவிகலமாவேடடேகியொழுநதால (௧௭)

மூவகையுலகுந்தளைதடிப்படுத்தமுழவுறழ்தடம்புயத்தரக்கன்
வாவுமான்றேரின்மதிக்குடைநிழற்றவயக்குவெண்சாமரையிரட்டக்
கோவெடுத்தருந்துங்குருதிவாளவுணர்சூற்றுடைவாள்சுமந்தேகத் [தான்.
தேவர்மெய்நடுங்கித்திசைதொறும்வணங்கச்செருக்களத்தொல்லையினடைந்

ஆயிரஞ்செருவின்மறலியைப்புறங்கண்டமர்பெருந்தருஞ்சமம்வேட்டு
மாயிருஞாலமுழுவதுந்திரிந்தவாகைவெற்றிறல்விருபாக்கன்
காய்கதிர்ப்பரித்திறவனையெதிர்ந்தோர்கதையினாற்புடைத்தலும்வெகுண்டு
தீயுமிழ்ந்தறுகண்விதுங்கிவாளரக்கன்மறிதரச்சென்னியைநெரித்தான் (எகூ)

உலகெலாம்விழுங்குமறலியாவென்னவுமிழ்கொடுந்தழற்சிகைபரப்பி
யிலகுவாள்விதிர்த்துக்கேடகந்திரித்துமகோதரன்களத்தெதிரேற்பக்
கொலைபழுத்தொழுகுங்குருதிவாளொழித்துக்கூன்புறப்பலகைகைகொண்டு
மலையும்வெஞ்சமத்தின்வாலிதன்றனையன்மற்றவனலைதுமித்தெறிந்தான ()

சங்கமுஞ்சமூகுமார்க்கும்வெங்களத்திற்கவிக்குலத்தலைவரைத்துரந்து
சிங்கமேறென்னக்கொடுஞ்சமர்விளைக்குமாபெரும்பக்கனைமுனைசென்று
துங்கமால்வரையிற்றிரண்டதோளவலியாற்சோர்வுறநிலத்திடைவீழ்த்தி
யங்கதன்சினவியாளரிப்போத்தினங்கவனுடலபிளந்திட்டான். (அக)

தானையந்தலைவர்விளிந்தமைநோக்கித்தழலெழவிழித்துவல்லரக்கன்
வானிடைப்பூத்தவுடுக்கணஞ்சிதறமற்றையவண்டமும்வெடிப்ப
தேனவிழ்கமலப்பொகுட்டினிதுறையுநதேவனுஞ்செவித்தலம்புதைப்பப்
பானிறச்சங்கமொருபதுநூறதனைப்பாழிவாய்தொறுமடுத்தொலித்தான். ()

பையராநெற்றிச்சுடிகையிற்கிடந்தபார்முகங்கிழியவோரெட்டு
மைதவழ்குடுமிவரைபறித்தெறியுமவ்வாளரத்தலைவர்களொருவருங்
கையினைமுழந்தாள்மருமநீள்சென்னியெங்கணுங்காய்கணைசெருகி
யெய்யெனக்கிடப்பவுலகெலாம்வென்றவிராவணனிருஞ்சிலைகுழைத்தான் ()

மற்றவைநோக்கியிலக்குவன்சினவிடவரையனையவிற்குழைத்துப்
பொற்றடந்திணிதேர்வலவனீள்சென்னிபொங்குறக்கணையினால்வீழ்த்திப்
பற்றலர்முதுகுகண்டவானெடுங்கண்சிவப்பருப்பணைப்புயத்தரக்கன்
கொற்றவெஞ்சிலைகளொருபதுந்துமியக்குருதிதோய்கணையினாலறுத்தான் ()

பாடகத்தொடர்ச்சிப்பழுவினைச்சிமிழ்ப்புப்பற்றறப்பசும்புயலனையா
னூடகப்பசும்பொற்செய்யதாமரைத்தாளசரணமென்றடைந்தபேரறிவின்
வீடணன்வெகுண்டோர்கதையினாலடித்துவெஞ்சினத்தரக்கர்கோனடவுங்[ன்
கோடுயர்பசும்பொற்கொடிஞ்சியந்தடந்தேர்க்குரகதமனைத்தையுங்கொன்று

கொடிஞ்சியந்தடந்தேர்க்கொய்யுளைப்பரிகண்மறிதலுமிரணியறசெருத்த
மடங்கலேறனையவிராவணன்சினவிவாய்மடித்தெயிறுதின்றுரப்பி
விடங்கவிழ்த்தெரிகால்சுடரிலைநெடுவேல்வீடணன்மேலெறிந்திடலும்
கடங்கவிழ்கரடக்கரிநிகரிளையோன்கணையினாலங்கதுதுணித்தான். (அசு)

புயனிறமவிளர்ப்பக்கருகியமேனிப்புலவுவாயரக்கர்கோன்சினவி [சி
வெயிலினையிழைத்துக்கொலைத்தொழில்பயிற்றிவெவ்விடத்தொயயில்மேற்பூ
மயனுளம்வருந்தவளபபிறைட்சமைத்தவரத்தினன்மறையொடுமளித்த
வயிலினையெறியவுரம்பிளந்தினையோன்மண்மிசைவீழ்ந்துயிரயர்ந்தான். ௮

கலினமான்றடந்தேர்கொணரவல்லரக்கன்கடிமதிலிலங்கையிற்புகலு
மலையுறழ்தடந்தோண்மாருதிமுன்போல்மருத்துமாமலைகொணர்ந்துய்பப
வலகில்சிர்ச்சுசேனனமருநதினையளிப்பவையனமுனபோலவுய்ந்தெழுந்தான்
சிலைவிழுங்குயாதோளிராமன்மாருதியைதழுவிமற்றிங்கிவைதெரிப்பான். ()

உற்றுழியாவியுதவினர்கருயிரைநீகர்பொருளுணடெனிலன்றே
மற்றொருகைமமாறளிபபனொன்றுவப்பமருநதுமாமலையினைமீட்டுக்
கற்றடந்திணிதேர்ளாறுமன்முன்போலவைததிவணகடிதுவநதறலும் [ன்
வெற்றிவேலரக்கன் வேறொருமணிததேரிவர்ந்து வெங்களத்திடைப்புகுந்தா

மலரயனடவுமெகினமென்புள்ளூர் வலியழிந்திரியமோதியது
நிலவும்வெணகதிரோன்பரிகொடோர்துரந்துநேமியங்கிரிவலம்வந்த
தலகறுபுவனமுழுவதுந்திரிந்ததாயவிண்ணிடைப்பரந்தலவுங்
கலினமான்றடந்தேர்கடவிவல்லரக்கன்கவிக்குலமிரியவந்தேற்றுன. (௧௦)

தேரினின்றரக்கன்கொடுஞ்சமம்விளைப்பச்சிலைத்தழும்பிருந்ததோளிராமன்
பாரினின்றுடற்றலரிதெனவயிரப்படையுடைக்குரிசில்மாதலியை
யூர்பொலந்தடந்தேரிராமனுக்குதவுகென்றலுமொல்லையினிழிந்து [ன்
கார்வயிறுடைகுங்கூம்புடைதடநதேர்காமுகக்குரிசில்முன் கொணர்ந்தா

அந்தரத்தமரர்வலிகெடவுடற்றுமிராவணனோடமர்மலைதற்
கிந்திரனளித்தகொடிஞ்சிமான்றடந்தேரிவர்கெனமாதலிவணங்கக்
கந்தடுபுழைக்கையெறும்வலிபபரூஉத்தாட்கழைசுளிகடாக்களிறனையான்
மந்தரகதிவருநிளாயுளைத்தறுகணவாளரிப்போத்தெனவிவர்ந்தான். (௧௨)

விண்ணவரளித்ததேரிவரிறையும்வெஞ்சினத்தரக்கர்தங்கோவு
மண்ணினின்வெற்பின்மாதிரமெட்டின்வானவர்தானவருறையுங்
கண்ணகல்விசும்பிறநிரிநதுதாங்கற்றகார்முகவிஞ்சைகளகாட்டி
யெண்ணிலெவ்வுலகுமவெருவொடுநதளரவேழுநாளிராப்பகல்மலைந்தார். ()

மைத்தகார்கமலக்காடுபூத்தனையமணிநிறவண்ணன்விற்குனிததுப
பத்துடைத்தலையுந்தோள்களுந்துமிப்பப்பணடுபோன்முளைததமருடற்றக்
கைத்தலம்விதிர்த்துக்கைகளுந்தலையுமாயிரஙகால்கடிதகற்றி
யத்தவெற்பென்னவிரவிதேர்மருளவாடமர்களத்திடைக்குவித்தான் (௧௪)

கனைகடற்குவமையுணர்த்திடிலந்தக்கனைகடலலதுவேறில்லை
பனியிருவிசும்பிறகினையெடுத்துரைப்பிற்பனியிருவிசும்பலாதில்லை
வனைசழலிராமனிராவணனுடற்றும்போரினுக்கினைவகுத்துரைப்பி
னனையம்போரிராமனிராவணனுடற்றுமருஞ்சமரன்றிவேறிலையால். (௧௫)

என்றுவானவர்கடுதியெடுத்திசைப்பவிராகவனிருஞ்சிலைகுழைத்து
மன்றலங்கமலத்தயன்படைவிடுப்பமழவிடையுயரியகடவுட்
குன்றெடுத்தோங்குந்தடம்புயதசரகன்னுரம்பிளந்தாருயிர்குடிப்பப்
பொன்றினீணிலத்தில்வீழ்ந்தனனமராபூமழைபொழிந்துநின்றார்த்தார். (௩௯௬)

ஆர்த்தனரமரர்விஞ்சையரியக்கராருமறைபாடினின்றுடித்
தூர்த்தனர்மலரான்மெய்மையுமறனுந்தாமறத்தலையெடுத்துயர்ந்த [லகும்
வேர்த்துடல்புழுங்கிப்பொய்மைபோயொளித்தவிழுமறையொழுக்கமெவ்வு
போர்த்ததுதிங்கடோறுமும்மாரிபொழிந்திடச்சிறந்ததெவ்வுலகும். (௩௯௭)

தாமரைக்கண்ணனருளின்வீடணனைத்தகைபெறுவிராவணற்கினிதி
னீமநற்கருமமியற்றுதியெனலுமியாவையும்விரைவினிலியற்றித்
தேமலர்த்துளவோன்சேவடிவணங்கிநிற்றலுந்திருமறுமார்பன்
காமர்வண்டறைதாரிலக்குவவிவற்குக்கதிர்முடிபுனைகெனவுரைத்தான். (௩௯௮)

ஒழுகொளிப்பரிதிவெண்மதிக்கடவுண்மாநிலமுள்ளநாள்காறும்
பழமறையனையவிராகவன்சரிதையுலகினிற்பயிலுநாளளவுங்
கெழுமணித்திகிரித்தசைதிசைபுரட்டிகிளர்மதிலிலங்கைகாக்கென்ன
மழவிடையன்னவீடணற்கிளவலயாளொளிமணிமுடிகவித்தான். (௩௯௯)

இருள்வயிருறாதவெங்கதிர்க்கடவுள்சிறுவனைமுதலியவெவர்க்குங்
குருமணிக்கலன்களைப்பறுதியமரபயவுங்கொள்கெனவழங்கி
வரையுறழ்தடந்தோள்வீடணன்போதருவளருளைவணங்கலுமகிழ்ந்து
செருமலிதிணிதோளனுமனோடேகிச்சீதையைக்கொணர்கெனவிடுத்தான் ( )

அன்னதுகேளாவரக்கன்மாருதியோடசோகநீள்வனத்திடைபுகுந்து
கன்னியங்கற்பினணங்கினைவணங்கிகனிபெருஞ்சோபனம்விளம்பிப்
பொன்னவிர்மணிபூஞ்சிவிகையினேற்றிப்புணர்முலையரக்கியர்சூழ [தான்.
வென்னையாளுடையவன்னையையிராமனிருந்துழிக்கொணர்ந்துமுன் விடுத்

அருந்தவக்கற்பிற்சானகிநோக்கியெனதுயிர்கெடாதருளுசமர்த்திற்
றிருந்தலர்ச்செகுத்துமீட்டனலின்மேனசையினுல்மீட்டிலனினக்குப்
பொருந்துழியேகென்றுரைதரலுமணங்குபொங்கழலினையவன்றருகென்
றிரந்திடவள்ளலருளினுலினையோனியற்றியவெரியிடைப்புகுந்தாள். (௪0௨)

அங்கியங்கடவுளிராமன்முன்னெய்தியரக்கன்முன்கவரவந்துநலும்
பொங்குநீள்வேள்வித்தழற்புகவளியன்புணர்த்தியமாயையையரக்கன் [திற்
மங்கையென்றெண்ணிக்கொணர்ந்தனனந்தமாயையின்றழிந்ததென்னிடத்
றங்கியசீதையிவளவன்றீண்டிற்சாமபராங்கற்பின்வெர்தழலரல. (௪0௩)

ஐயுறேலிந்தவணங்கினைக்கொள்கென்றங்கியங்கடவுளுமலர்ந்த
செய்யதாமரைமேற்புரிதனுமுகட்டேவனுநதயாதனென்னும
பொய்யெதிபுலமையரசனுமுனைப்பபூங்கழல்சென்னியின்வணங்கி
வெய்யவாட்டடங்கட்சீதையையிராமனமேதசத்தெளிந்துகைக்கொண்டான்.

பரதனைத்தாயோடிகழ்ந்திடுமுனிவுதீர்த்தரம்பரிதியங்குலத்தி
னுரிமைபூண்பதற்கோர்வரமளித்திடுகென்றிராகவன்றொழுதுரைத்திடலும்
வரையுறழ்நெடுந்தோள்மார்பகத்தொடுங்கமைந்தனைத்தழுவிவாள்வேந்த
னரசிளங்குமரவளப்பரிதாகுமவ்வரமளித்தனனென்றான். (௧0௫)

ஆள்வழக்கறநீண்டம்பலைத்தொழுதுமயில்விழிப்புலோமசைகணவன்
றளதாமனாக்கட்குரிசிலோர்வரநீகேட்கெனத்தசமுகன்விடுத்த
வாளியால்மறிந்தகவிக்குலமனைத்துமுய்ந்திடும்வரமளிக்கென்ன
நீளிருந்தடக்கையிராகவனகேட்பவிந்திரனேர்ந்ததளித்தான். (௧0௬)

விட்புலத்தமரர்மறைதலுங்கணையால்வீய்ந்திடுங்கவிக்குலமனைத்துங்
கட்புலங்களிப்பவிராமனைநோக்கியுய்ந்துளங்களித்தவாளரக்கன்
புட்பகமளிப்பவிளையவனோடும்புணர்முலையணங்கொடுமிராமன்
நட்புடைக்கவிகடம்மொடுமிவர்ந்துநளிகடற்சேதுவையடைந்தான். (௧0௭)

இராவணன்வதையத்தியாயமுற்றிற்று.

---

இருபத்துநான்காவது.

## இராமன்சிவலிங்கப்பிரதிட்டைபண்ணினவத்தியாயம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

சேதுவினெய்திவரிசிலையிராமன்சினகரமணிபெறக்கோலி
யாதியுமுடிவுமறிவருமிலிங்கந்தனைப்பெயராலினிதமைத்துத்
தூதுளங்கனிவாயணங்கொடுமிளவறன்றொடுஞ்சூழ்ந்துநின்றிறைஞ்சித்
தாதவிழ்மலர்தூயநெஞ்சகந்தழைந்துட்டங்கணீரொழுகிடத்துதிப்பான். (௧)

அருவமாயுருவாயநாதியாயொன்றாயைம்பெரும்பூதமாய்வேறாய்த்
தெரிவரும்பொருளாயதெரிபவையாகிச்செங்கண்மாலயனெனவுரைக்கு
மிருவருங்காணுமறைப்பொருளாகிச்சகத்தினையியக்கியுமியங்காக்
கரியதுவாகித்துரியமாய்த்துரியாதீதமாங்கடவுளேபோற்றி. (௨)

நீற்றொளிபழுத்தவெள்ளியங்கிரியோனிலவுமிழ்மேனியாய்போற்றி
கூற்றினையுதைத்துச்சிறுவனையளித்தகருணாகரற்றாளினாய்போற்றி
பாற்றினஞ்சூழுமுழுவிலைச்சூலப்படையுடைக்கடவுளேபோற்றி
மாற்றலருறையுமுப்புரமெரித்தவாணகைக்குரிசிலேபோற்றி. (௩)

பையரவணையிலறிதுயிலமர்ந்தபண்ணவன்முகிழ்முலைமுயங்கி
யையனையளித்தகடவுளேபோற்றியாதியாம்பரமனேபோற்றி
மையுறழ்கூந்தல்வருமுலைத்துவர்வாய்மலைமகள்கொழுநனேபோற்றி
பொய்யிகழ்ந்தோணரும்புண்ணியருளத்திற்புகுந்திடும்புனிதனேபோற்றி. (௪)

என்றுநாத்தழும்பவிதயநெக்குருகவிராகவனேத்தலுமிரங்கிப்
பொன்றிகழ்சடையுமிலகுமுக்கண்ணும்புலியதளுடையுமெண்டோளு

மன்றலங்கூந்தற்கவுரியோர்பங்குமாயுயர்மழவிடையுயர்த்த
குன்றவிற்குழகருங்கவனமைத்தகோதறுமிலிங்கமொடெழுந்தான். (ரு)

குரவரைப்பிழைத்தோர்கள்ளுநர்நறவங்குடித்தவர்கொலைத்தொழில்புரிவோர்
மருவிமற்றிவரோடிணங்குநாமுதலாம்பாதகரேனும்வந்தெய்தித்
திரையெறிநன்னீர்ச்சேதுவிலாடித்தெளிந்துநீயமைத்தவிவ்விலிங்கம்
பரவிடிற்பாவமுழுவதுந்தீர்ந்தெம்பதமலர்நிழல்வீற்றிருப்பார். (சா)

அங்கண்மாஞாலமழியினுமழியாச்சேதுவின்மகிழ்ந்தமைத்த
பொங்கொளியிலிங்கத்தகன்றிடாதுறைவலென்னவோர்வரம்புகன்றருளி
மங்கையோர்பாகன்மறையவீடணனும்வானரத்தலைவருஞ்சூழச்
சிங்கவேறனையான்புட்பகமிவர்ந்துகிட்கிந்தைமருங்குசென்றடைந்தான். (எ)

அடைதலுமிரவிசிறுவனிற்கிழமைபூண்டிடுமயில்புரைநெடுங்கண
மடநடைத்துவர்வாய்த்தாரையுந்தீஞ்சொன்மாசறுமதிமுகருமையுந்
தொடர்புறுமற்றக்கவிக்குலத்தலைவர்துணைவியர்யாவருஞ்சூழப்
படர்தருவிமானமிவர்ந்தசானகிதன்பதமலரிறைஞ்சியேத்தெடுத்தார். (அ)

தமிழ்முனிமனையாள்வினவில்யான்செய்ததகுதிகளனைத்துமோதுகினு
மிமிழ்கடலடைத்தணைத்திடேல்முனிவனங்கையினேற்றருந்தியதா
லமிழ்தினுமினியாயெனநருமுனிவாசாலைகளனைத்தையுங்காட்டிக்
கமழலர்துறைசூழயோத்தியர்வேந்தன்பரத்துவன்சாலைகண்ணுற்றான். (௯)

பழுதறுமறைதேர்பரத்துவாசன்சேர்சாலைகண்ணுறுதலும்பரம
னொழுகொளிவிமானமிழிந்துசென்றெய்தவுயர்தவமுனியெதிர்போந்து
தழுவிநன்கியம்பியாசனமளித்துத்தாமரைக்கண்ணனேமுதலா
யுழையுறுமெவர்க்குநெஞ்சகங்களிப்பவுவப்பொடுநல்விருந்தளித்தான். (௧0)

தெள்ளுநான்மறைதேர்முனியொடுநெறியிற்கவிக்குலந்தின்றுளங்களிப்பக்
கள்ளுறுதொழுதுங்கனிகளுங்கிழங்குங்காய்களுமுறுவராற்பெற்று
வள்ளல்மாருதிபோய்ப்பரதனுக்கெனதுவரவுரைக்குதியெனவிடுப்ப
வுள்ளமுமுறையும்பிறபடவனுமன்விரைந்துபோய்ப்பரதனுக்குரைத்தான்.

இராமன் சிவலிங்கப்பிரதிட்டைபண்ணின வத்தியாய முற்றிற்று.

ஆகசெய்யுள் - ௧௧௮.

---

### இருபத்தைந்தாவது.

## இராமன் முடிசூடிய வத்தியாயம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

உரைத்தமாருதியைத்தழுவியுள்ளுவந்துமான்மதச்சேற்றொடுங்குலவி
யரைத்தசாந்தகலத்தப்பியதென்னவகங்குளிர்ந்தன்னையரோடும்
வரைத்தடந்திணிதோளிளையவனோடும்வாட்டிறற்பரதன்விற்றுணை
நிரைத்தெதிர்கொள்ளப்புட்பகமிவர்ந்துநீணிறவண்ணனூருங்கடந்தான். (௧)

அடைந்தகார்வண்ணன்வணங்கியபரதனைக்குளிர்ந்திடவெடுத்தணைத்து
மடங்கலேறனையவிலக்குவனோடுமன்னையர்மலரடிவணங்கி
தடங்கொடாமரையோன்மனத்தினிலளித்தவசிட்டனைத்தாழ்ந்தினிதிருப்பக்
குடங்கையினெடியகண்ணிமாமியர்தாள்வணங்கலுந்தழுவியுள்குழைந்தார்.

செயிரறுநந்திக்கிராமமாங்கெய்திச்சிலைத்தழும்பிருந்ததோட்குமரர்
மயிர்வினைமுடித்துவாசநீராடிவெண்டுகில்மாலைசார்த்தணியா
வுயிர்நிகர்நண்பினிரவிசேய்குகன்வேலரக்கர்கோனொடுமினிதுறைந்து
வெயில்கெடவிமைக்கும்புட்பகமதனையளகையர்கோனுழைவிடுத்தான். (௩)

அய்யனுமபரதன்றேர்விடவிளவலவிர்மதிக்கவிகைமேற்கவிப்பப்
பொய்யறுமரக்கனிலக்குவனோடுபொலன்கொள்வெண்சாமரையிரட்ட
வெய்யவன்மைந்தன்சத்துருஞ்சயத்தின்மேற்செலவாநரரெவரு
மையல்வாரணத்தின்மனுடரிற்போதமணிமதிலயோத்திவந்தடைந்தான்.(௪)

ஏர்குடியிருந்துசணங்குபூத்தலாந்தவிளமுலைதொண்டையந்துவர்வாய்த்
தாரையைமுதலாம்வாநரமகளிர்மாமியர்குழாத்தொடுந்தழுவக
கார்புறங்கொடுக்குங்கருங்குழற்சீதைகதிர்மணிச்சிவிகையினேறிப்
பார்புகழ்நசேத்துமயோத்தியினிராமன்பயிறருமுறையுளிற்புகுந்தான். (௫)

கங்கையைமுதலாநதிப்புனலோடேழ்கடலுடற்கடவுணீரனைத்துஞ்
சிங்கவேறனையனுமனைமுதலோர்கொணர்தலுஞ்செழுமறைவசிட்டன்
மங்கலமுழவங்கறங்கநீராட்டிமடங்கலாதவிசினிலிருத்தி
யங்கலும்மேனியணங்குடனிராமற்கவிரொளிமணிமுடிபுனைந்தான். (௬)

இராமன் முடிசூடிய வத்தியாயமுற்றிற்று.

ஆகசெய்யுள் - ௧௨௪.

---

இருபத்தாறாவது.

## அகத்தியன் இராவணன்மரபுரைத்தவத்தியாயம்.

இதுவுமது.

மரகதக்கொண்டல்மணிமுடிசூடிமகிழ்வுடனிருக்குநாடன்னிற்
பரவருந்தவத்தினகத்தியன்முதலாப்பகர்ந்திடுமுனிவரர்யாரும்
விரைவினிலெய்திவாழ்த்தலுமையன்வியப்புடன்பூசனைபுரிய
வுரவுநீர்க்கடலோரேழையும்பருகுந்தமிழ்முனியிங்கிவையுரைப்பான். (௧)

இந்திரசித்தையிருபதுபணைத்தோளிராவணன்றனையிகல்விளைக்குங்
கந்தடுபுழைக்கைக்களிறனகும்பகன்னனைச்சமர்க்களப்படுத்தி
யுர்துலகேழும்வாழ்ந்திடவளித்தாயென்றலுமுரவுவேலிராம
னந்தமில்சீர்த்திக்குறுமுனியோடுமசங்குழைநதிங்கிவையுரைப்பான். (௨)

வெள்ளியங்கிரியைவேரொடும்பிடுங்குமரக்கனைமுதலவிளம்பாம
லெள்ளருந்திறல்கூரிந்திரசித்தையியம்பியதெவனவன்றிறலுங்

தள்ளருஞ்சீர்த்தியரக்கர்தந்தோற்றமுமுலைதுஞ்சாற்றுதியென்னக்
கொள்ளைவண்டறைதாரிராகவனுரைப்பக் குறுமுனியாங்கவைபுகல்வான் (௩)

குமரிவண்டரற்றுந்தாமரைக்கிழவன்குமரனற்புலத்தியனென்போன்
றிமிரநீண்மாயைகடந்துநற்றவஞ்செயதிரணவிந்துவினுயர்சாலை
யமைவுடனெய்தித்தவஞ்செய்காலத்திலம்பகட்டிளமுலைத்துவர்வா
யிமையவர்மாதரளப்பிலரெய்தியீர்ம்புனலாட்டயர்ந்தனரால். ( )

ஆங்கவர்தம்மைப்புலத்தியனோக்கியாயிழைமடவீர்யாரேனு
மீங்கினிமெய்யிற்கருப்பமுறநிற்கவென்றலுமவாவெரீஇயகல
வோங்குசீர்த்திரணவிந்துவின்மகளீதுணராதிடாதாங்கணெய்திடலுங்
கோங்கிளமுலையாள்கருப்பமுற்றிடத்தன்றனைத்துபாரமுற்றுக்கியிதுணைந்தாள் ()

உரைத்தலுந்திரணவிந்துவென்றுரைப்போர்புலத்தியற்குவப்பொடுமந்த
விரைக்கருங்குழலையளிப்பமற்றவளுமவ்விசிரவாவினையீன்றாள
பரத்துவன்மகளையாங்கவன்வேட்டுவைச்சிரவணன்றனைப்பயந்தாள
வரைப்பருமறைதேர்வைச்சிரவணன்மூவாயிரவருடமோற்றனனால். (௬)

குறுந்துளிதூற்றுங்கங்கைதாழ்சடையோன்சோதனமுனிதவநோக்கிச்
செறிந்திடுமியக்கர்வேந்தனுக்கென்னச்செய்பினன்புகழுமவேற்றருப
பறந்துசெல்விமானமளித்தனனீசப்பரிவொடிந்நகரியைவணங்கி
யுறைந்திடுகவொன்றளிக்கெனவிலங்கைமாநகருறைதியென்றுரைத்தான். ௭

தொன்றுதொட்டரக்கர்வாழ்வுறுமிலங்கைத்தொன்னகரதனிடைக்குபேர
னென்றருஞ்செல்வத்தமர்த்தனனென்னவுமப்பொருவிரிசிலையிராம
னன்றறிமுனிவபுலத்தியனளிக்குமுன்னமுநாமமுமப்பெயிறாறு
வென்றிசேரரக்கநோர்கொலோவவர்தங்காதையையளமபுகலெனருளா. (௮)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

முன்னங்கமலப்பொகுட்டின்முதல்வன்சிலரைப்படைத்தாங்
கன்னோர்தமயிற்சிலரையியக்கரெனப்பேராக்கிப
பின்னுஞ்சிலரையரக்கரெனப்பேரளித்ததானவருள
மன்னுங்கேதியோடும்பிரகேதிவலியனானான். (௯)

ஆலகருஞ்சீசருமிழுமலங்குசுடர்வேற்கேதி
காலனோடும்பிறந்தசகிரமென்கொங்கைப்பயையைச்
சாலவதுவையாற்றியின்னுகேசனறன்னை
வேலையிடத்திற்பிறந்தவிடமாமென்னவுயிர்த்தான். (௧0)

மருவார்க்கிடியேறென்னவயவாண்மினாக்கேசன்
றரையாள்சந்திமகளாஞ்சாலகடங்கர்கடையை
முருகார்மாலைசூட்டியுயிர்போனமுயங்குநாளிற்
கருவுட்கொண்டவ்வரக்கிகவின்மந்தரத்திற்கலந்தாள். (௧௧)

மைதோய்பைம்பொற்குடுமிவரையின்வயிறுவாய்த்து
வெய்யகாமங்கனற்றமின்னுக்கேசற்றொடர்ந்து
தையலேகலோடுநதனியேகிடந்தச்சிறுவன்
பையுளுற்றுக்கலுழ்தலபரமன்கண்ணிறகண்டான். (கஉ)

ஏயசிறுவன்றன்னையெம்மானருளினோக்கித்
தாயினளவினின்றேவளர்கவென்னச்சாற்றி
யாயவரக்கன்றனக்கோரம்பொன்னகரமளிப்ப
வேயமென்றடந்தோட்கவுரிவிழைவினிதுணைப்புரிவாள். (கங)

அரக்கர்மகளிர்கருப்பமடைந்தனரான்றேபெறவும்
விருப்பினீன்றவன்றேமகவுகள்விரைவினவளர்ந்து
பரிததத்தாய்பொன்றிடவுமபவளச்செவ்வாய்க்கவுரி
யுரைததறகரியவரமாங்குதவியிறையோடகன்றாள். (கச)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கச்சமாச்யானையின்றோல்போர்த்தாடுங்கடவுளருளினிதிற்பெற்ற
பச்சிரத்தங்கோப்புளிசதும்பரிதிவேறசுகேசனெனுமரககனெந்தை
யிச்சையுடனினிதளித்தமாநகரில்வாழுநாளியக்கர்கோனு
நசிலேவெற்கிராமணிதனன்மகளைச்சுகேசனுக்குநல்கினனே. (கரு)

சற்றுளைந்தசிறுதும்பிமேன்மேற்போயப்பறந்திடுமீர்ஞ்சிறையினூறற
காற்றினலமருமருங்குற்றேவவதிசுகேசனொடுங்கலந்துவெய்ய
மாற்றெறியுமாலியவான்சுமாலியொடுமாலிதனைவயிறுவாய்த்தாள்
கூற்றும்வெருவருந்திறலோர்கொடுநதழலினின்றுதவங்கோலினரால். (கசா)

மற்றவர்தந்தவநோக்கிமறைக்கிழவன்மகிழ்ந்தனனீர்வரங்கேட்கென்னப்
பற்றலரைவென்றுலகமெமதுகுடைநகிழ்வைகப்பாலியென்னப்
பொற்றசெழுங்கமலத்தோனவையளித்துநீங்குதலும்புவனமியாவுங்
கொற்றமுறவடிப்படுத்திவிச்சுவகனமாவொடிலைகூறலுற்றார். (கள)

விண்ணகர்போலெழிறிகழும்விழுத்தகுநன்னகரமொனறீங்கியற்றுகென்னக்
கண்வழுசகுகதிரொளிகால்திரிகூடமால்வரையிலுடலக்கண்ண
னண்ணவொருநகரமுனமமைத்தனனங்கமர்திரொனநவிறலோடும்
பண்ணியவாமபரிததடந்தேராக்கரொருமூவருமப்பதிபுக்காரால். (கஅ)

கந்திருவர்குலத்துதித்தகயனெடுங்கணருமஙதையாங்கன்னிவேற்கட்
சுந்தரியின்னமுதமொழிக்கேதுமதிவசுதையெனுஞ்சுடர்வேலுண்கட்
பைந்தொடிமாதரையீன்றளாங்கவரோராமூவரையுமபரிதிவேற்கைக
மைந்துடைமாலியவானுஞ்சுமாலியுமாலியுமுறையின்வதுவைசெய்தார் (ககூ)

மாலியவான்றோள்புணர்ந்துசுந்தரிவச்சிரமுட்டியெசசகோபன்
காலனிகருன்மததன்விருபாக்கன்றுயில்வோனைகடிவோன்மத்த
னுலகிகர்துன்முகனோடனலையெனுமணங்கினையும்வயிறுவாயத்தாள்
சிலமுறுகேதுமதிசுமாலியைநதோய்சதீன்றவளாதெரிக்கலுற்றாம். (உ0)

விகடனுயர்பிரகத்தன்விறற்காலகார்முகன்வெம்பாசகன்ன
னிகல்செயகம்பனனண்டன்சங்கிருதிபுகைக்கண்ணனெழிற்பிரசங்க
னிகரில்சுபாரிசனெடுங்கைகசிகும்பீநசியயில்வேனெடுங்கட்செவ்வாய்ப்
பகரமுதமுறழுமொழிப்பாவைப்புட்பொற்கலையென்னப்பகர்வரன்றே. (உக)

மாலியெனவுலகேத்தும்வல்லரக்கன்வசுதைவனமுலையிற்றோய்ந்து
சீலமிகுமனிலனெடுமனலனரன்சம்பாதியென்னுந்தீதில்
கோலமணிமுடியரக்கர்நால்வரையுமினிதுயிர்த்தான்குறுகார்ச்செற்று
ஞாலமுழுவதுமவெருவமாலியவான்கொடுங்கோன்மைநடத்துநாளில். (உஉ)

விண்ணவர்வெவ்வரக்கர்புரிகொடுந்தொழிலுக்காற்றாதுகயிலைமேவித்
தண்ணிலவுகதிர்க்கற்றையமுதிறைக்குந்தாழ்சடையோன்சரணமபோற்றிக்
கண்ணறையராமரக்கர்மூவரையுங்கடிந்தெமக்குக்களைகணாகி
யண்ணலெமக்களித்தியெனவிரந்திடலுங்கறைமிடற்றெம்மடிகள்கூறும். ()

தூயநறுமலர்தூவிவழிபாடுபுரிந்தருளுஞ்சுகேசன்மைந்த
ராயிரம்வெம்பிழைசெயினுமாங்கவரைக்கோறலெமக்கடுப்பதன்றாற்
றீயரைக்கொல்கெனமாலைப்பணித்தனனீர்விரைந்தாங்குச்செல்வீரென்னப்
போயமரர்குறையுரைப்பநெடியோனுமதற்கிசைந்துபோமினென்றான் (உச)

அவ்வுரைகேட்டயினெடுங்கட்புலோமசைவெம்முலையானையணைக்கும்பாகன்
கௌவையொழிந்தமரர்தொழவின்றுடுபுகவிழைந்தகருமம்யாவும்
வெவ்வினைத்தூதுவருரைப்பமாலிமுதலரக்கருளம்வெருண்டுகேட்டுப்
பௌவநெடுங்கடற்றானைபுடைசூழப்பணவரூர்வளைந்துகொண்டார். (உரு)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

திருந்தலர்புகுந்தமாற்றஞ்செவித்தலைவெதும்பக்கேட்டுக்
கருங்கடற்செவப்பவந்தகவுத்தவமணிநேமார்பன
முருங்கெரிகவிழ்க்குஞ்செங்கண்மூரிவெங்கலுழனூர்ந்து
வருந்தலீரமரரொன்னவாளமரமுவத்துற்றான. (உசா)

தோற்றமுமுடிவுமில்லான்றாண்டுபுட்சிறகர்வீசுங்
காற்றினுலரக்கர்சேனைகவிழ்தலுமாலிவெம்போ
ரேற்றுவெங்கலுழனஞ்சியரியவெங்கதையாலெற்றக்
கூற்றுறழ்திகிரியேவியவன்றலைதுறைத்திட்டானே. (உஎ)

மாலிவெங்களத்தின்வீழமாலியவான்வந்தெய்தி
வேலினாலெறியவையன்விலக்கிமற்றதனைப்பற்றி
யாலமேயனையான்மெய்யினெறிதலுமயர்ந்துவீழ்ந்து
சூலமொன்றெடுத்துப்பின்னுந்தோன்றன்மேல்விடுத்துநக்கான். (உஅ)

நக்கவாளரக்கன்பின்னுங்கலுழன்மேனடந்துசெல்லச்
செக்கர்வானனையவெய்யசிறைவிசைக்காற்றின்மொத்துண்
டொக்கலோடுடைந்துமிக்கவுலவைசேர்சருகிற்சிந்தி
மைக்கடலிலங்கைசிங்கிப்பாதலமருங்குபுக்கான். (உகூ)

பாதலத்துறையுநாளிற்பாசிழைப்பருமவல்குற்
காதளந்தொளிரும்வேற்கட்கைகசிவதுலையாற்றத்
தீதறுவானைத்தேடித்திரிவுழியியக்கர்வேந்தைப்
போதரக்கண்டுநோனான்பாதலம்புகுந்துசொல்வான். (௩௦)

நச்சயில்பொருவுமொண்கணங்கைக்கைகசிநீகேட்டி
விச்சிரவாவைமேவிவிறன்மகப்பெறுதியென்னப்
பச்சிளங்குரும்பையானும்பணைமுலைக்கழைகொல்மென்றோட்
செச்சைதாழ்கூந்தல்போந்துதெய்வமாமுனியைக்கண்டாள். (௩௧)

நானொடுமீண்டுபுக்கநங்கைநீயாசையென்ன
வேணவாவோடுநின்றனருளினால்விறலின்மிக்க
மாணுடைமைந்தர்தமமைவயிறுவாய்த்திடுவான்போந்தேன்
பூணருநதவத்தோயென்னப்புணர்ந்திவைபுரைக்கலுற்றான். (௩௨)

பொன்புரைதிதலைபூத்தபொம்மல்வெம்முலையாய்கேட்டி
நண்பகலணைந்தவாற்றானிலமவெருவச்செய்யும்
வன்புடைமனத்துவெய்யமைந்தரைப்பெறுதியென்ன
வன்பொடுவணங்கிநின்போலருமகவேண்டுமென்றாள். (௩௩)

கன்னலுமமுதுங்கைப்பக்கனிந்தமென் குதலைகேட்டி
பின்னர்நீயுயிர்க்குமைந்தன்பெட்பொடுமென்போலீண்டு
மன்னுமற்றுன்பாற்றோன்றிவரம்பறுமாயுளெய்தி
யுன்னருங்குணத்தனாகியுலப்பினாள்வாழ்வனென்றான். (௩௪)

இருபதுகரமுஞ்சென்னியீரைந்துந்தாங்குகின்ற
திருவிலிதன்னைமுன்னஞ்சிறப்பொடுவயிறுவாய்த்துக்
கருவரையனையகும்பகன்னனையீன்றுபின்னு
முருவவோடரிக்கட்சூர்ப்பநகையையுமுயிர்த்தாளன்றே. (௩௫)

வீடணன்றன்னைப்பின்னும்வியப்பொடுமினிதினீன்றாங்
கோடரிக்கண்ணாளந்தமைந்தரையுவந்துநோக்கிச்
சேடமிறிருவின்மிக்கவியக்கர்கோன்செல்வமெய்த
நீடிருந்தவங்களாற்றிநின்மின்களென்னப்போனார். (௩௬)

ஐந்தழனடுவினின்றோராயிரம்பருவஞ்சென்றான்
மைந்துடைச்சென்னிபத்திலொன்றறுத்தழலின்மாட்டி
வெந்திறலரக்கன்பத்தாஞ்சென்னியும்வெட்டுமெல்லை
வந்துசெங்கமலப்புத்தேள்வரங்கொளென்றுரைத்தலோடும். (௩௭)

விஞ்சையரவுணர்சித்தருரகர்விண்ணவர்கடம்மாற்
றுஞ்சுதலின்றியெல்லாவுலகமுந்துணைவில்வெல்ல
வெஞ்சமத்தற்றசென்னிதோளவைமீளவெய்தக்
கஞ்சநாண்மலரோய்நல்கென்றிரத்தலுங்கடவுளீந்தான். (௩௮)

மகாமகோபாத்யாய, டாக்டர்

வீடணன்முன்னொய்திவேண்டுவகேட்டியென்ன
நாடொறுநதருமசிந்தையெய்திநாளுலவாதாவி
பீடுறநல்கென்றோதப்பிரமகனளிப்பவின்னோர்
மாடுறுகும்பகன்னற்குயாவரம்வழங்கவென்றார். (௩௯)

என்னலுமரக்கனுவில்வாணியையேவியெந்தை
மின்னுவேறகும்பகனனவரமொன்றுவேண்டுகென்ன
மன்னுநித்திரைதாவென்றுமருண்டவன்கேட்பநல்கிப்
பொன்னவிர்கமலப்புத்தேள்தன்னுலகநணிறபுக்கான். (௪௦)

ஊழ்வினைப்பயத்தான்மாந்தாக்கொழியாநலவரங்கள்பெற்றுப்
பாழியம்புயத்தாமற்றோபடர்வனதெய்துமேல்வைச்
சூழ்சுடர்ப்படரிதியொளவாட்சமாலிதனைமைந்தரோடும்
வாழியென்றேத்தியன்னோர்த்தழீஇயிவைவழங்கலுற்றான். (௪௧)

கொடிமதிலிலங்கைமூதூர்கொள்கெனமறுத்தல்கேட்டாங்
குடல்சினவுருமேறன்னபிரகதனுருத்துநோக்கி
யடல்கெழுமவுணர்தம்மைததுணைவனொன்றெணாதன்றோ
மிடைதருதறக்கம்வின்றோவிரகினிறகொணடிலாரோ. (௪௨)

ஆதலாற்கோடியென்னுமருட்பிரகதன்றன்னை
மேதகுகுபேரன்பாறபோயினிதினில்வேண்டுகென்ன
வீதுசென்றியமபலோடுமியக்கர்கோன்றந்தைபாறபோய்த்
தூதினுற்றசக்கிரீபன்சொனனவையாவுஞ்சொனனான். (௪௩)

அளகைமாநகரினீபோயயர்தியவ்விலங்கைதன்னைத்
தளையவிழலங்கற்றிண்டோட்டசக்கிரீபற்குநல்கென்
றுளமகிழ்தந்தைகூறவுவப்பொடுமளித்துப்போனான்
வளமிகுமிலங்கைதன்னின்முடிகவித்தரககன்வாழ்ந்தான். (௪௪)

மின்னுமாக்காலகேயன்விழைவொடும்வதுவையாற்றத்
தனனுடைத்தங்கையாஞ்சூர்ப்பநகையைத்தயாவினல்கி
மன்னியகானினவேட்டமாடலுமயனுடெய்துங்
கன்னலங்குதலைச்செய்வாய்க்கனனியைக்கண்டுசொல்வான். (௪௫)

ஈங்குநீயாரையென்னமயனென்போனேமையென்னும்
பூங்குழலணங்கைப்புல்லிப்பொருவில்துந்துபிமாயாவி
யாங்குலமைந்தரோடுமம்பலைத்தகன்றவாட்கட்
கோங்கிளமுலைசேரிநதக்கோதையையினிதினீனறேன். (௪௬)

மேயநீயாரையென்னவிச்சிரவாமுன்னின்ற
நேயநன்மைந்தனென்றுநிகழ்ந்ததுமயனன்போடு
காயெரிசான்றாய்மந்தோதரிதனைக்களிப்பினல்கிப்
பாய்கதிர்ப்பரிதிவேலுமபரிவுடனளித்துப்போனான். (௪௭)

முருக்கிதழ்பூந்தமரன்முகிழ்முலைக்கன்னியோடு
மாசகர்கோனிலங்கையெய்தியன்புடனிருக்குநாளின்
விளாச்செழுந்தெரியன்மார்பன்விரோசனனினிதினின்ற
திருக்கொளவச்சிரசுவாலைதனைக்கும்பகன்னன்சேர்ந்தான். (௪௮)

ஆடல்வெறசயூடணன்பினளித்தருள்சாமைதன்னை
வீடணன்விதியின்வேட்டுமேதகவொழுகுநாளி
லேடவிழ்கூந்தன்மந்தோதரியிகலிலங்கைவேந்தன்
பீடுறுமகிழ்ச்சியெய்தவிராவணிதன்னைப்பெற்றாள். (௪௯)

கனைகுரல்முகிலினார்த்தார்க்கலுழ்தலான்மேகநாத
னெனுமுயர்நாமமபெற்றங்கெரியெனவளருநாளில்
வனைகழலரக்கர்கோனைமன்பகைதவருத்தலென்றாத்
துனைவினிலளகைவேந்தன்றூதனையுய்த்தல்செய்தான். (௫0)

தூதுவனரக்கன்முன்போய்நின்னுடைத்துணைவன்வெய்ய
மாதவம்புரிந்துதிங்கட்கண்ணனிசேர்வரதனோடு
மேதமில்நண்புபூண்டானின்னையுமுலகுக்கெல்லாந்
தீதினைழித்தருளவென்றாற்செபபினனென்னலோடும். (௫௧)

வெஞ்சமமென்னில்வெய்யவிரிதழற்பிழம்புகக்கி
நஞ்சுகொப்புளிக்கும்வாயவாட்டடற்றீஇநாமவேலான்
றஞ்சலில்விடையாரோடுந்தோழமைகொண்டானென்னி
லஞ்சுவன்கொல்லோவென்றவன்றலைதுணித்துவீழ்த்தான். (௫௨)

வீழ்த்தவனுடலைவெய்யவரக்கர்க்குவிருந்துநல்கிக்
காழ்த்தவெமமனத்துப்பேழ்வாயக்கதழ்சினத்தரக்கர்கோமான்
சூழ்த்ததன்சேனையோடுமமைச்சொடுந்துனைவின்வினோர்
வாழ்த்திடுமளகைமூதூர்மருங்குறவளைந்துகொண்டான். (௫௩)

கொடிமதில்வாயிலோனைக்கொன்றுவாளரக்கர்கோமான்
முடிதகர்ந்தொதுங்கவெய்யமாணிபத்திரனைமோதி
யுடல்சினக்குபேரனையுமுலந்திடவடிதகுவீழ்த்திச்
சுடர்செய்புட்பகவிமானந்துனைவினிற்கவர்ந்துபோனான். (௫௪)

இருநிதியியக்கர்வேந்தன்றுயரொழிந்திமைப்பினெய்தி
விரிகதிரிமைக்கும்பைம்பொனளகையின்மேவவெய்யோன்
பொருவருங்கிரியினீங்கிச்சரவணம்புகுதுமேல்வைத்
தெருளொடும்விமானநிறபவரக்கர்கோன்சிந்தைசெய்தான். (௫௫)

இத்தலையெய்தலெந்தையிறைவியோடமர்ந்தானென்ன
மைத்தகுமிடற்றுநந்திவிலக்கவாண்முகத்தைநோக்கிக்
கைத்தலம்புடைத்துவெய்யோனகுதலுங்கனன்றுநந்தி
துய்த்தலைகுரங்காகவென்சீர்நொலைகவென்றருத்தனைசான். (௫௬)

வைதலுந்தசக்கிரீபன்வான்றொடர்கயிலைவெற்பை
வெய்தினிலெடுப்பவெந்தைவிரற்றலைநுனியாலூன்றப்
பையுளுற்றழுதுமாழ்கிப்பரமனைப்பழிச்சிவெய்யோ
னைதுணர்சாமகானமறிவொடுபாடலுற்றான். (௫௭)

ஆயிரம்பருவமிவ்வாறழுதலாலரக்கர்கோனுக்
கேய்வுறவியம்புநாமமிராவணனென்றுகூறி
மாய்வறுவரமுநல்கிவிடுப்பவாளரக்கன்போந்து
மீயுயரிமையவெற்பின்மேவியோரணங்கைக்கண்டான். (௫௮)

கண்டுநீயாரையென்னவந்தணன்களிப்பினோடு
மண்டரோத்தெடுப்பவீன்றவருட்குசத்துவசனென்போ
னெண்டகுவேதமோதும்வாக்கிடைப்பிறந்தேனென்னைத்
தண்டலின்மறையோன்வேதவதியெனச்சாற்றினாலை. (௫௯)

சொல்லருந்தந்தைதன்னைத்தோன்றியோரரக்கன்கொன்றான்
முல்லைசால்கற்பினன்னைமுனிவொடுமுடிந்தாள்யானுங்
கல்லெனீர்வேலைநாப்பட்கண்டுயினெடியோன்றனைனப்
புல்லுவான்றவஞ்செய்கின்றேன்புலவுவேலரக்கவென்றாள். (௬0)

என்றலும்வலிதின்வெய்யோன்பற்றுமீர்ங்குழலைநங்கை
தன்றுணைக்கையாலிக்கிக்கிளையொடுஞ்சாம்பராகிப்
பொன்றிடவுன்னையெய்தும்பிறப்பினிற்புரிவேனென்னக்
கன்றியவுளத்தினோடுங்கனலின்வீழ்ந்தாவிமாய்ந்தாள். (௬௧)

கோற்றொடியிறந்தபின்னர்க்கொல்புலியனையவீரன்
போற்றருமருத்துவப்பேர்ப்புரவலன்சாலைநண்ண
வீற்றுவீற்றாகவிண்ணோர்பறவையின்வெருவிப்போக
வேற்றமர்க்கெழுதியென்னமருத்துவனெழுந்துவந்தான். (௬௨)

வெஞ்சினமொழிதியென்னமுனிவரார்விலக்கமன்ன
னெஞ்சலில்சாலையெய்தவிராவணனிகழ்ந்துபோனா
னுஞ்சவானவர்கண்மீட்டுமுயர்மகமுடித்துக்காக்கை
யஞ்சிறையன்னமஞ்ஞைக்கருள்வரமளித்துப்போனார். (௬௩)

காதியையமயனைவெம்போர்கருதுநற்சந்தன்றன்னைத்
தீதுறவரக்கன்வென்றுதிரைகடற்றனைசூழத்
தூதுணம்புறவுவைகுந்துகிற்கொடிமாடத்துச்சி
யாதவன்றடந்தேர்தேய்க்குமயோத்திமாநகரஞ்சேர்ந்தான். (௬௪)

தரவுகொச்சகக்கலிப்பா.

அனரண்ணியன்போர்வேண்டியவரக்கன்முனமெய்திச்
சினவெங்கணைபொழியத்தனிதேர்நின்றுமிழ்ந்தே
பனையொத்திடுகையால்நனியடிப்பப்பதைபதையா
நினைவற்றயர்தலும்வெய்யவனிருபன்றனைநக்கான். (௬௫)

மன்னர்க்கியல்படுபோரிடைமடிதல்வயங்கோட
லென்னத்தனியெண்ணாதெனையெள்ளிச்சிரித்தமையாற்
றுன்னுற்றவென்மரபினொருதோன்றல்நனிதோன்றி
யுன்னைச்செகுத்திடுவானெனவைதாருயிரொழிந்தான். (௬௬)

ஆற்றலொடுங்கொடியோன்பிலமடையப்புகுமேல்வைத்
தோற்றுமிசைபயில்மாமுனியரக்கன்முனந்தோன்றிச்
சாற்றும்பிலவழியன்றிதுதழல்கால்வடிவேலோய்
கூற்றின்னகர்க்கேகும்வழியீதெனறுகுறித்தான். (௬௭)

என்றுமுனிகூற்றோடுமிவ்வுரைகூறினனேகப்
பைந்நாகரோடமர்செய்குதல்பணிவெங்கடல்நடைதல்
பின்னாகுமென்றடல்கூர்தருபிறைவாளெயிற்றரக்கன்
றென்னந்திசைசென்றூர்கழனமனோடமர்செய்தான். (௬௮)

காற்றின்கணைவெய்யோன்கணைகனலின்கணைகொல்லுங்
கூற்றின்கணைமுதலாகியகணையைச்சிலைகோலி
மாற்றிச்சமர்புரிவேலையிலஞ்சித்திறன்மறலி
யேற்றம்பிறிதில்லாதுயர்யமதண்டமெடுத்தான். (௬௯)

அக்காலையின்மலரோனவணெய்தாவடலரக்கன்
மிக்கானவரத்தான்றுவிடலென்றுவிலக்க
மைக்கார்நிறக்கூற்றும்வெருவோடும்மறைந்தோடப்
புக்கானிலங்கையின்மீட்டுமெப்புலிப்போத்தனவரக்கன். (௭௦)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

துணிகதிர்நெடுவேலிராவணன்பிலத்திற்றுன்னிவாருரகரைத்துரந்து
மணிமதினகரில்வைகிடுநிவாதகவசரைவாளமரேற்ப
வணிகிளர்கமலத்தயனவணெய்தியாங்கவற்கிராவணனோடு
மிணையறுநட்புச்செய்தலுமவனுங்கொன்றொழிதிக்கணுற்றிருந்தான். (௭௧)

விரைவினன்னகரநீங்குழிக்காலகேயரில்வித்தியுச்சிகுவன்
செருவினிலேற்பவவனுயர்தொலைத்துத்தேனுவைக்கண்டடிபோற்றி
வருணனூர்புகுந்துமைந்தரைவென்றுவனப்புடைமாதரைக்கவர்ந்து
பொருவருமிலங்கைபுகுந்தசூர்ப்பநகைதனைக்கரனூர்புகுத்தினனால். (௭௨)

அருவரைத்தடந்தோளிராவணியென்போனந்தணனருளினால்டர்க்குஞ்
செருவினிலெவர்க்குந்தெரிவுறுதொளித்துச்செருச்செயுமாயையுமொன்றோர்
வெருவரவெஞ்சூர்க்கிரிதருதேருநிகும்பலைவேள்வியிற்பெற்று
மருவினனவனோடிலங்கையிற்புகுதவீடணன்வணங்கியாங்குரைப்பான். (௭௩)

வெருவரலின்றிமதுவெனவுரைக்கும்வெந்திறலவுணனீண்டெய்திப்
பொருவருங்கும்பீநசியினைக்கவர்ந்தானென்றலுமிராவணன்புழுங்கி
யுரைபெறுதானைகடலெனச்சூழக்குரோணிநாலாயிரத்தோடு
மருவலுங்கும்பீநசிபிரந்துரைப்பமதுவொடுமரக்கர்கோனட்டான். (௭௪)

பாழியந்தடந்தோண்மதுவொடுஞ்சூழ்ந்தபலகிளைப்பரப்பொடுமரக்கன்
மாழைமென்னோக்கிப்புலோமசைகணவன்மாநகர்தனதடிப்படுத்து
வீழியங்கனிவாயியக்கியரமரர்கின்னரர்மிதுனம்வீற்றிருக்குஞ்
சூழ்சுடர்ப்பரிதிபோக்கறநிவந்தகயிலையிற்றுனைவின்வந்தடைந்தான். (எரு)

கள்ளூற்றிருக்குநறுமலர்ப்பைங்காவினரக்கனிறுத்திடலும்
பிள்ளைத்தென்றனறவுயிர்த்துப்பிரிந்தாருயிர்மேற்றனிநடப்ப
வெள்ளிவீழின்கதிர்பரப்பிவிழைவோர்ப்பிரிந்தோராருயிரை
யள்ளியுண்ணுந்திங்களொடுமடைந்ததந்தியிருண்மாலை. (எசு)

குணக்கும்விசும்புமுகம்விளர்ப்பக்குளிர்க்குந்திங்கட்கொழுந்தன்பர்த்
தணக்கும்மகளிர்மார்பணைத்துங்கவாந்துதரளவடந்தாங்கி
யணக்குமுலைமேற்றீயிறைக்குமாலைப்பொழுதிலடலரக்கன்
வணக்குமருங்குல்மடவார்தங்காமமெண்ணிவருந்தினன். (எஎ)

குடபாற்பிறந்தகுழந்தைமதிக்கொழுந்திற்பொழிபுனிலாக்கற்றை
வடவாமுகம்போலுடலவெதுப்பமம்மரோடுமடலரக்கன்
கடல்வாய்த்தோன்றியமுதுயிர்க்குங்கதிர்வெண்முத்தவடம்பொரியா
வுடலுஞ்சிலைவேள்வன்மையினைவியந்துவருந்தியுறைபோழ்தின். (எஅ)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

விளிம்புறத்தூக்குசெஞ்சுடர்க்கற்றைமேகலைமருங்குடனிமைப்ப
விளம்பிறைவடர்தாழ்ந்தேர்குடியிருந்தவிளமுலைவெற்பினைத்தாங்கித்
தளர்ந்திடுமிடைக்குநூசுப்பெனவிரங்கித்தவளவாய்க்கிண்கிணிபுலம்ப
வளர்ந்தறிவரியகருங்குழன்மீதிலஞ்சிறைத்தும்பிபாட்டயர. (எகூ)

கண்கவர்வனப்பிற்கதிர்சுரர்தொழுநக்கடல்வயிற்றரிந்தவாணமுத்த
வெண்கதிர்முறுவலினோராருயிரைவேரொடுமகழ்ந்தொளிபரப்ப
விண்குடிவாங்கமேக்குயர்ந்தோங்குவெம்முலைபுலசெலாநகவரப்
பண்கனிந்தொழுகுமென்மொழிக்குதலைபாகொடுந்தோழமைகொள்ள. (அ0)

காவியுங்குமிழுங்கடந்தெறிதடங்கண்கடியகூற்றினைமுதலமா
ராவியுண்டுமிழ்ந்துசெவ்வரியொழுங்கியயிலொடுந்தோழமைகொள்ள
வேலினைமுனிந்துகொலைத்தொழில்பழுத்துத்தவக்குறும்பொன்றறவெறிந்து
மாவகிர்மருட்டிமதர்வைகொப்புளித்துவள்ளைவார்குழையிசைநடப்ப. (அக)

கரையெறிகடல்வாய்க்குளித்தமுத்திமைக்குங்காஞ்சிசூழ்கலைவளரல்கு
லுருவமேகலையினிவப்புறக்கைம்பாயுபர்திசைமுழுவதுங்கவாத
திருவனீள்புருவக்கொடிமதன்பிடித்தசிலையெனவழகுகணைபடுப்ப
விரியிருள்பருகுசேட்டிளமதியின்விழுத்தகுவாணுதலிலங்க. (அஉ)

கலிவிருத்தம்.

வன்னமுலைமாதரடியீடுதனிவாழ்த்தப்
பொன்னசலமொத்ததுவளர்பூணமுலைசுமந்தே
மின்னிடைவருந்துமெனமேகலையிரங்க
வன்னமெனுமென்னடையரம்பையவண்வந்தாள். (அங)

வந்திடுமரம்பையையிராவணன்மகிழ்ந்து
பைந்தளிர்மருட்டியபதத்துணைபிடித்துச்
செந்துவரிதழ்க்கனிதிருந்தகவளித்தே
யுந்திடவெனைத்தனிபுரக்கெனவுரைத்தான். (௮௪)

என்னலுநின்முன்னவனிதிக்கிழவனின்ற
மன்னனளகாபுரனெனைத்தனிவரித்தா
னுன்றுடன்மணப்பதுதகாதெனவுரைத்துக்
கன்னல்புளிதரென்னநனிகட்டுரைபுகன்றாள். (௮௫)

நில்லென்கிளிக்கிளவிகேட்டருளில்தீயோ
னல்குல்பகர்வோர்க்குமுறையோவெனவுரைத்தே
வல்லையினடர்ந்துவலிதிறறணிபிடித்துப்
புல்லியமுதனனமபில்போகநனிதுய்த்தான். (௮௬)

ஆங்கவன்விடுத்திடலுமாரமுதமன்ன
கோங்கமுலைமாதுநளகூபரனைநணணி
யீங்கிதுவிளம்பவவனின்னுமிதுபோலுந்
தீங்குசெயின்வன்றலைதெறிக்கவெனவைதான். (௮௭)

ஐயகமலப்பொதியவிழ்ப்பவரிமான்றோ
வெய்யவனுதித்திடலும்வெங்கிறலரக்கனெ
மொய்யமருடற்றுபலதானையுடன்மொய்ப்ப
மையிலமராபதியில்வந்தனன்வலைந்தான். (௮௮)

இந்திரன்முகுந்தனுழையெய்தியிவைகூற
வெர்திறலரக்கனுயிர்வீட்டிவிடுகாலம்
வந்திடுவனீணடுறல்தகாதெனமறுப்ப
வந்திலுயர்வானவரருஞ்சமரினுற்றார். (௮௯)

அறுசீரடியாசிரியவிருத்தம்

விண்ணவர்கடலந்தானைவெருக்கொடுமுறியவெற்றி
யண்ணலருந்தமாலிவெமபோாபுரிதலுமழன்றுசீறி
நண்ணியவசுக்கடமயினவையிலசாவிததிரட்பேர்ப
பண்ணவனவன்றனுவிகளையியினுற்படுத்திட்டானே. (௯௦)

*அள்ளிலைவயிரப்பைம்பூணிராவணனழன்றுசீறிக
கொள்ளைவெம்பகழிவாங்கிமலையினைகுரிஇமொபதுதென்னை
வெள்ளைமால்யானைமேலும்விண்ணவர்க்கிறைவன்மேலு
மெள்ளிடவிடமின்றென்னச்சிலைதுழைத்தெய்திட்டானே. (௯௧)

இந்திரன்வருணன்காற்றுக்கிறைவன்வெங்கூற்றமங்கி
நந்தலிலளகைவேந்தனுமவேனிருதிதண்ணென்
சந்திரமவுலியன்னோர்மருத்துவத்தலைவர்தாக்கி
வெந்திறலரக்கர்கோனைவளைந்துவெம்புசலசெய்தார். (௯௨)

தாப்புலியனையசீற்றச்சயந்தனைமேகநாதன்
யாப்புறுத்திடுதற்கெய்தவிசையவுலோமனபோந்து
காப்பனென்றெடுத்துப்போகிக்கடலிடையொளிப்பவெய்யோய்
பாப்பணைப்பள்ளியான்றன்முன்னவன்பால்வந்துற்றான். (௯௩)

வச்சிரப்படையால்வெய்யவரக்களைமறியமாட்டிக்
கச்சையங்களிற்றிற்றோன்றுங்கதிர்முடியமரர்கோனை
நச்சரவணியும்புத்தேள்நல்கியமாலையதனால்
விச்சையின்மேகநாதன்யாப்புறுத்திரனைச்செய்வான். (௯௪)

இந்திரன்றன்னைவவ்வியிராவணியிகலினேறு
வந்தமிமையோர்யாருமமர்தொலைத்தோடமோதித்
தாதைமுன்னுய்ப்பவெய்யோன்றனையகட்டவிற்றேறு
மெந்திரப்பொறிசேர்நுஞ்சியிலங்கையில்வந்துசார்ந்தான். (௯௫)

இன்னவையமரர்கூறவிர்ங்கமலத்தின்மேய
முன்னவனிலங்கையெய்தமுகமனைச்செய்யாப்பியின்றோர
மன்னனைவிடுநியென்னப்பிருப்பமைமகத்திறற்றோன்றும்
பொன்னெடுந்தேரினெய்திப்பொன்றிடாவரமலகென்றான். (௯௬)

அவ்வரமலரோனல்கியருளினிந்திரனைவிட்டுச்
செவ்விசேரரக்கருமமிந்திரசித்தென்றோதி
யெவ்வெலாத்திசையும்போற்றுமிந்திரனையர்ச்சிபு
மௌவலங்கரியகூந்தல்வாணிதனகேள்வன்சொல்வான். (௯௭)

ஆள்வலிக்கறுக்கும்வேற்ற கலிங்கமுலையிற்றோய்ந்த
நீளிரும்பாவந்தன்றனைவிற் துயருழந்தாய்நு
வேள்வியொன்றியற்றிற்றீருமென்றலும்வேள்வியாற்றி
வாளொளித்துறக்கம்புககான்மலரயன்மறைந்துபோனான். (௯௮)

என்றருமுனிவன்கூறவிராமனுங்கெம்பலுற்றான்
குன்றினையெடுத்ததிணைடோளிராவணனென்குறுகும்போரில்
வென்றதையன்றித்தோற்றதுமாடொனில்விளம்புகென்னத்
தென்றமிழ்கோத்தசெஞ்சொலமுனிவரன்செப்பலுற்றான். (௯௯)

பொன்வரைவிழுதுவிட்டாலன்னதோர்பொற்புவாய்ந்த
மன்றுமாயிரங்கையோடும்வாளமர்க்களத்தினெய்துந்
துன்றுபோரருச்சுனன்றன்றூழலினிராவணப்பேர்
மன்னவனெய்தியன்றேறகாண்கலான்வல்லைமீண்டான். (௧00)

நருமதையாற்றினூடிவெண்மணற்குன்றினன்றி
னாறுடைப்பூசையாற்றியிராவணனமருமெல்லை
மருவுமாயிரம்பொற்கையால்வரநதிதடுத்துவேர்தன்
பொருவருமகளிரோடும்பூம்புனலாடலுற்றான். (௧0௧)

குடபுலத்தெதிர்ந்துதெண்ணீர்வருதலுமரக்கர்கோமா
னடுதிறற்சுகனைக்கண்ணாலறிகெனத்தூண்டவன்றான்
மிடலுடையருச்சுனப்பேர்வீரியன்கரத்தாலாற்றை
யடலொடுதடுத்துநீராட்டயரவெதிர்ந்ததென்றான். (௧0௨)

சீற்றமுந்தானும்வேறுதெரிகலாவரக்கன்சீறி
யேற்றலுமருச்சுனப்பேரோன்றனீர்குடைந்துமூழ்குங்
கோற்றொடியவரையஞ்சலென்றுவெங்குருதிவெள்ளா
மூற்றிருந்தொழுகும்வெய்யகதையொடுமுருத்துவந்தான். (௧0௩)

வருதலுமரக்கர்கோமான்வாய்மடித்தெயிறுதின்றுங
கிருபதுகரத்தினாலுமெறிந்தொருகதையாலெற்றக்
கருதலர்ச்செகுக்குங்கார்த்தவீரியன்கதையாற்றள்ள
வருவரைவீழ்ந்ததென்னவஞ்சுவிற்கிடைபோய்வீழ்ந்தான். (௧0௪)

வீழ்ந்தவாளரக்கன்றன்னைவிரைவினியாப்புறுத்திமன்னன்
றாழ்ந்துதன்சேனைவாழ்த்தத்தன்னகர்புகுதுமெல்லை
யாழ்ந்தநூற்கேள்விமிக்கபுலத்தியனரசற்போற்றி
வாழ்த்திடுகென்றுவெய்யோன்வன்சிறைநீக்கினானே. (௧0௫)

தளர்வொடுமிலங்கையெய்தித்தன்கிளைப்பரப்பினோடு
மளிமுரல்தாமமார்பன்சிலபகலமர்ந்தபின்னர்க்
களியொடும்வெம்போர்வேட்டுக்கருமுகிலனையகளிறுபோலக்
கிளரொளிமாடஞ்சூழ்ந்தகிட்கிந்தைநகரியுற்றான். (௧0௬)

வாளமர்வேட்டுவந்தேன்வாலியெங்குளனென்றுவென்ன
வாளரியேறுபோலுமிராவணனறையத்தாரை
நீள்கடனான்குமெய்திநீறணிகடவுள்செய்ய
தாளிணைவணங்கப்போனான்வல்லையேற்சாதியென்றாள். (௧0௭)

என்றலுமரக்கன்றென்பாற்கடலினிலிமைப்பினெய்தி
வன்றிறல்வாலிபின்போயப்பற்றலுமறங்கொள்வாலி
குன்றனானறன்னைவாகுமூலத்திறுகவுறச்சேர்த்தித்
துன்றுநாற்கடலுந்தாவித்திசைச்சூழல்சேர்ந்தான். (௧0௮)

அவ்வழியரக்கர்கோனைவிடுத்தரியானையென்னச்
செவ்விதின்முகங்கள்பத்துங்கோட்டினானெடியோ
னெவ்வெலாத்திசையும்வென்றவிராவணனெனபேனுன்றனை
கவ்வையில்தோழனென்னவெரிகரியாகச்சொன்னான். (௧0௯)

ஆங்கதன்றோதிங்கள்வைகியடல்புனையரக்கர்கோமான்
வீங்குநீர்வேலைசூழ்ந்தவெண்மதிநெற்றிதோயு
மோங்குயரிஞ்சிமுற்றியொள்ளொளிமாடமோர்ந்த
தீங்கெறியிலங்கைமூதூர்சேர்ந்தினிதிருந்தானென்றான். (௧௧0)

பாரினில்விசும்பினின்டபாதலத்திணையில்லாத
மாருதியிருப்பவாலிக்கிரவிசேயஞ்சிமாழ்கிக்
கார்வரையிடங்கரோறுமொளித்ததெனகழறுசென்று
சீர்கெழுமிராமன்கேட்பத்தென்றமிழ்முனிவன்சொல்வான். (௧௧௧)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

கேசரியென்னுங்கவிக்குலக்கிறைவன்மனைவியாங்கிடைபுரைசெவ்வா
யாசறுவனப்பினஞ்சனைவயிற்றின்வளிகசவதரித்தவஞ்ஞான்றே
மாசறுகனியென்றிரவியையாகுலவவ்வுழிப்பாய்தலுமிராகு
தேசுறுமகவாற்குரைப்பநாற்கோட்டுத்திக்கயமூர்ந்தவனடைந்தான். (௧௧௨)

இந்திரனடவும்பகட்டின்மேற்றுவவெரியுமிழ்வச்சிரப்படையால்
நந்தலின்றெய்தநாகிளங்கவியின்கொடிற்றின்மேறழுக்கலுமிறப்ப
மைந்தன்வீந்தமையாலுலைவவந்தெய்திவளியிபங்காமலெவ்வுயிரு
மெந்திரப்பொறிபோனின்றிடவியற்றமலரயனுங்கண்வந்திறுத்தான். (௧௧௩)

கையினூற்கமலப்பொருட்டுறைகடவுளிவனுங்காற்றினாருசிறுவ
னுய்ந்திடபரவவச்சிரப்படையோனனுமனென்றொருபெயர்பகர
வைதுணரீசன்முதலியதேவரனைவருந்தத்தமபடையால்
மெய்யினிலூறுபடாவரத்தோடுமவீந்திடாவாயுளுமளித்தார். (௧௧௪)

கஞ்சனைமுதலதேவர்கண்மறையககாற்றிறைகையினூறழுங்கி
யஞ்சனைகையிறகொடுத்தனனகலவனுமனவ்வரத்தினன்முனிவ
ரொஞ்சுமாறியற்றவன்னவரிராமனிணையடிசேர்ந்திடுமளவுஞ்
செஞ்செவேதனதுவலியினையறியாதிருகெனச்சிறினாசபித்தார். (௧௧௫)

திறல்புனையிருக்கரசசெனவுரைக்குந்திதறுகவிக்குலவேந்த
னறனுடைவடபான்மகவிராந்தடத்தினண்ணனுமணங்குருவெய்த
மறனுடைமகவான்முன்னரும்பினனரிரவியுமணைத்தலாலன்றேனை
விறல்கெழுவாலிதன்னொடும்விளங்குசுக்கிரீபன்றனைப்பயந்தான். (௧௧௬)

தாமரைக்கிழவனருளினாற்பின்னூர்தன்னுருவெய்தியக்கவிவேந்
தேமுறநாளுஞ்சிறந்தகிட்கிந்தையெய்தியாருயிருலந்திடலும்
நாமவேல்வாலிதனைக்கவிக்கிறையாய்நன்முடிகவிப்பமற்றவனுங்
காமருதடந்தோளிரவிசேய்தன்னைக்கதழ்சினத்தொடுதுரந்தனனால். (௧௧௭)

ஆங்கவனமைச்சாமாருதிதனதுவலியினைமுனிவரரறைந்த
தீங்குறுசாபத்தாலுணராதிருந்தனனெனவிவைகூறி
வாங்குவிற்றடக்கையிராமனுக்காசிவழங்கிமாமுனிவரரோடு
நீங்கருந்தவத்துக்குறுமுனிநிகரில்பொதியவெற்படைந்தனனென்றுன். ௧௧௮

அகத்தியர் இராவணன்மரபுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆக செய்யுள் - ௨௪௨.

உ

பரமபதிதுணை.

# மகாபாரதம்.

காப்பு.

நீடாழியுலகத்துமறைநாலொடைந்தென்றுநிலைநிற்கவே
வாடாததவவாய்மைமுனிராசன்மாபாரதஞ்சொன்னநா
ளேடாகமாமேருவெற்பாகவங்கூரெழுத்தாணிதன்
கோடாகவெழுதும்பிரானைப்பணிந்தன்புகூர்வாமரோ.

## வீட்டுமபருவம்.

## மூன்றாம்போர்ச்சருக்கம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்,

தந்தமுறியிலவர்வைத்ததயிர்பால்வெண்ணெயெட்டாமற்
குந்தியுரலின்மிசையேறியிளங்கோவியர்முன்கூத்தாடி
நந்தன்மனையிலசோதையிருநயனங்களிப்பவிளையாடு
மைந்தனிருதாளொருநாளுமறவாதாரோபிறவாதார். (௧)

ஏலாவமரின்மூன்றாநாளிரண்டுபடையுந்திரண்டேறக்
காலார்திண்டேர்வீடுமனும்வகுத்தான்கடுங்காருடயூக
மேலாய்வென்றிப்பாண்டவர்தமவெஞ்சேனையைக்கொண்டெஞ்சாமற்
றேலாவர்த்தசந்திரப்பேர்வியூகம்வகுத்தான்றுளவோனே. (௨)

போரோதொடங்கியிருபடையும்புகுந்தபொழுதிலுகந்தொலைத்த
காரோதொடங்கிக்கார்கோள்வெங்கடுங்கால்கலிகொண்டார்ப்பனபோல்
வாரோதொடங்கும்பணைக்குலமுமணிக்காகளமுமுடன்முழங்கப்
பாரோதொடங்கியெவ்வுலகுமடைவேசெவிடுபட்டனவே. (௩)

சொல்லார்கேள்விக்கங்கைமகன்றுரோணன்முதலாமதிரதரு
மெல்லாரிரதகயதுரங்கமேலாளுடனேகாலாளும்
வில்லான்முன்னூட்டமைத்துரந்தவீரன்றனையுஞ்சிறுபதத்தே
மல்லால்வஞ்சமல்லடர்த்தமாயன்றனையும்வளைத்தாரே. (௪)

சூரர்க்கெல்லாமுதலெண்ணுந்துரியோதனனுந்தம்பியரு
மாரக்கவிகைக்காந்தாரர்முதலாவுள்ளவவனிபருஞ்
சேரத்திரண்டுகரிகளொருசிங்கம்வளைத்ததெனச்சிங்க
வீரத்துவசனின்றுழிப்போய்வளைத்தார்சமரம்விளைத்தாரே. (௫)

வரத்தான்மறையாற்றும்பெற்றவரிசாபங்கள்பிடித்ததனிக்
கரத்தான்மறைந்தவரவர்தங்கடைக்கண்படைக்கண்விரைந்துவிடுஞ்
சரத்தான்மறைந்தகல்வானந்தரணிதலமச்சரந்துணித்த
சிரத்தான்மறைந்ததுறுகுருதிச்சேற்றின்மறைந்ததிசைநான்கும். (௬)

துவசம்பிளந்துதேருருந்துரகம்பிளந்துசுடர்மணிப்பொற்
கவசம்பிளந்துமார்பகமும்பிளந்தூடுருவக்கடோற்கசன்ற
னவசந்திரமாமுனைவாளிதொடுத்தான்றொடுத்தநாழிகையி
னவசம்பிறந்துதம்பியர்முன்விழுந்தானொருவர்க்கழியாதோன். (௭)

நாகத்துவசமெனவுயர்த்தோனடுங்காமுன்னநண்ணலரை
மாகந்தனிற்சென்றமர்கடந்தவருமைத்துடையோன்றிருமைந்தன்
வேகம்படநின்றொருசமரவேலானீனடுமெய்வேந்தன்
பாகன்றனதுமருமத்திற்பாய்ந்தானவனுமாய்ந்தானே. (௮)

விழுந்தான்வேலாற்றேர்ப்பாகன்வெருசாயகத்தால்விறல்வேந்தா
தொழுந்தாளரசன்றனுமுயிர்சோர்ந்தானென்னுந்தொனிகேட்டுச்
செழுந்தார்வாகைவிசயனையுந்திருமாலையும்விட்டொருமுனையா
யெழுந்தான்மந்தாகினிமைந்தனிளைத்தோர்தமக்கோரெயில்போல்வான். (௯)

வண்டாரலங்கல்வலம்புரியோன்மார்பந்துளைத்தவாளிவழி
கண்டானெடுத்துத்தாழ்ந்ததிருக்கையாலணைத்துக்காற்றேரிற்
கொண்டானுவிதருமருந்துகொடுத்தானவனுங்கொடுத்தமருந்
துண்டானுண்டகணத்தினின்மீண்டுணர்ந்தானுலகேழுடையானே. (௰)

மன்னன்றனையச்சந்தனுவின்மைந்தன்பெரும்போரணிசிதறிப்
பொன்னங்குன்றேயிவன்சிலையுமிவனேகாணும்புராரியென
மின்னுங்கழறகால்வீமனுடனவெம்போர்விளைத்துவிடலையராய
முன்னின்றவரும்பின்னிடத்தன்முனைவாளியினால்வினைசெய்தான். (௧௧)

மருமங்களினும்புயங்களினும்வதனங்களினுங்கண்களினுஞ்
செருமும்படிவெங்கணைமாரிசொரிந்திச்செந்திச்சிரந்துணித்து
தருமன்சேனைப்பரவையெலாந்தானேயாகித்தலைநாளிற்
பொருமந்தரமால்வரைபோலத்திரிந்தான்வெம்போர்புரிந்தானே. (௧௨)

மலையொத்ததிருங்கடகளிறுமயமாவணியுமான்றேரும்
தொலையத்தொலையயாவரையுஞ்சுடுவெங்கணையாறறுநூறாந்
தலையத்தரங்கமெறிகடல்வாய்வடவாநலமபோலவணின்ற
நிலையைக்கண்டுங்காணான்போனினைந்தான்விசயனிகரில்லான். (௧௩)

இதுவுமது.

கானெரிதுற்றெனவீடுமனிப்படிகாதிமலைந்திடவு
மானநினைத்திலைசாபமெடுத்திலைவாளிதொடுத்திலைநீ
யேனிதுனக்கெனமாயனுரைத்தவனேறிரதத்திழியா
வானதெனக்கினியாகவெனத்தனியாழியெடுத்தனனே. (௧௪)

ஆழியெடுத்தனன்வீமெனைப்பொருதாவியழித்திடுவா
னூழிமுகக்கனல்போலெழுமப்பொழுதோடியருச்சுனனுந்
தாழிதனக்குமுன்வீடுகொடுத்தருடாளிணையைப்பிடியா
வாழியுனக்கிவன்றோவெதிர்விதகமாயவெனத்தொழுதான். (௧௫)

வாசவன்முற்பெறுகாளைதொழுதகொழுமாறுபடச்சினவுங்
கேசவனிப்படிமேல்வருநிறபதுகேவலமுற்றுணரா
நாசநமக்குறுகாலநணித்தெனநாடிநடுக்கமுடன்
றேசணிபொற்றடமேருவெனத்திரிதேரினைவிட்டிழியா. (௧௬)

ஆரணகற்பிதமாதவவச்சுதவாழியிடைத்துயிலுங்
காரணசிற்குணரூபமலர்க்கொடிகாதன்மனத்துறையு
நாரணவற்புதவானவருக்கொருநாயகநிற்பணியும்
வாரணமுந்நதிவிசாலதலத்திடைவாழ்வுறவைத்தவனே. (௧௭)

ஆவியழித்தனைதூணிறுதிக்கடலாடகனைத்தலைநாண்
மாவலியைச்சிறுமாணுருவத்துடன்வார்சிறைவைத்தனையா
லேவிலரக்கனைவீழவடர்த்தனையாரெரிலகசெனவோ
நீவலியிற்சினமூளுமனத்தொடுநேமியெடுத்ததுவே. (௧௮)

யானரசிற்புகுதாமலெனக்குயர்வாழ்வலகைத்தருவா
னிநினைவுறறதுபோனபிறப்பிலெனின்றுதவப்பயனே
யானுமினிப்பிறவாமலளித்தருளீசவெனப்பரவா
ஞானமனத்தொடுகோகுழறப்பலநாடியுரைத்தனனே. (௧௯)

ஆரியனப்பொழுதாற்றினனிறையுமாடலருச்சனைநாந்
தாரைவடிக்கணையாயிரமுய்ப்பதொர்சாபமெனைத்தெதிரா
யாரெதிர்கிற்பினும்யாவர்தடுப்பினும்யானினியிப்பகலே
சேரமுருக்குவனேறுகெனத்தனதேர்மிசைபுக்கனனே. (௨0)

நீறுபடுத்தினன்மாமருடத்திரணீணிலவைப்படையச்
சேறுபடுத்தினன்முனைகளிற்றிசைசோருக்குபுனலா
லாறுபடுத்தினனோரொருவர்கடெதிராயிரமவைக்கணையா
லீறுபடுத்தினனீடுமன்விட்டவர்யாவர்பிழைத்தவரோ. (௨௧)

வாயுவடிக்கணைவாசவன்வைக்கணைவாருணமெய்க்கணைசெந்
தீயின்வடிக்கணைதேவர்சுடர்க்கணைசேரவிடுத்தமையா
லாயமுனைப்படுதேரணிபட்டனவாளணிபட்டனவெங்
காய்கரிபட்டனபாய்பரிபட்டனகாவலர்பட்டனரோ. (௨௨)

நாடியொளித்தனர்சூழ்புனன்மத்திரநாடன்முதற்பலருங்
கூடியொளித்தனர்மாரதரிற்றிறல்கூருமவயப்படையோ
ரோடியொளித்தனராடமரிற்றுரியோதனனுக்கிளையோர்
வாடியொளித்தனர்மாகதரொட்டியர்மாளவர்குச்சரரோ. (௨௩)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

பார்த்தனம்பினான்மேவலார்படைப்பரவைசாயவேவிரவுகோவியர்
தூர்த்தனன்புடன்கண்டுவந்துதன்றேர்க்கசேனையின்பக்கமெய்தினன்
சேர்த்தவெம்பனைக்கொடிமகிபனும்வில்விரோதனுஞ்செல்வமைந்தனுங்
காத்துநின்றதுங்காவலன்றனைக்கொண்டுபாசறைகடிதினெய்தினார். (௨௪)

வெஞ்சரத்தினால்விசயன்வென்றபோர்மிகுகளத்தின்வாய்விசையொடற்றன
குஞ்சரத்தின்வீழ்கைகளுகமேகுருதிவட்டமும்பரிதிவட்டமே
பஞ்சரத்தொடுந்திரியுமானையின்பக்கமெங்கணும்பட்டுமூழ்கிய
செஞ்சரத்தின்மேற்சிறகர்பண்டுவச்சிரமரிந்திடுஞ்சிறகர்மானுமே. (௨௫)

கொற்றமன்னர்சென்னியினணிந்தபொற்கோளம்யாவையுந்தாளமாகவே
யற்றைவெஞ்சமத்தடலருச்சுனனாண்மைபாடிநின்றலகையாடுமான்
முற்றவெம்பிணக்குவையும்வேழமுமுடிசுவாசியுந்தேருமொய்ம்புறத்
தற்றகுன்றெனவொன்றுபட்டெழச்சொரியுமூளையாறருவியொக்குமே. ௨௬

பமரமும்மதக்கரிவிலாவின்வேல்பட்டவாய்நிணம்பறியநிற்பன
குமரன்வேலின்வாயன்னமூர்தருங்கோடுடைத்தடங்குன்றமொக்குமா
லமரர்கோன்மகன்செங்கையம்பினாலற்றவீரர்தந்தலைகள்கவ்வியச்
சமரபூமிசேர்ஞாளிமானுடத்தலைவிலங்கினிறறன்மைசாலுமே. (௨௭)

அன்றுவெஞ்சரத்தொடுதறிந்தவாளரசர்சோரிமெய்ப்பட்டதாதலிற [கிறு
சென்றுசெங்கதிர்ச்செல்வன் வாருணத்திசையடைந்து வெண்டிரையின்மூழ்
னின்றருச்சுனன்பொரமறந்ததுநெடியசெங்கண்மானேமிதொட்டதும்
பின்றையில்லெடுத்தமர்மலைந்ததுமபேசினான்மகீபதிபிதாமகன். (௨௮)

தருமன்மாபெருஞ்சேனைதன்னுளார்தங்களாதரத்தொடுதனஞ்சயன்
பொருவிலாண்மையும்வீமன்மாமகன்பொருதவீரமும்புகழ்ந்துபாடினா
ரரவகேதனன்சேனைதன்றுளாரழிந்தமன்னருக்கழுதரற்றினா
ரிருவர்சேனையுங்கண்படாமலன்றிரவுபட்டதென்னென்றியம்புவாம். (௨௯)

நென்னலங்கையிற்கொண்டதென்னையேநேமியாகவந்நிலமேனியா
னின்னமும்பொரத்தேடுமாகவத்தின்றுமென்றுகொண்டெண்ணியேகோ
தன்னெடுந்தனிச்சயிலமும்பொலந்தமணியத்தடஞ்சயிலமாகவே [லோ
மின்னெடுஞ்செழுங்கதிர்பரப்பினான்வெய்யவேழ்பரித்தேர்திவாகரன். (௩0)

மூன்றாம்போர்ச்சருக்கமுற்றிற்று.

---

## நான்காம்போர்ச்சருக்கம்.

கலிவிருத்தம்.

தேடியவகலிகைசாபந்தீர்த்ததா
ணீடியவுலகெலாமளந்தநீண்டதா
ளோடியசகடிறவுதைத்துப்பாம்பின்மே
லாடியுஞ்செவந்ததாளென்னையாண்டதாள். (௧)

நற்பகலிடைவருநளினநாயகன்
பொற்பகலுறவொளிபுரியுநேமியான்
பிற்பகலணியையும்பிறங்குசேனையான்
முற்பகல்வியூகமேயாகமூட்டினான். (௨)

கார்முகில்வண்ணனைக்கண்டுகாணலார்
தாமுமவ்வியூகமேசமைத்துமுந்தினு
ரேமமோடெதிர்முனைந்திருவர்சேனையும்
போர்முரசெழவெழப்பொங்கியார்த்தவே. (௩)

ஏழிருபுவனமுமேந்துமேருவைச்
சூழ்வனகிரிகளுழாஞ்சுற்றுமாறுபோற்
பாழியம்புயகிரிபவனன்மைந்தனை
வேழவெம்படையுடைவேந்தர்சூழவே. (௪)

வஞ்சிவிருத்தம்.

ஆலாலமெனக்கதுவாவதிரா
மேலாள்விழவீமன்வெறுங்கைகளா
லேலாவுடலென்புகமோதவெறுந்
தோலாயினசிற்சிலதோலினமே. (௫)

மேல்வாய்தமகையொடுமேலெழவுந்
தோல்வாயவைகீழ்விழவுந்துணியா
மால்வாரணம்வாயகள்கழன்றனமுன்
னூல்வாயெனுநாமநலம்பெறவே. (௬)

மதிவெண்குடைமாருதிவன்புடனே
குதிகொண்டொருகைகொடுகுத்துதலா
லதிர்சிந்துரவல்லுரமத்தனையு
மெதிர்சிந்துரமாகியிளைத்தனவே. (௭)

உடலிற்றசையாவுமுடைந்துநெடுங்
குடலற்றுவிழும்படிகுத்துதலான்
மிடல்பற்றியவீமன்வெறுங்கைகளா
லடலத்திகளத்திகளாயினவே. (௮)

கந்தாவகன்மொய்ம்புறுகாளைபுயக்
கந்தாலமர்செயதுகலக்குதலிற்
றந்தாவளசேனைதரிப்பறவே
தந்தாவளமுற்றனசாயுறவே. (௯)

வெவ்வாயுவின்மைந்தன்வெகுண்டொருதோன்
மொய்வாகுவில்வைத்தெதிர்மோதுதலாற்
கைவாலதிமெய்தலைகால்கள்கரந்
தவ்வாரணம்வாரணமாகியதே. (௧௦)

கம்பித்தனகாருடல்பேருயிருங்
கும்பித்தனவாயுகுமாரனிவ
னம்பொற்கரபங்கயமன்னுதலிற்
றும்பிக்குலமாயினதும்பிகளே. (௧௧)

பொன்னாகமணிப்புயன்வெங்கதையான்
முன்னாகமலைந்துமுருக்குதலா
லெர்நாகமுநாகமெனும்படியே
மன்னாகவமெங்குமடிந்தனவே. (கஉ)

கோடுங்கரமும்பறியக்குதிகொண்
டோடுங்குருதிப்புனலூடுடல
மூடும்படியாவருமூழ்குதலா
லாடுங்கயமாயினவக்கயமே. (கங)

வீசுந்தமகைம்முதன்மெய்ம்முழுதுங்
கூசும்படிசிற்சில்குழம்புகளாய்
மூசுங்களபக்குலமொய்ம்பனுடற்
பூசுங்களபக்களிபோன்றனவே. (கச)

இரியேயெனவந்தெதிர்கிட்டினபுன்
பொரியேயெனவானிடைபுக்கனபோ
ரரியேறனையான்வலிமைக்கவர்தங்
கரியேகரியல்லதுகண்டவர்யார். (கரு)

இவ்வாறுவெகுண்டிவனெற்றுதலுங்
கைவாரணவேலைகலக்கமுறத்
தெவ்வாகியமன்னவர்தேர்களொடும்
வெவ்வாசிகடம்மொடும்வென்னிடவே. (கசு)

உடைகின்றமைகண்டுரதத்துவசன்
குடையுங்கொடியுங்குளிர்மாமுரசும்
படையுஞ்சிலதம்பியரும்பலரும்
புடைகொண்டுவரப்போனானவன்மேல். (கஎ)

வீமற்கெதிர்நின்றவன்வில்லறவுஞ்
சேமக்கவசஞ்சிதைவுற்றிடவு
நாமக்கணையேவினனாயகனா
மாமுத்தமதிக்குடைமன்னவனே. (கஅ)

ஆறம்பினிலற்றரவத்துவச
னூறம்பகன்மார்பினுழைந்ததுபின்
வேறம்புதொடுத்திலன்வீமனவன்
மாறம்புதொடுத்தனன்மற்றிவன்மேல். (ககூ)

சிங்கக்கொடியற்றணிதேர்சிதைவுற்
றங்கத்தினுழைந்தனவம்புகளுந்
துங்கக்கடகத்திரடோள்புடையா
வெங்கட்கனல்வீமன்வெகுண்டனனே. (உ0)

நொந்தானிவனென்றுறுதிக்கதிர்வே
லந்தார்முடிமன்னரநேகருடன்
வந்தார்பலதம்பியர்மைத்துனருங்
கொந்தார்தொடைவீரகுமாரருமே. (உக)

மலருங்குடைமன்னவர்வந்தமைகண்
டலருங்கொடிவாளரவோனருகே
பலருங்கரிதேர்பரியாளுடனே
சிலருமபுவிபாலர்திரண்டனரோ. (உஉ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

எதிர்ந்தார்மன்னரிருதிறத்துமொருவர்க்கொருவரிடையிடைநின்
றதிர்ந்தார்சிறுநாண்பேரொலியாலுடையாவல்லவகிலாண்ட
முதிர்ந்தார்போரிற்செருடுகணையான்முரட்டேர்துணிந்துமுடிதுணிந்து
முதிர்ந்தார்தத்தமுடனிலத்திலுயர்ந்தாராவியுயர்வானில். (உங)

தாமத்தெரியல்வலம்புரியோன்றடந்தாமனைக்கைத்தனுத்தறியச்
சேமக்கவனப்பவனகதிப்பரிமாகான்குஞ்சிரந்துணிய
மாமொட்டொடிந்துகொடிஞ்சியுடன்மான்றேர்சிதையமார்புருவ
நாமக்கணைகள்பலபடவில்லுகைத்தானின்றுநகைத்தானே. (உச)

முன்னாளமரிற்கடோற்கசன்முன்முனைவெஞ்சரத்தான்மூழ்குவித்தான்
பின்னுண்மீளப்பிறைக்கணையாற்பிளந்தானவனைப்பெற்றெடுத்தோ
னென்னுவிரங்காமெய்ந்நடுங்காவெடுத்தாரணைத்தார்சகுனியுமப்
பொன்னூர்தடந்தேர்ச்சல்லியனுமுதலாவுள்ளபூபாலர். (உரு)

தம்முன்றளர்ந்தநிலைகண்டுதெரியாரரகித்தம்பியர்க
ளெம்முன்பொருதற்கிசைவார்களிசைவீரெனறென்றிகல்கூறித்
தெம்முன்செவிகள்செவிடுபடச்சிறுநாணெறிந்துதேர்கடவி
முன்முன்கடிதிற்கணைபொழிந்தார்முருக்தன்றடுத்தமுகில்போல்வார். (உசா)

வின்மேல்விசையிற்கடும்பாணமேன்மேனிறுத்திவேந்தைப்பார்த்
தென்மேனினைவென்றவரவர்பேரிரதந்துணித்துச்சிலைதுணித்துத்
தன்மேல்வந்ததம்பியரிற்றரியாதுடன்றவைவர்க்கு
மன்மேலெய்தவாளியெனத்தொடுத்தானைந்துவயவாளி. (உஎ)

சேனுவிந்துசுதக்கணன்பொற்றேர்ப்பிங்கலசன்சலாசந்த
னூவீமவாகுவெனுமடல்வாணிருபனைவனையும்
வானுடாளும்படிவிடுத்தான்வன்பாற்றம்மையையவரையுங்
கானுள்கென்றகாவலனைப்போல்வான்வீரக்கழல்வீமன். (உஅ)

ஒருபால்வீமன்சிலைவிசயனொருபாலொருபாலபிமன்னு
வொருபாலனகுலன்சாதேவனொருபாலொருபாலுரகேச
னொருபாலரக்கன்பாஞ்சாலனொருபாலடலுததமபானு
வொருபாலுடன்றுபொரப்பொரவேயுடைந்ததரசன்பெருஞ்சேனை. (உகூ)

விண்ணாடருக்காவெஞ்சமத்திலசுராதிபனைவென்கண்டோன்
மண்ணாளரசர்மகுடசிகாமணியேபோல்வான்மாமரபாற்
பண்ணார்பஞ்சகதிமான்றேர்ப்பகலோனென்னப்பகதத்த
னெண்ணார்துரக்கவரும்படையையஞ்சலென்றெதிர்சென்றார். (௫0)

அலைகால்வெள்ளக்கருங்கடல்போலதிராநின்றவாகவத்தின்
மலைகால்பெற்றுவருவதுபோல்வருதிண்பனைக்கைமாமிசையான்
சிலைகால்வளைத்துத்தீவாய்வெஞ்சரங்கொண்டடையார்சிரங்கொண்டான்.
கொலைகாலசெங்கட்கரியநிறக்கூற்றன்றனக்குங்கூற்றனான். (௫௧)

தாராரோடைத்திலகநுதற்சயிலம்பதினாயிரஞ்சூழ
வாராநின்றமதகயத்தின்வன்போர்வலியுமனவலியும்
சேரார்வணங்கும்பகதத்தன்றிண்டோள்வலியுஞ்சிலைவலியும்
பாராநின்றகடோற்கசன்றன்படையின்றளர்வுமபார்த்தானே. (௫௨)

கலிநிலைத்துறை.

ஆயபோதிலாயிரநூறுமதமாவு
மேயதீயகாலனையொசகுமேலானுஞ்
சாயகம்முஞ்சாபமும்யாவுந்தானேயா
மாயவேடங்கொண்டவனோடுமலைவுற்றான். (௫௩)

சங்கமூதத்தார்முரசார்ப்பமுழவார்ப்பப்
பொங்கும்பூழியாழிவறக்கும்படிபோதச்
சிங்கங்குன்றிற்செல்வதுபோலச்சிலையோடு
மெங்குந்தானும்வேழமுமாகியெதிர்சென்றான். (௫௪)

மைபோலார்த்துமும்முறைதானமழைசிந்திக
கைபோன்முட்டிக்கையொடுதெத்தங்கால்வீசி
மெய்போல்வெம்போர்செய்தனவீரன்விறல்வேழம்
பொய்போனின்றவருபகதத்தன்புகர்வேழம் (௫௫)

நின்றார்நின்றபடிகடிதாகநெடிதோடிச்
சென்றார்கண்டசிந்துரம்யாவுந்தியமபிற்
கொன்றார்மற்றங்கொற்றவர்யாருங்கொலையுண்டார்
வென்றானன்றேவீமன்மகன்சேனையில்வீரர். (௫௬)

ஆனவானவாகவமெங்குமானைப்போர்
போனபோனமைந்தர்பிழைப்பீர்போமென்றன்
றானமெய்தாவவ்விறைபோனானுயிரோடும்
போனகண்டகாய்கதிரோனும்புறமிட்டான். (௫௭)

பூந்தண்மாலைப்பஞ்சவரானைப்போர்வென்று
சேர்ந்தசேர்ந்தமன்னவரோடுநிறலோடுர்
தாந்தம்பாடிவீடுபுகுந்தார்தனையாளும
வேந்தன்றானும்பாசறைபுககான்வீடுமன். (௫௮)

பூண்பாய்மார்பிற்புத்திரர்தம்மைப்பொலிவோடுங்
காண்பாளவர்க்கண்டிலள்பெற்றகாந்தாரி
சேண்பாலெய்தச்சென்றனரோவென்றிருகண்ணீர்
தூண்பாலாகிச்சோர்தரவுள்ளஞ்சோர்வுற்றாள். (௬௯)

கொன்னேகுந்திமைந்தரிருக்கக்கொலையுண்டார்
முன்னேமுன்னுமுன்னமுடிந்ததின்னென்று
மின்னேயென்னமெய்குலையாமண்மிசைவீழ்ந்தா
ளென்னேயென்னேயென்றினையாநின்றனசெய்தாள். (௭௦)

வீரர்கற்பின்மின்னனையாளைவிறன்மைந்த
ரொருமன்றிலேற்றவுமாமன்றென்றுதா
ளொருவன்பிற்கண்ணறைமன்னனொருதேவி
யாருவெள்ளத்துன்புறவன்றேயடிபிட்டாள். (௭௧)

ஆளாய்மாய்ந்தவேந்தரிடந்தோறழுமோசை
கேளாவெப்போதேருவமென்றக்கிளர்கங்குன்
மீளாவோடிற்றதிசைவானோர்மிளிர்சென்னிச்
சூளாமணிபோல்வந்ததுகாலைச்சுடரம்மா. (௭௨)

நான்காம்போர்ச்சருக்கமுற்றிற்று.

ஆக செய்யுள் - ௭௨.

## ஐந்தாம்போர்ச்சருக்கம்

கலிநிலைத்துறை.

கருமாமுகிற்கோலநெஞ்சத்திருத்துங்கருத்தெய்துமே
லருமாதவனாறுமவன்முத்திதருகைக்குமவனேகுருத்
தருமாலைமணநாறுதாளானைவண்டேறுதண்ணந்துழாய்
மருமாலைபுனைகின்றதிருமாலையல்லாதுவல்லார்கள்யார். (௧)

வரசங்கமுந்தாரையுஞ்சின்னமும்பொன்மணிக்காளமு
முரசங்களுந்துந்துபியுமெங்குமெழவிம்மமுழவிம்மவே
கரைசிந்துதிரைசிந்தநுரைசிந்தவிரைசிந்துகணமென்னவே
அரசன்பெருஞ்சேனைவெள்ளம்புறப்பட்டதணியாகவே. (௨)

விருதாயிரங்கோடிமுரசாயிரங்கோடிமேன்மேலெழப்
பொருதானையுடன்வந்தணைந்தார்புறந்தந்தபூபாலருங்
கருதாவரக்கன்கொடுந்தானையிறைவன்கடுந்தானையென்
றிருதானையும்போலவெதிருற்றவிருமன்னரிருதானையும். (௩)

அரக்கர்க்குமுதல்வானளித்தோருமெமரின்றுமவர்போலுமைத்
துரக்கைக்குநின்றேனெனத்தெவ்வர்தம்மோடுசொல்லிற்றெனக்
குரக்குக்கொடித்தேரின்மிசையோடிவிசையோடுகூத்தாடவே
புரக்கைக்குநின்றோனுடனசெங்கண்விசயன்புறப்பட்டனன். (௪)

அரனின்றனன்போலவவனின்றதேரொத்தவணிதேர்மிசைப்
பொரநின்றமதிமைந்தனொடுசென்றுமுனைநின்றுபொரவெண்ணியே
சரநின்றகுனிசாபவிசயன்றனைக்கொண்டுசெங்கண்குறித்
துரநின்றவவனெஞ்சுடைப்பாகன்மான்றேருகைத்தூரவே. (௬)

ஊர்கின்றதேரோடியுயர்கங்கைமகனின்றவொருதேருடன்
சேர்கின்றவெல்லைக்கலிங்கேசர்முதலானதெம்மன்னர்போய்
நேர்கின்றவிசயன்றனுடன்மோதியவனேவுநெடுவாளிபட்
டூர்கின்றபுண்வாயில்வார்கின்றசெந்நீரினிடைமூழ்கினார் (௬)

செல்லுங்கலிங்கேசரலையுண்டநிலைகண்டுசிவனென்றுபார்
சொல்லும்பெருஞ்செம்மல்பல்லங்களவன்மேற்றொடுத்தேவினான்
கொல்லுங்கொடும்பாணமவையைந்துவிசயனைகொதித்தேவினான்
வில்லுந்தன்வின்ஞாணும்விறலம்புமுடனற்றுவிடைகொள்ளவே. (௭)

இவர்கொண்டசெற்றத்தொடிவ்வாறுபோர்செய்யவிகல்வீமனைப்
பவர்கொண்டநெடுவேலைபோல்வந்துமொய்த்தார்கள்பலமன்னருங்
கவர்கொண்டமுனைவாளியவர்மார்புதோறுங்கழன்றோடவே
தவர்கொண்டுசெற்றான்முன்னளகேசனமர்வென்றதனியாண்மையான். (அ)

துச்சாதனன்றம்பிமார்மைந்தர்மற்றுஞ்சகுனிசல்லிய
னெச்சாபமுடிமன்னரும்பின்னருந்துன்னியெதிர்சீறினா
ரச்சாபமொன்றாலுமன்றவ்வவர்க்கம்பநேகந்தொடுத்
துச்சாசனஞ்சொல்லிநின்றானவ்வடன்மன்னருடனோடவே. (௯)

செருத்துப்புடைத்தோடிவருதம்பியர்க்கண்டுசெற்றத்துடன்
கருத்துப்புகைந்துட்கலங்கிக்கடைக்கண்கள்கனல்காலவே
மருத்துத்தருங்காளைநின்றானையின்றாவிமலைவேனென்றா
வுருத்துத்தடந்தேரின்மிசைவந்தடுத்தானுரக்கேதனன். (௧0)

போதநிலைநின்றுவன்போடுசாபம்பிடித்தெங்கணுஞ்
சோராதவயவாளியீராந்துசேரத்தொகுத்தேவினா
னூராவமுடனிட்டகவசம்பிளந்தோடியாண்மைக்கெலாம்
வீராபிடேகஞ்செய்வயவீமனகன்மார்பின்மிகமூழ்கவே. (௧௧)

ஈமந்தொறுஞ்சென்றுநடமாடுகழலையனெதிராய்வருங்
காமன்றனுடன்மேல்விழித்திட்டநுதலிற்கனற்கண்ணனைத்
தாமம்புனைந்தாரமணநாறுமார்பத்தடந்தோயவே
வீமன்றொடுத்தானொரொதிரம்புபார்மன்னன்மிடல்சாயவே. (௧௨)

கலிவிருத்தம்.

ஓரம்பினுனைந்தேழுலகுடையானலமரவே
வீரம்புனைவீமன்குனிவில்லோடெதிர்நிற்கப்
போரம்பரவுலகாள்பவர்புகழ்பூரிசவாவந
தீரம்புதொடுத்தானொருதேர்மேலினனிவன்மேல். (௧௩)

இவனாண்மையைமதியாதெதிரெய்தானெனவெய்திற்
பவனாகதிபெறுதேரினனளினாபதியிளவ
லவனாருயிர்கவர்வேனெனவப்பொன்றுதொடுத்தான்
றவனான்மறைதெரிபூரிசவாவுஞ்சரம்விட்டான். (௧௪)

எணற்றுயர்வரைமார்பின்*றிருவோர்களுமொருவோர்
காணற்றெழிலரிதாமுறைகடிதிற்கணைதொடவே
நாணற்றனவெஞ்சாபமுநடுவற்றனவெனினுங்
கோணற்றனபுகல்வானொருகுறையற்றதவர்க்கே. (௧௫)

ஒருகேடகவுணாதேறினருளமேயெனவமரிற்
பொருகேடகநட்டவுங்கனபொற்றேர்மிசையிழியா
முருகேடவிழ்தார்மார்பினர்முனைவாளமிரண்டோ
டிருகேடகமிருகையினுமிருவோருமெடுத்தார். (௧௬)

படிவாயுபதியுந்தினபதியும்பொருதெனவே
தொடிவார்கரதலமொன்றியதுறுதோலிடைமறையா
வடிவாண்முனையசையாவிசைவருசாரிகள்பயிலா
விடிவாய்முகிலதிராவெதிரெதிர்சீறினரிப்பால். (௧௭)

தோலாதடலொடுசீறினதுரகத்தொடுதுரக
மேலாளொடுமேலாள்வரிவில்லாளொடுவில்லா
ளேலாமுடியரசோடரசிரதத்துடனிரதங்
காலாளொடுகாலாண்மதகரிமாவொடுகரிமா. (௧௮)

நீடுங்கடகரியின்கரநிரையற்றனநதியா
யோடுங்குருதியின்வாளைகளெனவோடினவொருசார்
கோடுஞ்சிலையம்பிற்றலையரியுண்டனகுறைநின்
றாடுந்தொறுமுடனாடுவவலகைக்குலமொருசார். (௧௯)

கோல்கொண்டவைசிலைகொண்டவைவாள்கொண்டவைகூர்வாய்
வேல்கொண்டவையவைதம்முடன்விழுகைத்தலமொருசார்
கால்கொண்டுகுசெந்நீர்விரிகளமோகனமதா
மால்கொண்டகரிக்கோடிளமதியாவனவொருசார். (௨0)

முந்நீர்தருபவளங்கொடுமுன்னஞ்சமைவனபோற்
செந்நீரின்மிதந்தோடுவதேராழிகளொருபா
னன்னீர்மழைபொழிசெம்புனனதிவாய்வருநுரைபோ
லந்நீரிடைபுகுமூளைகளலைபாய்வனவொருசார். ௨௧)

வையாரயில்கணைதோமரம்வாள்கப்பணமுதலாங்
கையாயுதமுழுதுந்துளைவழிசெம்புனல்கால
மெய்யாயிரவிதமாய்விழுவெம்போரிடையிருபத்
தையாயிரமுடிமன்னவரகல்வானமடைந்தார். (௨௨)

இவ்வாறுமுனைந்தாருயிரிருசேனையுமடிய
மைவானுலகிடமற்றதுவயவீரர்நெருக்கா
லவ்வானவர்தமதாலயம்வலம்வந்தவருக்கன்
செவ்வானுறுகுடபால்வரையிடமென்றதுசேர்ந்தான். (௨௩)

எப்போதுமரும்போரினிலிதயங்களிகூர்வார்
கைப்போதுறுபடைசெம்புனல்கடலுண்டதுகால்வா
ரொப்போதுதலரிதாயிருதிறமன்னருமொருவா
வப்போதணிசத்தோடுமகன்பாசறைபுக்கார். (௨௪)

இரவென்றிருள்கெழுஞ்சினிளந்திங்களெயிற்றோ
ரரவுண்டதுதான்மீளவுமிழ்ந்தோனெனவருக்க
னுரவுங்குடதிசைநீணிறவுததிகுளொளித்தோன்
விரவுந்துணதிசைவேலையினமிசைவந்துகிளர்ந்தான். (௨௫)

ஐந்தாம்போர்ச்சருக்கமுற்றிற்று.

ஆகசெய்யுள் - ௧௭.

## ஆறாம்போர்ச்சருக்கம்.

இதுவுமது.

கோயிலாளுடையபைங்கொண்டலார்கண்டுயில்
பாயலாய்வாழநீபாக்கியஞ்செய்ததென்
றீயலாதுவமைவேறில்லெனத்தீயநின்
வுரயெலாநஞ்சுகால்வாளெயிற்றுரகமே. (௧)

பயிலும்வெம்பாசறைப்பாண்டவரைவருந்
துயிலுணர்ந்தணிபசுந்துளபமாலடிபணிந்
தயிலுநஞ்சனையபோரடுகளங்குறுகினார்
சயிலவெங்கடகரித்தானையுந்தாமுமே. (௨)

பகுத்தபல்லணிகளின்பான்மையக்குரோணியான்
மிகுத்தவெஞ்சேனையாம்வெள்ளநீர்வேலையை
தொகுத்துவண்டிமிர்தொடைத்துருபதன்றிருமகன்
வகுத்தனன்புறமிடாமகரமாவியூகமே. (௩)

போகமுந்தருமமேயானமெய்ப்புனிதனு
நாகவெங்கொடியுடைநாயகக்குரிசிலும்
வேகவெம்படையுடைவேந்தருஞ்சேனையு
மாகவங்குறுகினாராரவம்பெருகவே. (௪)

பொருஞ்சமங்கருதியாள்புரவிதேர்போதகந்
தெரிந்துகொண்டீரிருதிசையினுஞ்செல்லவே
பெருஞ்சனந்தன்னையப்பீடுடைவீடுமன்
கரிஞ்சமென்றுள்ளபேர்வியூகமுங்கட்டினான். (௫)

இந்திரன்முதலியவிமையவர்தங்களா
லந்தரமிடனறவரவுளைந்தலமர
வந்துவந்திருபெரும்படைஞருமாறுபட்
டுந்தினார்முந்தினாரோட்டினார்முட்டினார். (௬)

பரவிநால்விதவயப்படைஞருஞ்சூழவர
இரவிநான்வெமபகையிருளினுக்கென்றுதன்
புரவிநான்மறையெனப்பூண்டதேர்தூண்டினான்
விரவினான்வீமன்மேல்விற்கையாசிரியனே. (௭)

சிலைவரம்பெறுதலிற்றேசிகன்சிறவு
நிலைபெறும்புகழினானெஞ்சினஞ்சலிசெயா
மலையினும்பெரியதேர்வலவனும்புரவியுந்
தலையறும்படிசரந்தனுவளைத்துதைதயினான். (௮)

சூழிவெங்கசரததுரகதகிருபனை
வீழவெங்கணைகளான்மெய்துளைததளவிலே
தாழநின்றிலனெழிற்சல்லியன்றன்னொடே
தோழவின்றமர்செய்கென்றொருதிசைத்தோன்றினான். (௯)

வல்லைவெஞ்சமர்செயவல்லைநீவருகென
வில்லையுந்துணிசெய்துவெல்லவர்தவனையுந்
தொல்லைவெங்கரியெனததேரொடுந்தோண்மடுத்
தெல்லையம்புவியின்மேலெற்றினான்வீமனே. (௧௦)

சல்லியன்றன்பெருஞ்சலிவுகண்டங்கையி
னெல்லியங்கனியெனநேரலாருயிரெனப்
பல்லியங்களுமெழப்பாந்தளம்பொற்கொடி
யல்லியந்தெரியலானங்குவந்தணுகினான். (௧௧)

வெம்புயவீமன்மேல்வில்வளைத்தாயிர
மம்புகண்மாரிபோலார்த்தெழவீசினார்
தும்பையந்தார்முடிச்சூழ்படைமன்னருந்
தம்பியர்யாவருமாமனுந்தானுமே. (௧௨)

தோன்றரித்துவசனுஞ்சோகமில்பாகனார்
வான்றடந்தேரொடும்வருகெனச்சென்றெதி
ரூன்றினான்மைந்தருமிளைஞருமுயிரையே
போன்றமைத்துனரும்வாணிருபருமபுடைவர. (௧௩)

நின்றிருசேனையுநேர்படவேலினும்
வன்றிறல்வில்லினும்வாளினுமலைவுறாக்
குன்றனதோளினாரிருவருங்கொக்கரித்
தொன்றினார்வில்வளைத்தொருவருக்கொருவரே. (௧௪)

அவனுமம்பிவனுரத்தழகுறவெழுதினு
னிவனுமம்பவன்மணித்தோளின்மேலெழுதினான்
புவனமெங்கணுமிகப்பொறியெழப்போர்செய்தார்
பவனனுங்கனலியுநிகரெனும்பரிசினார். (கரு)

வரத்தின்முன்பெறுகதைவன்மையும்வின்மையுஞ்
சிரத்தினின்றெண்ணவோர்பேர்பெறுஞ்சேவகன்
சரத்தினுங்கடுகுதேர்ச்சர்ப்பகேதனனையன்
னுரத்தின்வெங்கணைகள்பட்டுருவவில்லுதையினான். (கசு)

தான்விடுங்கணைகளிற்றம்பியர்தம்மையுந்
தேன்விடுந்தெரியலானெய்துபுண்செய்தபின்
னான்விடும்படிதுளைத்துருவுபல்பகழியால்
வான்விடும்பேறையும்வானிலுய்த்தனனரோ. (கஎ)

வாவருங்கவனமாக்கடுகுதேர்வலவர்போ
யேவருஞ்சிலைகள்போயிருபுயவலிமைபோ
யாவரும்பண்டுதாமிடுபுறமிட்டனர்
தேவருங்கண்டுவந்தலர்மழைசிந்தினார். (கஅ)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

ஏயவரிசிலைவீமனொடுபொருபோரிலெனைவரும்வென்னிட
மேயவிழியிலையாயபதிதருவீரர்பலருமவிகன்னனு
மாயமுதிர்சினமூளவிளைவுடன்மீளவரவபிமன்னுவுந்
தூயவரிசிலைவாளிகொடுதனதேர்கொடவனெதிர்துன்னினான். (க௯)

மானவபிமனுஞானவிகனனைவாளிபலபலவேவவமே
லானவிரதமுமாவும்வலவனுமாழிகளுமுடனற்றபின்
றானவிரதமுறுமல்விசையொடுதத்தியருகுறுசித்திர
சேனனெனுமிளையோனதணிபெறுதேரின்மிசைகடிதேறினான். (உ0)

மற்றையிளைஞருமைத்துனனுமதமத்தகயபகதத்தனுஞ்
செற்றவிசனனுமுற்றுமிவனொடுசெற்றியமர்பொருகிறழினார்
வெற்றியபிமனும்விற்கையுடனவர்விட்டகணைகள்விலக்கிமா
பெற்றுகணையனைவர்க்குமவரவொய்த்துவிழவிழமொத்தினான். (உக)

நெடியவரிசிலைநிமிரமுறைமுறைநெடியவிசையுடன்விசியுநா
ணிடியுமுகிலெனவகிலவெளிமுகடிடியவதிர்பெருநகையுடன்
கொடியவிகனனைமடியவவனுடல்கொடியகுடருகுகுருதிநீர்
வடியவிருபுயமொடியவுதையினன்வடியகணையொருநொடியிலே. (உஉ)

மன்னர்மணிமுடிமன்னுகணைகழன்மன்னனிளவல்விகன்னனை
முன்னருறுகணைபின்னர்விழவிழமுன்னரமர்பொரமுன்னினான்
பொன்னசலநிகரன்னபுயவபிமன்னுவொருவனுமின்னுநா
மென்னவமர்பொரவின்னரனுகுவதென்னவெருவினர்துன்னலார். (உங)

அன்றையமரினிலொன்றுபடவவரங்கமயர்வுறுபங்கமே
தென்றுமொழிவதுதந்தமனையுறவெந்தநிருபருமுந்தினார்
வென்றுபொருமுனைநின்றவபிமனைவிஞ்சுமுவகைகொணெஞ்சுடன்
சென்றுதழுவினரிந்துவரவெழுசிந்துவெனமகிழ்தந்தைமார். (உ௪)

கோடுமுதலொடுவாளிகளினிறவீழ்வபலகடகுஞ்சரங்
காடுபடுதுளவோன்முன்வரவிடுகஞ்சன்மழகளிறொக்குமா
லோடுகுருதியினூடுவடிவொருபாதிபுதைதருமோடைமா
நீடுமுதலையினவாயின்வலிபடுநீலகிரியைநிகர்க்குமால். (உ௫)

மாலுமதகடசாலநுதலுமருப்புமொருகையும்வதனமுந்
தோலுமொழியவுளானதசைபலபேயகணுகாதருதும்பிமா
நாலுமறைகளுமோலமெனவகல்வானமெனமுழுஞானமே
போலுமெனவொளிர்மேனியுடையவர்போர்வையுரியதள்போலுமே. (உ௬)

சேனையிபமுகமற்றுவீழ்வனசென்றுதிசைவழிகவ்விவின்
போனவயவர்கள்படைகொடெதிரெதிர்பூசல்புரியிருபூதமுஞ்
சோனைமழைமுகில்வாகன்முதலசுரோசர்தொழுதுதுதிக்கவே
யானைமுகவசுரோசனுடனமராடுமுதல்வனையொக்குமே. (உ௭)

இமையமணுகினன்விசயன்மதலையையின்றையமரினியுங்களுக்
கமையுமெனமுதலனிகமடையவுமணியுமவனிபர்நால்வருந
தமையபெறுதமபதியினணுகினர்தங்கவிளைவொடுகங்குல்போய்ச்
சிமையமணுகினன்மீளாநனியிருள்சிதையவுதயதிவாகரன். (உ௮)

ஆறும்போர்ச்சருக்கமுற்றிற்று.

ஆ செய்யுள் - ௧௨௫.

பரமபதிதுணை.

# கூர்மபுராணம்.

திருமால்கொண்டருளிய கூர்மமூர்த்தத்தினதுநூல். புராணம் பழமை. இது பண்டுள்ளவரலாற்றின்மேல் பண்பாகுபெயரும், இவ்வரலாறு தானமாகிய நூல்மேல்நிற்றலின் தானியாகுபெயருமாய்நிற்றலால் இருமடியாகுபெயர்;—ஆகவே இத்தொடர் செய்யுட்கிழமையென்னும் பொருட்பிறிதின்கிழமைப்பொருளில்வந்த ஆறும்வேற்றுமைத்தொகைநிலைத்தொடராய் நூற்குக்காரணக்குறியாய்வந்தது. கூர்மபுராணம் நிலைமொழி வருமொழி வடசொற்களாதலால் இயல்புபுணர்ச்சி. "கடலகமுழுதும் பொதிந்த பேழ்வயிற்றுக்கடவுண்மோட்டாமை யெம்பெருமான் - வடமொழிதொகுத்த தெய்வமாக்கதையை" என இந்நூலில்வருதல்காண்க. பண்டுள்ளவரலாறுகள் உலகத்தின் தோற்றமும், உலகத்தினொடுக்கமும் மன்வந்தரமும் முனிவர்களரசர்கள்மரபும் சரித்திரமுமாம். இவ்வைந்துமே பதினெண்புராணங்களுக்கும் இலக்கணங்களாதலால் அவற்றுள் ஒன்றாகிய இக்கூர்மபுராணத்திற்கும் இவையே இலக்கணங்களாகக்கொள்க. "தோற்றமுலகமீண்டொடுங்கறுகடர்மன்வந்தரமுனிவர், ஆற்றலரசர்மரபவர்தஞ்சரிதமென்னுமோரைந்தும், சாற்றும்புராணவிலக்கணமென்றறிஞருரைப்பர்" எனவும் "பிரமநற்பதுமம் வைணவஞ்சைவம் பேருலகேத்துபாகவதம், அருமறைதெளிந்த பௌடிகம் நாரதீய மார்க்கண்ட மாக்கினேயம், கருதரும்பொருள்சேர் பிரமகைவர்த்த மிலிங்கநல்வராகமெய்க்காந்தம், மருவுவாமனஞ்சொற் கூர்மநீண்மச்சங் காருடஞ்சிறந்தவாயவியம்" எனவும் ஐந்திலக்கணங்களுக்கும் பதினெண்புராணங்களுக்கும் இந்நூலுள்வருதல்காண்க. இது கவியாற்செய்யப்படுதலிற் காவியமன்றோவெனின்; காவியமெனல் பொதுவகையாயினும் வேதத்தின் சாரமே பதினெண்புராணமாதலால் புராணமெனல் சிறப்புவகையாலெனக்கொள்க.

காப்பு.

(இ-ள்.) வெள் நிலா கற்றை கான்று-வெள்ளியநிலவின்பெருக்கைவீசி, விளங்கும் ஓர் பிறை கோடு இன்றி-விளங்காநின்ற ஒரு இளம்பிறையையொத்தகொம்பில்லாமல், எண்ணில்-நினைக்கில், ஓர்பாகம்-ஒருபாகமானது, கூந்தல் பிடி என-மத்தகத்தினீண்ட மயிரையுடைய பெண்யானையைப்போல், இருந்த ஆற்றால் - இருந்ததன்மையால், பெண் ஒரு பாகம் வைத்த - உமாதேவியாரை யொருபாகத்தில்வைத்தருளிய, பிஞ்ஞகன் உருவுகாட்டும் - (தமது) பிதாவாகிய சிவபெருமான் திருவுருத்தோற்றத்தை அடியார்க்குக்காட்டியருளும், அண்ணல் அம் களிநல்யானை - பெருமையையுடைய அழகிய மதச்செருக்கினையுடைய நல்லமுதகப்பிள்ளையாரது, அடிமலர் சென்னி வைப்பாம் - திருவடித்தாமரையை எமது சிரத்தின்மேற்சூடுவாம்.

ஓர்பால் பெண்யானை யிலக்கணமுடைமையால் பிறைக்கோடின்றிக் கூந்தற்பிடியென விருந்தவாற்றால் எனவும், சிவபெருமான இலக்கணமுற்றும் தாம் வாய்த்திருத்தலால் பிஞ்ஞகன் உருவுகாட்டுமெனவுங்கூறினார்.

## பூருவகாண்டம்.

முன்னுள்ள பெரும்பாகமென விரிதலால் இடவேறுபாட்டின்மேனின்ற இடைச்சொற்றொடரெனக்கொள்க. இரண்டும் வடசொற்களாதலால் "இடையுரிவடசொலி னியம்பியகொளாதவும்" என்றவிதியால்வந்த இயல்புபுணர்ச்சி.

### இருபத்துமூன்றாவது.

# இராவணன்வதை யத்தியாயம்.

---

அத்தியாயம் சிறுபாகம். இராவணனைவதைத்தலையுணர்த்திய சிறுபாகமெனவிரிதலால் மூன்றுசொல் இரண்டுசந்தியாக்கி, முன்னது அழிக்கப்படுபொருளில்வந்த இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரும், பின்னது இயற்றப்படுபொருளில்வந்த உருபும் பயனுந்தொக்க இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடருமாகக்கொள்க. இராவணன் யாரையுமழச்செய்பவன் எனக்கூறுவர். இப்புராணத்தில் கயிலையின்கீழகப்பட்டு ஆயிரவருடம் அழுதலால் இராவணன் எனச் சிவபெருமான் பெயர்தந்தருளினார் எனக்கூறுதலால் இக்காரணம்பற்றிவந்ததெனக்கொள்க. அதனைப் பின்னர்க்காண்க.

1. (இ-ள்.) அள்ளல் கரும் சேறு இடை - அள்ளலாகிய கரியசேற்றினிடத்தில், பெடை ஒடு அலவன் ஆடும் சிறு குழியை - பெண்ணண்டோடு ஆணண்டுகலந்து விளையாடும் சிறியகுழியினை, கள் வாய் உயிர்க்கும் - மதுவினைத்தமதுவாயாற் கொப்புளித்துமிழும், நறும் புன்னை தாது - நறுமணங் கமழும் புன்னைமலரின் மகரந்தங்கள், தூர்க்கும் கடல் கரை வாய் - தூர்க்கின்ற கடலின்கரையினிடத்து, வள்ளல் - இராமமூர்த்தியானவர், கடல் அம் தானை ஒடும் - கடல்போல அளவின்றிப் பரந்த அழகிய எழுபதுவெள்ளவானரசேனையோடும், இறுத்தல் கேட்டு - இடையறாது வசித்தலைக் கேள்வியுற்று, வல் அரக்கன் - வலிமைமிக்க இராவணனானவன், தெள்ளும் மறை நூல் துறை போய - வடித்தெடுத்த வேதநூலின் வழியே சென்ற, தேர்ச்சி துணைவர் ஒடும் - ஆராய்ச்சியையுடைய பெரியோர் முதலிய மந்திரிகளோடும், தேர்ந்தான - (இனிநிகழுஞ்செய்தியை) ஆராய்ந்தான்.

பெரியோர் - மாலியவான் முதலாயினோர். மந்திரிகள் - மகோதரன்முதலியோர். அள்ளல் - அள்ளுதலாகிய பொருள்மேல்நிற்றலால் தொழிற்பெயர் இது குழம்பாகிய பொருள்மேல் தொழிலாகுபெயரும், அது உவமையாகுபெயராய்ச் சேற்றின்மேலும் நிற்றலால் இருமடியாகுபெயர். கருஞ்சேறு என்றது பழையசேறாதலால் அள்ளற்கருஞ்சேறு என்ற தொடர்பினமொழியை விசேடித்துவந்த இருபெயரொட்டுப் பண்புத் தொகைநிலைத்தொடர்.

புன்னை மலராகிய சினைப்பொருள்மேல் நிற்றலால் முதலாகுபெயர். உயிர்க்கும எதிர்காலப்பெயரெச்சம், இது புன்னை யென்னும் வினைமுதற் பொருள் கொண்டது உயிர்பகுதி, கு சாரியை, ககரத்தோற்றமும் உகரக்கேடும்சந்தி, உம் எச்சவிகுதி. நெய்தல் நிலமாதலால் புன்னைமரங்களின் மிகுதியைக்கூறுதலின்மிகுதி நவிற்சியணி. (க)

2. (இ-ள்.) அன்னகாலை - அக்காலையில், வீடணன் - விபீஷணர், போர் அரக்கர் கோமான் முகம் நோக்கி - போர்த்தொழிலை யுடைய இராக்ஷதர்களுக்கு அரசனாகிய இராவணனுடைய முகத்தைப்பார்த்து, கன்னி கற்பின் உரு அமைந்த - அழியாத கற்பே ஒருருக்கொண்டுவந்தா லொத்த, கமலம் தடம் கண் சானகியை - தாமரைமலர்போன்ற பரந்தகண்களையுடைய சீதாபிராட்டியை, இன்னே விடுதல் - இப்பொழுதே சிறையினின்றும் விடுதல், நெறி எனலும் - (நாம் உயிருய்யும்) வகையென்றுகூற, இலங்கை வேந்தன் - இலங்கைக்கரசனாகிய அவ்விராவணன், முனிந்து உரைப்ப - கோபித்துப் பழித்துக்கூறுதலால், மின்னு நகு வேல் வீடணன் - மின்னலைப்போலும்விளங்கும் வேலையேந்திய அவ்விபீஷணர், போந்து - அவ்வாலோசனைச்சபையினின்றுஞ் சென்று, இராமன் உழையில் - இராமமூர்த்தியினிடத்து, மேயினன் - (தமது மந்திரிகளோடு) அடைக்கலமடைந்தார்.

மந்திரிகளாவார் அநலன், அநிலன், அரன், சம்பாதி. வீடணன்-விபீஷணன் என்னும் வடமொழியின்திரிபு. பார்ப்போர்க்குப் பயங்கரஞ் செய்யுந் தோற்றமுடையவன். சானகி - சனகன்புத்திரி சானகி, இது தத்திதாந்தபதம். அன்ன அகரச்சுட்டின்திரிபு. அந்த என்றாற்போல மருஉ எனினும் அமையும். இனி காலப்பொருள்மேல் நின்ற இடைச்சொல் ஈறுதொக்கு இன்னென நின்றது. எனலும் இடைச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சம் என் இடைச்சொற்பகுதி, அல் சாரியை, உம் எச்சவிகுதி. இது நிகழ்காலத்தின்மேல்நின்று, முனிந்து என்னும் பிறவினைமுதல் இறந்தகால வினையெச்சத்தின் முதனிலைகொண்டது. முனி பகுதி, ந் சந்தி, த் இடைநிலை, உ எச்சவிகுதி. உரைப்ப காரணப்பொருள்மேல் நிற்றலால் இறந்தகாலவினையெச்சம் உரைபகுதி, பகரமெய்விரித்தல் விகாரம், பகரமெய்சந்தி, அ எச்சவிகுதி. போந்து இறந்தகாலவினையெச்சம் போ பகுதி. மேயினன் மே பகுதி, ய் சந்தி, இன் இறந்தகால விடைநிலை, ஆன் முற்றுவிகுதி, பகுதியல்லாதன இடைச்சொற்களாதலால் யகரந்தோன்றியது. விபீஷணன் இராமனிடத்தில் அடைக்கலம் அடைந்தான் என்பது "கரங்கண்மீச்சுமந்துசெல்லுங் கதிர்மணிமுடியன்கல்லும், மரங்களுமுருகநோக்குங்காதலான்கருணைவள்ளால், இரங்கினனோக்குந்தோறு மிருநிலத்திறைஞ்சுகின்றான், வரங்களின்வாரியன்னதாளினைவந்துவீழ்ந்தான்" எனக்கம்பராமாயணத்தில் வருதல்காண்க. (உ)

3. (இ-ள்.) கல்லும் கரும் கண் பெண் ஆக - கருங்கற்பாறையும் கரியகண்களையுடைய ஓர்பெண்ணாக, நடந்த கழல் கமலம் காலோன் - சென்ற வீரகண்டைகட்டிய தாமரைமலர்போன்ற பாதங்களையுடைய இராமமூர்த்தி, மல் ஆர் தடம் தோள் வீடணனை - மற்போர் நிறைந்த உயர்ந்ததோளையுடைய விபீஷணரை, மதி நூல் துறை போம் மாருதி தன் - அறிவுநூலின்வழியேசென்ற அனுமனுடைய, சொல்லால் தேறி - உறுதிச் சொல்லால் (அவர்செய்தி

யைத்) தெளிந்து, இலங்கை நகர்க்கு இறை நீ என்ன - இனி இலங்கைநகரத்திற்கு அரசன் நீயேயென்று, சுடர் பரப்பி - கிரணத்தைவீசி, எல்லோன்போல - சூரியனைப்போல, இருள் துருவும் - இருளையோட்டும், எரி மா மவுலி சூட்டினன் - விளக்கம் அமைந்த பெரியகிரீடத்தைச் சூட்டினார்.

கருங்கற்பாறையாகக் கிடந்த அகலிகைசாபத்தைப் போக்கினமையால் கருங்கட் பெண்ணாக நடந்த என்றார். இறைநடுநிற்றல் அதுதொழிலாகுபெயரா யரசன்மேல்நின்றது. இறு பகுதி, உகரக்கேடுசந்தி,ஐ தொழிறபெயர் விகுதி. துருவல் தேடுதல். ஓட்டுதல் உரியபொருளாதல் துருவல் என ஒப்புடைப்பொருள்மேல்தந்து கூறியது குணவணி. துருவும் என்னும் எதிர்காலப் பெயரெச்சம் மவுலி யென்னும் வினைமுதற்பொருள்கொண்டது துருவுபகுதி மருத்தின்புத்திரன் மாருதி, இது தத்திதாந்தபதம். (௩)

4. (இ-ள்.) உரவு திரை நீர் கடல் அடைப்பான் - பெரிய அலையையுடைய நீர்மயமாகிய கடலில் சேதுபந்தஞ்செய்ய, வருணன் பழிச்சி - வருணனைத் துதித்து, உயர் கரையின் - உயர்ந்த கடற்கரையின்கண், விரியும் தருப்பை சயனத்தில் மேவி - பரபபிய தர்ப்பாசனத்திலிருந்து, ஓர் எழ் நாள் நோற்ப - ஏழுநாள் தவஞ்செய்யவும, வருணன் போதந்திலன ஆக - அவ்வருணன் வராதிருக்க, வெகுண்டு - இராமமூர்த்தி கோபித்து, வரி வெம் சிலையின் ஒடும் - கட்டமைந்த கொடியவில்லோடும், புருவம சிலை கால் குனித்திடவும - தமது புருவமாகிய வில்லின்காலையும் வளைக்க, ஓர் எழ் புணரியும் புகைந்த - எழுகடலும் கோபததீப்பற்றிப் புகைந்தன.

திரை வினைமுதற்பொருளில்வந்த, இகரவிகுதியொடு புணர்ந்து குன்றியதொழிற்பெயர். அடைப்பான் எதிர்காலவினையெச்சம் அடை பகுதி, பகரமெய் சந்தி, பான் எச்சவிகுதி. பழிச்சி, மேவி, வெகுண்டு இறந்தகாலவினையெச்சங்கள் பழிச்சு, மேவு, வெகுள் பகுதிகள். நோறப நிகழ்காலவினையெச்சம் நோனமைபகுதி, ஈறுகெடுதலும லகரம் றகரமாகத்திரிதலும் சந்தி, பகரமெய்விரித்தல் விகாரம், அ எச்சவிகுதி. புருவத்தை வில்லாக உருவகஞ்செய்து வெஞ்சிலையோடு கூட்டிக் குனித்திடவும் என்றமையால் இது சமுச்சயவணி. போதந்திலன்போ என னு முதனிலைத்தனி வினைப்பெயர் தன்னை வினைப்படுத்தவந்த தா என்னும் வினைபகுதியொடு கூடி ஒருசொற்றன்மைப்பட்டுநின்ற போதா வினைப்பகுதி, முதல் குறுகல் விகாரம், நகரமெய் சந்தி, தகரமெய் இடைநிலை, இல் எதிர்மறையுருபு, அனைத்தும் ஒருபகுதி, அன் விகுதி. நிகழ்காலத்தில் போதருகின்றிலன் எனவரும். ஆக என்பது எச்சப் பொருளைத்தரும் இடைச்சொல்லாதலால் போதந்திலன் என்னும் வினைமுற்றை எச்சப்பொருளாக்கியதெனவறிக. ஓறுத்தல் தொழிற்பெயர் ஓறுபகுதி "ஊழிசென்றதுமொப்பதாமொருபகலலையோர், எழுசென்றனவந்திலனெறிகடற்கிறைவன்" எனக் கம்பராமாயணததில் வருதல்காண்க. (௪)

5. (இ-ள்.) கரை கொன்று இரங்கு கடல் புகைய - கரையொடு மோதியொலிக்குங் கடல் புகைந்தெழ, வருணன் வெருவி - வருணன் அஞ்சிவந்து, காகுத்தன் விரை மென் கமலம் தாள் பணிந்து - இராமமூர்த்தியினது வாசமிக்க மெல்லிய தாமரைமலர்போன்ற திருவடியைவணங்கி, வேலை அடைப்

பான் உரைத்து ஏக - சமுத்திரத்திற் சேதுபந்தஞ் செய்யச்சொல்லிப்போக, செரு எக்கறவு அற்று உயர் திணி தோள் - போர்த்தொழிலிற் றளராதுயர்ந்த திண்ணியதோளையுடைய, செம்மல் நளனால் - பெருமையமைந்த வானரத்தச் சனால், அணை கட்டி - சேதுபந்தஞ்செய்து, பரிதி யான் தேர் எதிர் தடுக்கும் - சூரியனுடைய குதிரைபூண்ட தேரை எதிரேதடுக்கதுயர்ந்த, சுவேத வரையின் பால் இறுத்தான் - (சிகரத்தையுடைய) சுவேதமலையின் பக்கத்தில் வசித்திருந்தார்.

ககுமரபில்வந்தவன் காகுத்தன், இது தத்திதாந்தபதம். வெருவி இறந்தகாலவினையெச்சம வெருவுபகுதி. எக்கறவு தொழிற்பெயர் எக்கறுபகுதி, உகரக்கேடு சந்தி, உ தொழிற்பெயர் விகுதி, வகரமெய்சந்தி "உடையார் முன்னில்லார்போலேக்கற்றும்" என்னும்திருக்குறட்குப் பரிமேலழகருரையிற்காண்க. இறுத்தான் உயர்திணை யாண்பாற்படர்க்கை வினைமுற்று இறுபகுதி, த் சந்தி, த் இறந்தகாலவிடைநிலை, ஆன் ஆண்பால்விகுதி. பரிதிமண்டலத்திறதும் சுவேதமலைக்குந் தொடர்புகூறினமையால் தொடர்புயர்வு நவிற்சியணி "நவையறுமுலகிறகெல்லாநாயகநீயேசிறிற, நவையநின்சரணமல்லாற் பிறிதொன்றுகண்டதுண்டோ" எனக்கம்பராமாயணத்தில் வருதல்காண்க.

6\. (இ-ள்.) இறுத்த தானை இடை புகுந்த - அங்குவசித்த எழுபதுவானரசேனை வெள்ளத்தினடுவில தமது உருவொளித்துவந்த, சுகசாரணரை எதிர் பற்றி - சுகன் சாரணனென்னும் தூதுவரை எதிர்ந்து பிடித்து, கழல் செறித்த கால் வீடணன் போய் - வீரகண்டைகட்டிய காலையுடைய விபீஷணர் சென்று, செம கண் கரியோன் முன் உய்ப்ப - தாமரைபோலச் செவந்த கண்களையுடைய கரியநிறத்தையுடைய இராமமூர்த்தியின் முன்னேவிட, ஒறுத்தல் தீது - (தூதாகவர்தவரை) தண்டித்தல் கொடியசெய்கை, விடுத்தி என - (அவர்களை வருத்தாது) விடுவிப்பா யென்றுகூற, விடுப்ப - (பணித்த அவ்வாறே) விடுக்க, ஒற்றர் பணிந்து ஏகி - தூதாகவந்த அச்சுகசாரணர்கள் வணங்கிச்சென்று, கறுத்த நெஞ்சன் - கோபித்த மனத்தையுடைய, இலங்கையர் கோன் அறிய - இராவணன் தெரிந்துணர, அனைத்தும் கட்டு உரைத்தார் - (நடந்தசெய்தி) முழுமையும் விடாது தொகுத்துச்சொன்னார்கள்.

சுகசாரணர் "சிலவிகாரமாம்" என்றவிதியால் நிலைமொழி யீறுகெட்டும் "உயர்திணையும்மைத்தொகைபலரீறே" என்றதனால் பலர்பால் விகுதி பெற்றும் வந்தன. இறுத்த, செறித்த, கறுத்த இவை இறந்தகாலப் பெயரெச்சங்கள். இறு, செறி, கறு பகுதிகள். முதலிலும் இறுதியிலுமுள்ளபெயரெச்சங்கள் வினைமுதற்பொருளையும் இடையிலுள்ள பெயரெச்சம் செயப்படுபொருளையுங்கொண்டன. விடுத்தி முன்னிலையொருமை யெதிர்காலப் பிறவினைமுற்று விடுபகுதி, தகரத தோற்றமும உகரக்கேடும் சந்தி, து பிறவினை விகுதி, அனைத்தும் ஒருபகுதி, இ முன்னிலையொருமை விகுதி. தன்வினையில் விடுதியெனவரும். (சு)

7\. (இ-ள்.) கரிய திரை வாரிதி செவப்ப - கரியகடல் செந்நிறமடைய, கடை கண் சிவந்தோன் தனை காண்பான் - கடைக்கண்சிவந்த இராமமூர்த்தியைக்காண, திருகு சினத்த வாள் அரக்கன் - (பகைவரிடத்து) மாறுபட்ட

கோபத்தையுடைய வாளையேந்திய இராவணன், செம் பொன் மணி கோபுரம் இவர - சிவந்த பொற்றகட்டில் இரத்தினமழுத்திய கோபுரத்தின்மேல் ஏற, வரை கொன்று உயர்ந்த - அட்டகுலபருவதங்களை வென்று செருக்கியுயர்ந்த, மணி தடம் தோள் அரக்கன் - இரத்தினமழுத்திய பரந்ததோளையுடைய இராவணனை, காண்பான் - காண, மணிவண்ணன் - நீலமணிபோலநிறம் வாய்ந்த இராமமூர்த்தி, இரவி தடம் தேர் செலவு அகற்றும் - சூரியனது பரந்ததேர் விரைந்துசெல்லும் செலவினையொழிக்கும், சுவேத வரையின் மீது இவர்ந்தான் - (சிகரத்தையுடைய) சுவேதமலையின்மேலேறினார்.

அட்டகசங்களோடு போர்செய்து அவற்றின் கொம்பு முறிந்தஇடத்தில் இரத்தினமிழைத்திருத்தலால் மணித்தடந்தோள் என்றார். வாரிதிநீர்பிறப்பது என்னும் பொருள்மேல் நிற்றலால் காரணப்பெயர். கரிய, சினந்த பண்படியாகப்பிறந்த குறிப்பு வினைபெயரெச்சங்கள். காண்பான் எதிர்காலவினையெச்சம் காண் பகுதி, பான் எச்சவிகுதி. இவர நிகழ்காலவினையெச்சம் இவர் பகுதி, உடையவன் தொழிலை யுடைமைமேலேற்றிச் சினத்தவாள் என்றார். கரியதிரை வாரிதிசெவப்ப என்றது சொன்முரணணி. வாரிதிசெவப்பக்கடைக்கண்சிவந்தோன் என்ற குறிப்பால் நிலைகலங்குதல் என்னும் பொருள்தோன்றுதலால் குறிப்பணி. செவ பண்படியாகப்பிறந்த தெரிநிலை வினைப்பகுதி, சிவ உரிச்சொல்லடியாகப் பிறந்த வினைப்பகுதி. (எ)

8. (இ-ள்.) வெள்ளிப் பொருப்பை எடுத்த புயன் - வெள்ளிமலையை வேரோடு பறித்தெடுத்த புயத்தையுடைய இராவணன், இவன் ஆம் என்ன-(இங்குத்தோன்றும) இவன்றானென்று, வீடணன் - விபீஷணர், போர் வள்ளற்கு உரைத்தல் கேட்டிடலும் - போர்த்தொழிலில் மிக்க இராமமூர்த்திக்குச் சொல்லுதலைக்கேட்ட அப்பொழுதே, மணி கோபுரத்தின் மிசை தாவி-இரத்தினமழுத்திய இலங்கைநகர்க் கோபுரத்தின்மேற்றாண்டி, கள்ளம் கொடிய அரக்கன் ஓடும் - வஞ்சத்தையுடைய கொடிய இராவணனோடும், செரு ஏற்று - போர்செய்து, அவன் தன் கதிர் முடிகள் தள்ளி - அவனுடைய விளக்கமமைந்த பத்துக் கிரீடங்களையும் பறித்து, சயம்கொண்டு - வெற்றிகொண்டு, இரவி காதலன் - சூரியன் புத்திரனாகிய சுக்கிரீபன், இராமன் அடி தாழ்ந்தான் - இராமமூர்த்தியின் திருவடியை வணங்கினான்.

தாவி இறந்தகால வினையெச்சம். தா பகுதி, வகரமெய்சந்தி, இ எச்சவிகுதி. வெள்ளிப்பொருப்பை எடுத்த எனப் புயத்தின் மிகுதியைக் கூறினமையால் வீறுகோளணி. கயிலையெடுத்தமைபின்னர் வருதல்காண்க. "கொழுமணிமுடிகடோறுங்கொண்டனகுழுவின்கூட்டம், அழுதருகுறுகின்றானடித்தலமதனிற்சூட்டித், தொழுதயனுணிநின்றான்" எனக்கம்பராமாயணத்தில் வருதல்காண்க. (அ)

9. (இ-ள்.) விலங்கல் - மலையையொத்த, திணிதோள் அங்கதனை - திண்ணியதோள்களையுடைய அங்கதனை, இராமன் தூதுவிடுப்ப - இராமமூர்த்தி தூது அனுப்ப, அவன்-அந்த அங்கதன், இலங்கை நகரின் இடை எய்தி-இலங்கைநகரத்திற்சென்று, இகல் வேல் (பகைவருடன்) போர்செய்யும் வேலையேந்திய, அரக்கன் முன் உறலும் - இராவணன்முன்போய்நிற்க, அலங்கல்

வடிவாள் - வெற்றிமாலையையணிந்த வடித்தவாளையேந்திய, இராவணனும்-அந்த இராவணனும், நீயாரை கொல் என - நீயாரென்றுவினவ, உன்புலன்கள் தேய - உனது இந்திரியங்கள் தத்தநிலையினின்றுகெட, வால் துதியில்-(தனது) வாலினுதியால், பிணித்தோன் புதல்வன் என - கட்டியவாலியினுடைய புத்திரனென்று, புகன்றான்-சொன்னான்.

வாலதியில் எனப்பாடங்கூறி வாலினலெனப்பொருள்கூறுவாருமுண்டு. அங்கதன் பகைவருடலையழிப்பவன். அலங்கல் அசைதல் இது தொழிலாகுபெயராய் மாலையின்மேல் நின்றது. உறலும நிகழ்காலவினையெச்சம் உறு பகுதி, உகரக்கேடு சந்தி, அல் சாரியை, உம் எச்சவிகுதி, யாரை ஐ சாரியை யிடைச்சொல, புகன்றான் இறந்தகாலவினைமுற்று புகல் பகுதி. வாலி சிவபூசையிலிருக்குஞ் சமையத்தில் இராவணன பின்வந்திறுக்கிக் கட்டிச்சேர்க்க வாலி தன்வாலில் இறுகக்கட்டிச் சிவபூசைமுடித்தான் என "வெய்யவாளரக்கன் கையிருபதினால் வீக்கவும்விறனமிகுவாலி, கையினாலவனைநெருக்கெனவிறுக்கி வாலினாறகடிதுறககட்டி, மையணிகண்டனபூசனைமுடித்து" என உத்தரராமாயணததில் வருதல்காண்க. (௯)

10. (இ-ள்.) என்றல் ஒடும் - என்று அங்கதன்கூற, இலங்கைநகர் எரித்த கவி - இலங்கைநகரத்தையெரித்த குரங்கு, யாண்டு உளது என்ன - எவ்விடத்திலுளளதென்று வினவ, உன் நன் சிறுவன் - உனதுபுதல்வனாகிய இந்திரசித்து, வீக்க அகப்பட்ட-கட்ட அக்குரங்கு அகப்பட்ட, இழிவின் - இழிசெயலால், உயர்வாநரததலைவர் - உயர்ந்தவாநரசேனாபதிகள், உளம் கொதித்து-மனங்கொதித்து, கன்றி கடிய - கோபித்துத்துரத்த, கானத்து இடை ஒளித்து-காட்டிலோடியொளிதது, அந்த புன் குரங்கு-அந்த அறபக்குரங்கு, பொன்றியதுவோ-மடிந்ததோ, உய்ந்ததோ-அன்றிச்சீவிததுள்ளதோ, அறியேன - (யான் ஒன்றும்) அறியேன்.

வாநராய நரனையொப்பது. உன் எனத்திரிந்துநின்ற நீயெனனு முன்னிலையொருமைப்பெயரோடு தன் எனததிரிந்துநின்ற படர்க்கைக்குரியதான் என்னுஞ்சாரியை நின்றது இடவழுவமைதி. கன்றி இறந்தகாலவினையெச்சம் கன்று பகுதி, உகரக்கேடுசந்தி, இ எச்சவிகுதி, பொன்றியது, உய்நதது இறந்தகாலவினைமுற்றுகள் பொன்று பகுதி, னகரவீறுதொக்குநின்ற இன் இறந்தகால இடைநிலை, யகரமெய்சந்தி, அ சாரியை, து ஒன்றன்பால்விகுதி, வருமொழிமுதலுயிர் வரக்குற்றியலுகரம் கெடாதுநின்றது "உயிர்வரினுக்குறள் மெய்விட்டோடும்" ஓடும் என்ற இலேசால். உய் பகுதி, ஓகாரங்கள் ஐயப்பொருளன. (௧0)

11. (இ-ள்.) பொற்புக்கு அரசை - அழகிற்குக்கு அரசியாகிய சீதாபிராட்டியை, விடுத்தி என புகல - விடுவிப்பாய் என்று அங்கதன்சொல்ல, மறுத்து-இகழ்ந்துமறுத்து, இப்புன்குரங்கை - இந்த அற்பக்குரங்கினை, மல்போர் அரக்கர் - தன் அருகினின்ற மல்யுத்தத்திற்சிறந்த அரக்கரை (நோக்கி) கோறிர் என - கொல்லுங்களென்று ஏவ, வந்தோர்-போரிறகுவந்த அந்த அரக்கர்களுடைய, ஆவி அறமாய்தது - உயிரைப்பற்றறக்கெடுத்து, வெற்பு ஆர் - மலையையொத்த, தடம தோள் அங்கதனும் - உயர்ந்ததோளையுடைய அங்கத

னும், இராமன் உழை இன் - இராமமூர்த்தியினிடத்தே, விசாவின்றிப்போய்-விரைந்துசென்று, கல்பாடு அழித்த - அட்டகுலபர்வதங்களின் பெருமையைக்கெடுத்த, புயத்து அரக்கன் - புயத்தையுடைய இராவணனது, செய்தி அனைத்தும் - செய்திமுழுமையும், கட்டுரைத்தான்-விடாதுதொடுத்துக்கூறினான்.

கோறிர் முன்னிலைப்பன்மை யேவல்வினைமுற்று கொல் பகுதி, முதல் நீளுதல் விகாரம், து சாரியை, லகரக்கேடுந் தகரத்திரிபும் சந்தி, இர் பன்மையேவல் விகுதி. ஆர் உவமை யுருபிடைச்சொல். (கக)

12. (இ-ள்.) செம் கண் புலிபோதகு அன்ன - சிவந்தகண்களையுடைய புலிப்போத்தையொத்த, அங்கதன் செப்பும் ஏல்வை - அங்கதன்கூறுங்காலத்தில், கங்கைக்கு இறைவன் - கங்கைத்து●றக்குத் தலைவராகிய இராமமூர்த்தி, துனைவில்-விரைந்து, கடல் தானை சூழ - கடல்போலப்பரந்த எழுபது வானரசேனைவெள்ளம்புடைசூழ, வெங்கண்கொடியோர் - அஞ்சாமையையுடைய இராவணன்முதலியோர், மிடைகின்ற - நெருங்கிய, இலங்கைமூதூர்-இலங்கையாகிய தொன்றுதொட்டுள்ள நகரை (சூழ்ந்த) மங்குல் - மேகங்கள், புறம்போகு - புறத்திற்செல்ல, உயர் இஞ்சி - (மேகமண்டலத்துக்கும்) அப்பாற்சென்றமதிலை, வளைந்துகொண்டான் - முற்றுகைசெய்தார்.

அன்ன உவமவுருபிடைச்சொல்லடியாகப்பிறந்த குறிப்புவினைப்பெயரெச்சம் அன் இடைச்சொற்பகுதி, ளகரமெய்சந்தி, அ எச்சவிகுதி, போகு என்னும் வினைப்பகுதி வினையெச்சப்பொருள்மேல்நின்றது. வளைந்துகொண்டான். தற்பொருட்டில்வந்த வினைமுற்று-வளை பகுதி, து சாரியை, நகரத்தோற்றமும் ளகரம் ணகரமாகத்திரிதலும் சந்தி, டகரமெய் இடைநிலை, ஆன் உயர்திணையாண்பால்விகுதி. (கஉ)

13. (இ-ள்.) கரை கொன்று இரங்கு - கரையொடுமோதியொலிக்கும், கடலின் - கடல்போல, கவி வெள்ளம் எய்தி - எழுபதுவானரசேனைவெள்ளம், புரிசைப்புறத்தின் இறுத்து - மதிலின்புறத்தில் முற்றுகைசெய்து, ஆர்க்கும் பூசல் கேட்டு - கோஷிக்கும் வீரகோஷத்தைக்கேட்டு, வரைகொன்ற - மலையைவென்ற, திண்தோள் அரக்கன் - திண்ணியதோள்களையுடைய இராவணனுடைய, திறல் மள்ளர்யாரும் - வெற்றியையுடைய வீரர்கள் எல்லாரும், பொருவெம் சிலை கை - போர்செய்யும் கொடியவில்லையேந்திய கையையுடைய, பெரியோன் ஒடும் - இராமமூர்த்தியோடும், போரின் ஏற்றார்-போர்த்தொழில்செய்ய எதிர்ந்தார்கள்.

யார் என்பதில் யா என்னும் வினாவிடைச்சொல் எல்லாம் என்னும் பொருள்மேல் நின்றது. இரங்குகடல் பொருசிலைவினைத்தொகை நிலைத்தொடர்கள். (கங)

14. (இ-ள்.) கம்பம் ஆர் களிறு-கம்பத்திற்கட்டிய யானைச்சேனையையுடைய, பிரசங்கன் கனன்று செல்ல - பிரசங்கனென்னும் அரக்கன் கோபித்துப் போர்முகத்துவர, சம்பாதி-சம்பாதியென்னும் வானரசேனைத்தலைவன், வெற்பு ஒன்று எறிந்து - மலையொன்றைவேரொடுபறித்துவீசி, அவன் தனை மாய்த்தான் - அந்தப்பிரசங்கனைக்கொன்றான், வம்பு ஆர் மலர் தாருவின்

வாசநிறைந்த மலரையுடைய விருக்ஷத்தால், மாருதிமோதல் ஓடும்-அனுமன் அடிக்க, சம்புமாலி - சம்புமாலியென்னும் அரக்கன், வெம்பா உயிர்போகி-மனமொந்து உயிர்கழிந்து, விழுந்தனன்-நிலத்தின்மேல்விழுந்தான்.

கம்பம் ஈறுதொக்குநின்ற மகரமெய்யின்மேல் வருமொழிமுதல் உயிரேறிக் கம்பார் எனநின்றது. கனன்று வெம்பா இறந்தகாலவினையெச்சங்கள் கனல் பகுதி, லகரம் னகரமாகத்திரிதல் சந்தி, றகரமெய் இறந்தகால இடைநிலை, உ எச்சவிகுதி. வெம்பு பகுதி, உகரக்கேடுசந்தி, ஆ இறந்தகாலவினையெச்சவிகுதி. (கச)

15. (இ-ள்.) வென் வேல் - வெற்றியையுடைய வேலையேந்திய, பிரதபன் தன் உயிர் வீய-பிரதபன் என்னும் அரக்கனுடைய உயிர் அழிய, வெம்போர்-கொடியபோர்த்தொழிலையுடைய, ஒன்னார் வணங்கும் - பகைவர்வணங்கும், நளன் - நளனென்னும வாநரத்தலைவன, ஓர் கதை கொண்டு மாய்த்தான்-ஒருதண்டாயுதத்தால் அவனைக்கொன்றான், கல் நாடு - மலைவிரும்பும், திண் தோள் தபனன் தனை-திண்ணிய தோளையுடைய தபனனென்னும் அரக்கனை, கேசன் காய்ந்து-கேசனென்னும் வாநரசேனைத்தலைவன் கோபித்து, பொன் நாடு மாதர்-வீரசுவர்க்கத்திலுள்ள தெய்வப்பெண்களினது, நலம் கூட்டுண-இன்பத்தைக் கொள்ளைகொண்டு அநுபவிக்க, போக்கினான் - செலுத்தினான.

வென் வெற்றி. இவ்வுலகத்தின் இன்பத்தினும் தேவருலகத்தி னின்ப மிக்கதாதலால் கூட்டுண என்றார். கூட்டுண காரியப்பொருள்மேல் நிற்றலால் எதிர்காலவினையெச்சம் கூட்டுண் பகுதி, அ எச்சவிகுதி. போதல் வினைக்குத் தபனனும் போக்குதல் வினைக்குக் கேசனும் வினைமுதல்களாதலால் போக்கினான் என்பது இருவரின் முடியும் ஒருபிறவினைமுற்று. (கரு)

16. (இ-ள்.) வில் நுங்க வீங்கு-வில்திளைக்கப்பருத்த, திணி தோள் உடை-திண்ணியதோளையுடைய, மித்திராக்கன் தன் - மித்திராக்ஷனென்னு மரக்கனுடைய, அங்கம்வீழ - சரீரம் நிலத்தில்மேல்வீழ, விறல் வீடணன்-வெற்றியையுடைய விபீஷணர், தண்டின் மாய்த்தான் - தமது தண்டாயுதத்தினால் உயிர்வாங்கினார், மன்னற்கு இளையோன் - இராமமூர்த்திக்கு இளைய இலட்சுமணர், விருபாக்கனை-விருபாக்கனென்னு மரக்கனை, வாளின் ஒன்றால்-ஒருவாள்வெட்டால், தென் அம்புலத்தோர்-தென்புலத்தோர், விருந்து ஏற்ப செலுத்தினன் - வந்து விருநதெதிர்கொள்ள அனுப்பினார்.

நுங்குதல் விழுங்குதல், விருபாக்கன் வேறுபட்ட பார்வையையுடையவன். வில்லிறுகு விழுங்குதலில்லாமையால் விட்ட இலக்கணை. ஏறப எதிர்காலவினையெச்சம ஏல் பகுதி, பகரமெய்விரித்தல் விகாரம், லகரம் றகரமாகத்திரிதல் சந்தி, அ எச்சவிகுதி. (கசு)

17. (இ-ள்.) வெயில் கான்று - கிரணத்தைவீசி, இருள் சீத்து எழு-இருளையோட்டியெழுந்த, வெம் கதிர் செல்வன் மைந்தன் - சூரியன்புதல்வனாகிய சுக்கிரீபன், அயில் வேல் பிரகத்தனை - கூரியவேலையேந்திய பிரகத்தனென்னும் அரக்கனை, வெம களத்து ஆவி உண்டான் - போர்க்களத்தில் அவன்பிராணனைச்செகுத்தான், துயிலாதவென்றி-ஊக்கமிகுந்த வெற்றியையுடைய, மயிந்தன்-மயிந்தனென்னும் வாநரசேனாபதி, பொருதோமரத்தால் - போர்

செய்தற்குரிய எறியாயுதத்தால், வயம் வெம் சிலை - வெற்றியையுடைய கொடியவில்லையேந்திய, வச்சிரமுட்டி-வச்சிரமுட்டியென்னும் அரக்கனை, வாகைகொண்டான்-வெற்றிகொண்டான்.

மைந்தன் பிதாவின் வன்மையாயுள்ளவன் எனநிற்றலால் காரணப்பெயர். மைந்து (வன்மை) பகுதி. கான்று, சீத்து, இறந்தகாலவினையெச்சங்கள்; கால் பகுதி, லகரம் னகரமாகததிரிதல் சந்தி, றகரமெய் இடைநிலை, உ எச்சவிகுதி, சீ பகுதி, துயிலாத எதிர்மறைப்பெயரெச்சம் துயில் பகுதி, ஆ எதிர்மறைவிகுதி, அனைத்தும் ஒருபகுதி, து சாரியை, உகரக்கேடுசந்தி, அ எச்சவிகுதி, வெயில்கான்ற இருள் சீதது, துயிலாத வெனறி பொருள்கட்கு உரியவினை கூறுது ஒப்புடைவினை கூறியது குணவணி. (கஎ)

18. (இ-ள்.) கங்கைநாடன்-இராமமூர்த்தி, அழல் வெம் பகுவாய் - நெருப்பைக்கொப்புளிக்குங் கொடியபிளந்தவாயையும், திறல் - வெற்றியையுமுடைய, அக்கினிகேது - அக்கினிகேதுவும், ஓங்கும் ஏழுவென்ற - உயர்ந்த தூணினைவென்ற, திண் தோள் வலி-திண்ணியதோளின்வன்மையையுடைய, ரச்சமிகேது-ரச்சமிகேதுவும, ஒன்னார் தொழும் - பகைவர்வணங்கும், எச்சகோபன்-எச்சகோபனும, அவிர் ஆழி-விளங்குஞ்சக்கரத்தையேந்திய, சுதந்தன் என்னும் - சுதந்தனுமாகிய, கழிவெம சினத்தார்-மிகுந்தகொடியகோபத்தை யுடையவரது, உயிர் உண்டனன-உயிரைக்கொள்ளைகொண்டார்.

உயிரைப்போக்குதலின்றி உண்ணுதலின்மையால் விடாத ஆகுபெயர். குணவணி யெனினும ஒக்கும். (கஅ)

19. (இ-ள்.) சுடுவெம் சினத்த - சுட்டுவருத்துங் கொடியகோபத்தையுடைய, வயம் மீளி - வெற்றிமிக்க மீளிப்பருவத்தையுடைய, துமிந்தன் என்போன் - துமிந்தனென்னும் வாநரசேனபதி, அடல் கூர் அசனி - வலிமைமிகுந்த இடியேறனையொத்த, பிரபன் தனது ஆவிகொண்டான் - பிரபனது உயிரைக் கொள்ளைகொண்டான், கடலும் சுவற்றும் - கடலையும் வற்றச்செய்யும், கனல் வெம் கண - வடவாக்கினிபோன்ற கொடியகணைகளையுடைய, குசேனன்-குசேனனென்னும் அரக்கன், வெய்யமிடல்-கொடிய வன்மையையுடைய, வித்துன்மாலி உயிர் - வித்துன்மாலி யென்னும் அரக்கனுயிரை, விண் அகத்து ஏற்றினன் - வீரசுவர்க்கத்தில் குடியேற்றினன்.

மீளி பாலபருவத்துக்கு மேற்பட்டபருவமாதலால் மீளிப்பருவம் என்றும். சுவற்றும் என்னும் பிறவினைப்பெயரெச்சம் கண் என்னும் வினைமுதற்பொருள்கொண்டது. சுவற்று பிறவினைப்பகுதி. தன்வினையில் சுவறு எனவரும். வெய்ய பண்படியாகப்பிறந்த குறிப்புவினைப்பெயரெச்சம். வெம்மை பகுதி, மீளித்துமிந்தன் எனப்பாடங்கொள்க (கக)

20. (இ-ள்.) இ ஆறு - இந்தவகையால், இராமன் - இராமமூர்த்தி, எரிதும்பி இலங்கு-அக்கினியைச்சிந்திவிளங்கும், வை வேல் - கூரியவேலையேந்திய, வெம் வாய் அரக்கர்தம்மை - கொடிய அரக்கர்களை, வில்கொடு நூழிலாட்டும் - தாமேந்தியவில்லால் நூழிலாட்டுச்செய்யும், அவ்வேலை தன்னில்-அக்காலையில், திரைவேலையின்-அலையையுடைய மேலைக்கடலில், ஆழிவெய்யோன் - ஒருசக்கரத்தையுடைய சூரியன், செவ்வான் - செவ்வானமானது, களம்

போல் குடபால் உற-போர்க்களத்தைப்போல மேலைத்திசையில்பரவ, சென்றுசேர்ந்தான் - அத்தமித்தான்.

இராமன் யாவரையுஞ் சந்தோஷிப்பிக்கிறவன். நாழிலாட்டு சேனையோட வேல் எறிதல். எரிவினைமுதற்பொருளில்வந்த இகரவிகுதியொடுபுணர்ந்து குன்றியதொழிற்பெயர். தும்மி இறந்தகாலவினையெச்சம் தும்மு பகுதி, உகரக்கேடு சந்தி, இ எச்சவிகுதி, எரிதும்மி குணவணி. செவ்வான்களம்போல் உவமையைப் பொருளாகவைத்துக்கூறியது விபரீதவுவமையணி. (உ0)

21. (இ-ள்.) கங்குல் பொழுதில் - இராக்காலத்தில், நிருதர்க்கு இறை-அரக்கர்க்குத தலைவனாகிய இராவணனுக்கு, காதல் மைந்தன் - விருப்பமிக்கபுத்திரனாகிய இந்திரசித்து, வெம் கை சிலையின் - தனது கொடியகரத்திலேந்திய வில்லிலேறிட்டெய்த, கணைமாரி விலக்கி - சரவருஷத்தைத்தடுத்து, அன்னோன்-அந்த இந்திரசித்தினுடைய, துங்கம் கொடிஞ்சி - உயர்ந்தமொட்டையுடைய, தடம் தேர் துகள் ஆக - பரந்ததேர்பொடியாக, வீசி-மேலெடுத்துவீசி, கொடும சிங்கப் போத்து என்ன - கொடியஆண்சிங்கத்தைப்போல, அங்கதன் சீறி ஆர்த்தான் - அங்கதன்கோபித்து வீரகோஷஞ்செய்தான்.

இறைகாதல் மைந்தன் முறைக்கியை பொருளில்வந்த நான்காம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். காதல் இடைப்பிறவரல். (உக)

22. (இ-ள்.) மான் தேர் அழிந்த - குதிரைபூண்டதேர் சிதைந்த, திறல் இந்திரசித்து-வெற்றியையுடைய இந்திரசித்துவானவன், வானில்-ஆகாயத்தில் (பூத்த) மீன்தோய்படலத்தில் - நட்சத்திரங்களோடு கலந்த மேகபடலத்தில், மறைந்து-தன்னுருக்காட்டாமல் ஒளிதது, வெகுண்டுநோக்கி-கோபித்துப்பார்தது, சான்றோர்புகழும்-பெரியோர்புகழும், தனிவில் கை-ஒப்பில்லாதவில்லையேந்திய கரங்களையுடைய, தலைவர் தம்மேல் - இராம இலட்சுமணர்மேல், ஊன்தோய் - பகைவர்தசைகலந்த, பகுவாய் அரவம் கணை - பிளந்தவாயையுடைய சர்ப்பபாணத்தை, உந்தி ஆர்த்தான் - செலுத்தி வீரகோஷஞ்செய்தான்.

இந்திரசித்து இந்திரனைச்செயித்தவன். தேரழிந்த இந்திரசித்து உயர்திணையொடுசார்ந்த அஃறிணை உயர்திணைமுடிபேற்றுவருதலால் திணைவழுவமைதி. ந-பொது "உயர்திணைதொடர்ந்த" என்னுமசூ ஆல். உந்தி இறந்தகாலவினையெச்சம் உந்து பகுதி. (உஉ)

23. (இ-ள்.) செம கண் - செவ்வந்தகண்களையும், பனைகை-பனைமரம்போன்றகையையும, கொலை-கொலைத்தொழிலையுமுடைய, வேழம்-யானையானது, சிலம்பிநூலின-சிலம்பிநூற்றநூலால், தங்கி சிமிழ்ப்புண்டு கிடந்தாலென்ன-பொருந்திக கட்டுப்பட்டுக்கிடந்தாற்போல, தம்பி ஓடும - இலட்சுமணரோடும், பொங்கும்தழல்வாய் - கொதிக்கும்விஷாக்கினியைக்கொப்புளிக்கும் வாயையுடைய, புயங்கம்கணை - சர்ப்பபாணமானது, தோள்பிணிப்ப - தமதுதோளைச் சிக்கெனக்கட்டலால், இகல் வென்றி வீரன் - போரில்வெற்றியையுடைய இராமமூர்த்தி, வெம் கண்களத்தில் - கொடிய இடம்பரந்த போர்க்களத்தில், கிடந்தான்-மூர்ச்சித்துக்கிடந்தார்.

கிடந்தாலெனவிரிதலால் கிடந்தென தொகுத்தல்விகாரம். சிமிழ்ப்புண்டு செயப்பாட்டுவினையெச்சம் சிமிழ் பகுதி, பகரமெய் விரித்தல்விகாரம், பகரமெய் சந்தி, உண்புதியன புகுதலால்வந்த செயப்பாட்டு வினைவிகுதி, டகரமெய் இறந்தகால இடைநிலை, உ எச்சவிகுதி. பிணிப்ப காரணப்பொருளில்வருதலால் இறந்தகாலவினையெச்சம பிணி பகுதி, பகரமெய்விரித்தல் விகாரம், பகரமெய் சந்தி, அ எச்சவிகுதி. (௨௩)

24. (இ-ள்.) செய்ய - செவந்த, தாமரைகண்ணன் - தாமரைமலர்போன்ற கண்களையுடைய இராமமூர்த்தியின், செய்திநோக்கி - அவசமடைந்தசெய்தியைப்பார்த்து, வெய்யவன் காதலன் - சூரியன்புத்திரனாகிய சுக்கிரீபன், வெகுளிமீகொள - கோபந்தலைக்கேற, ஐயிரு தலைவர்போந்து - பத்துவானர சேனைத்தலைவர்சென்று, அரக்கன்மைந்தனை - இராவணன்புத்திரனாகிய இந்திரசித்துவை, கையினில் கவர்க என - உயிரோடு கையாற்பிடிக்கக்கடவீரென்று, கடிதில் தூண்டினான் - விரைந்துசெலுத்தினான்.

செய்ய பண்படியாகப்பிறந்த குறிப்புவினைப்பெயரொச்சம் செம்மை பகுதி, ஈறுகெடுதலும் மகரமெய் யகரமெய்யாகத்திரிதலும் யகரத்தோற்றமும் சந்தி, அ எச்சவிகுதி, போந்து இறந்தகாலவினையெச்சம் புகு பகுதி, ஈறுகெடுதலும் உகரம் ஒகாரமாகத்திரிதலும் நகரத்தோற்றமும் சந்தி, தகரமெய் இறந்தகாலவிடைநிலை, உ எச்சவிகுதி, கவர்கென வியங்கோள் வினைமுற்றின் ஈறுதொக்கது. (௨௪)

25. (இ-ள்.) தூண்டிய - சுக்கிரீபனாலேவப்பட்ட, மாருதிமுதல தூயவர் - அனுமன்முதலிய புனிதகுணமுடையோர், தேண்டினர் - தேடிப்பார்த்தார்கள், வெய்யவன் - கொடியகுணமுடைய இந்திரசித்து, வான் இடைசெல்ல - ககனமார்க்கமாகச்செல்ல, காண்டலும் - அவன் இவர்களைக்கண்ட அப்பொழுதே, கணைகளால் வீழ்த்தி - தமது பாணங்களால் அவர்களைத் தரைப்படுத்தி, தாதைபால் மீண்டனன் - தனதுபிதாவாகிய இராவணனிடத்து விரும்பிச்சென்று, புகுந்தமை விளம்பினான் - நடந்தசெய்தியை எடுத்துச்சொன்னான்.

முதல பண்படியாகப்பிறந்த குறிப்புவினைபபெயரொச்சம் முதல் பகுதி, தேண்டினர் இவ்வினைமுற்றில் ணகரமெய் விரித்தல்விகாரம். புகுந்தமை இறந்தகாலவிடைநிலை பெற்றுவந்த தொழிற்பெயர். (௨௫)

26. (இ-ள்.) தாதையும் - இராவணனும், மைந்தனைத் தழுவி - தனது புத்திரனாகிய இந்திரசித்துவைத்தழுவி, ஒற்றரால் - தூதுவரால், சீதையைகொணர்ந்து - சீதாபிராட்டியைக் கொண்டுவந்து, அவர் செய்தி காட்டு என - இராம இலக்ஷுமணருடைய செய்தியைக் காட்டாயென்று, ஓதலும் - சொல்ல, புட்பகத்து ஏற்றி (இந்திரசித்தின் ஏவலால் காக்கும் அரக்கிகள்) புட்பகவிமானத்திலேற்றி, ஒல்லை போய் - விரைந்து (போர்க்களத்திற்) சென்று, போது அரி - தாமரைமலர்போலச் செவ்வரிபரந்த, நெடும் கண்ணாள் - பரந்தகண்களையுடைய சீதாபிராட்டி, புலம்ப காட்டினார் - மனம்வருந்திப் புலம்பக்காட்டினார்கள்.

சீதாபிராட்டியை அரக்கமாதர்கள் புட்பகவிமானத்திலேற்றி மூர்ச்சித்துக்கிடந்த ராமலட்சுமணரைக் காட்டியது. பிரமாஸ்திரத்திற் கட்டுண்டகாலததிலெனக் கம்பராமாயணத்திற் கூறியிருக்கின்றது, இங்கு நாகபாசத்திற் கட்டுண்டகாலததில் எனக்கூறுதல் கற்பபேதத்தால என உணர்க. கொணர்ந்து இறந்தகாலவினையெச்சம் கொணுபகுதி, முதல் குறுகலும் ரகமெய் விரிதலும் விகாரம், ந்கரமெய் சந்தி, த் இடைநிலை, உ எச்சவிகுதி. ஒல்லை விரைவுப்பொருள்மேல் நின்ற இடைச்சொல். (உசு)

27. (இ-ள்.) திரிசடை - விபீஷணன் புத்திரியாகிய திரிசடை என்பவள், அரில் தப உணர்ந்தனள் - குற்றமறத்தெரிந்து, நீ அழுங்கல் என - நீ வருந்தாதேயென்று, மனம் கொள தெருட்ட - மனந்தெளிய தெளிவிக்க, தேறிய-மனந்தெளிந்து புலம்புதலொழிந்த, புரி குழல் அணங்கினை- மைப்புரியையொத்த கூந்தலையுடைய சீதாபிராட்டியை, காக்கும் புன்மையோர் - இமைகொட்டாமற் காக்கும் தீய அரக்கியர், மரு மலர் சோலையில் - வாசமிக்கமலர்களையுடைய அசோகவனத்தில், சிறை வைத்தார் - சிறையில் வைத்தார்கள்.

தப உரிச்சொல்லடியாகப் பிறந்த நிகழ்காலவினையெச்சம், தபு பகுதி. அழுங்கல் எதிர்மறை யொருமை யேவல் வினைமுற்று அழுங்கு பகுதி,உகரக்கேடு சந்தி, அல் விகுதி. அழுங்கற்க எனப் பொருள்கொண்டு அல் எதிர்மறை வியங்கோள் வினைமுற்று விகுதியெனக் கூறினும் அமையும்.தெருட்ட நிகழ்காலத்தில்வந்த பிறவினை வினையெச்சம் தெருட்டு பிறவினைப்பகுதி. உணர்ந்தனள் முற்றெச்சம். (உஎ)

28. (இ-ள்.) முகம் ஒளி இழந்திலர்-தமதுமுகமோ ஒளியிழக்காதிருக்கின்றனர், உயிர் உண்டு ஆம் என-(அதனால்) உயிருண்டென்று, தெளிவு ஒடும்-மனம்தெளிந்து, வீடணன் - விபீஷணர், செப்பும் எல்லையில் - சொல்லுங்காலத்தில், களி ஒடும் - களிப்போடும், தடம் சிறை கலுழன் - பரந்தசிறகையுடைய கருடாழ்வார், எய்தினன் - அங்குவர, துளை எயிறு அரவு தன் - துளைபொருந்திய பற்களையுடைய சர்ப்பபாணத்தினது, தொடர்ச்சி விட்டது- கட்டுவிட்டது.

எய்தினன் முற்றெச்சம். முகம் ஒளியிழந்திலர் உயர்திணையொடுசார்ந்த அஃறிணை உயர்திணை முடிபேறறது, திணைவழுவமைதி, ந - பொது "உயர்திணைதொடர்ந்த பொருண்முதலாறும்" என்றகு-ஆல். (உஅ)

29. (இ-ள்.) தாள் - தூணையுடைய, வரைமுடி முதல் - மந்தரகிரியின் உச்சியில் (தம்பமாகநட்டு வாசுகியாற்பிணித்திழுத்த) தழும்பு தீர்ந்து - வடுவினின்றுநீங்கி, உயர்-உயர்ந்துவிளங்கித்தோன்றும், கோள் விடும் மதி என்ன-நவக்கோள்களிலொன்றாகிய சந்திரனைப்போல, குமரர் உய்ந்து எழ - இராம இலட்சுமணர்கள் வடுநீங்கிச்சீவித்தெழ, தோள்வலியால்-தனதுதோளின்வலியால், அமிழ்து எடுத்ததோன்றல் - கடலிலுள்ள அமிர்தினையெடுத்த கருடாழ்வார்தி, நீள் இரும் சிறகினல் - தமது நீண்ட பெரிய சிறகுகளினால், நீவி ஏகினன் - தடவிச்சென்றான்.

தனதுதாயாகிய விநதையின்சிறை நீக்குதற்பொருட்டுத் திருமாலைச்சரணடைந்து அமுதங்கொண்டுவந்தமையால் அமிழ்தெடுத்த தோன்றல் என்றார். உவமைக்கும் பொருளுக்கும் ஒற்றுமையுண்மையால் உவமையின்றொழிலைப் பொருட்கேற்றி வடுநீங்கி என்றும். நீவி இறந்தகாலவினையெச்சம் நீவு பகுதி, உகரக்கேடு சந்தி, இ எச்சவிகுதி. சந்திரன் தம்பமாக இருந்தது "மாயிருஞாலந்தாழியாமத்துமந்தரமதிதறியாக" என இந்நூலில் வருதல்காண்க.

30. (இ-ள்.) முருகு உறழ் செவ்வியோர் - முருகக்கடவுளை ஒத்த இராமலட்சுமணர்கள், குனித்த - வளைத்த, மொய்ம்பு உடைய-வலிமையையுடைய, வரிசிலை - கட்டமைந்த வில்லின், நாண் ஒலி - நாணத்தொனியும், மடித்த வாய் உடைய - மடித்தவாயையுடைய, பரிதி சேய் முதலிய - சூரியன்புதல்வனாகிய சுக்கிரீபன்முதலிய, படைஞர் - சேனாவீரருடைய, ஆர்ப்பு ஒலி-வீரகோஷமும், உரும் என்ன - இடியேற்றைப்போல, இராவணன் - இராவணனுடைய, செவியின் உற்ற - காதில்வந்துதாக்கின.

உற்றதே உற்றவே எனப்பாடங்கொள்க. முருகன் முருகு ஈறுதொக்குநின்றது. படைஞர்பொருட் பெயர்ச்சொல் படை பகுதி, ஞகரம் பெயரிடைநிலை, அர் பலர்பால்விகுதி. நாணொலி, ஆர்ப்பொலி என வினைமுதல்கள் இரண்டாதலால் உற்ற எனப் பன்மைப்பயனிலைதந்தார். உடைய குறிப்பு வினைப்பெயரொச்சம் இது ஈறுதொக்குநின்றது. (௩௦)

31. (இ-ள்.) கேட்டலும்-கேட்ட அப்பொழுதே, இராவணன் - இராவணனானவன், கிளர்ந்ததானைமேல்-போர்க்கெழுந்தசேனையின்மேல், பூட்டுவில்-நாண்பூட்டிய வில்லையேந்திய, புகை நிறம் கண்ணன்-தூமாக்ஷனை (நோக்கி) போக என - போர்க்குச்செல்லக்கடவாயென்றுகூற, வாள் திறல் ஒடும்-வாளின்வன்மையோடும், செருமலைய - (அவ்வரக்கன்) போர்செய்ய, மாருதி-அனுமன், தாள் துணைபிடித்தனன் - அவனது இரண்டுகால்களையும் ஒருசேரப்பிடித்து, தரையின் எற்றினன்-நிலத்தின்மேல் அடித்துக்கொன்றான்.

கிளர்ந்த இறந்தகாலவினையெச்சம் கிளர் பகுதி, போக என்னும் வியங்கோள் வினைமுற்றின் ஈறுதொக்கது. பிடித்தனன் முற்றெச்சம். (௩௧)

32. (இ-ள்.) கச்சை - கழுத்திடுகயிற்றையும், அம்புகர்முகம்-அழகியபுள்ளிதங்கிய முகத்தையும், களி-மதச்செருக்கையுமுடைய, நல்யானைபோல்-அரசிலக்கணமமைந்த யானையைப்போல், வச்சிரத்து எயிற்றவன்-வச்சிரதந்தனானவன், மலைய - போர்செய்ய, வாலி சேய் - வாலியின்புத்திரனாகிய அங்கதன், அவன் கையில் - அவன் கையிலுள்ள, நச்சுவாள் பறித்து - நஞ்சுபூசிய வாளைப்பறித்து, செச்சை நாள்மலர் - வெட்சியினது அன்றலர்ந்த மலர்மாலை, தாழ்முடி தலை - தங்கிய மகுடமணிந்த தலையானது, சிதற வீசினன்-சிதறும்படி வெட்டினன்.

நல்யானை என்றமையால் அரசிலக்கணம் அமைந்த யானை என்றும். அரசிலக்கணமாவன ஏழுமுப்புயர்ந்து ஏழுறுப்புத்தாழ்ந்திருத்தல். நஞ்சு நச்சுமென்றொடர் வேற்றுமைவழியில் வன்றொடராதல் ந-உயி-௩௪-ஆம் சூ-ஆல்.()

33. (இ-ள்.) மாருதிக்கு அகம்பனன் உடைந்து - அனுமனுக்கு அகம்பனன் தோற்று, வான் தவம் - ஆகாயத்தில் தவழும், கார் நிறத்து இராவணற்கு-

மேகம்போலு நிறத்தையுடைய இராவணனுக்கு, உரைக்குங்காலையில் - சொல்லுங்காலத்தில், பார்புதைத்து எழும் - நிலவுலகைப் புதைத்துப்பரந்த, இருள் பருகி - இருளைக்குடித்து, பாய்திரை - பரந்த அலைகளையுடைய, ஆர்கலி அகடு கீண்டு - கடலின் வயிற்றைக்கிழித்து, அருக்கன் தோன்றினான்-சூரியனுதயஞ்செய்தான்.

பார் முதனிலைதிரிந்த தொழிலாகுபெயராய் உலகின்மேனின்றது, பர என்னும் வினைப்பகுதி முதல் நீண்டு ஈற்றகரங்கெட்டுப் பாரெனநின்றது. கார் பண்பாகுபெயராய் மேகத்தின்மேல் ஈறுகெட்டு "இணையவுமென்றதினால் ஈற்றுகரமுங்கெட்டு முதல்நீண்டு நின்றது. இருளையோட்டுதலும் கடலினடுவிற்றோன்றுதலும் ஆகிய உரியபொருளின் வினைதோன்றஇருள் பருகியகடுகீண்டென ஒப்புடைப்பொருள் வினைதந்துகூறியது குணவணி. (௩௩)

34. (இ-ள்.) இணை விழி - இரண்டுகண்களும், எரிகவிழ்த்து புகைய - அக்கினியைச் சிந்திப்புகைய, ஏற்று எதிர்வரு - எதிர்ந்து முன்னிட்ட, பிரகத்தனை - பிரகத்தனென்னு மரக்கனை, நிருதர் வெம் கூற்று என - அரக்கர்களுக்குக் கொடிய யமனைப்போல, திரியும் நீலன் - திரியாநின்ற நீலனென்னும் வாநரசேனபதி, கீழைவாயிலில்-இலங்கைக்கீழைவாசலில், குருதிவாய் வழி உக-உதிரம் வாயின்வழியேசிந்த, குத்தி வீழ்த்தினான்-குத்திநிலத்தின்மேலே விழுத்தினான். (௩௪)

35. (இ-ள்.) அகம்பனன் திரிசிரா பனசன் - அகம்பனும் திரிசிராவும் பனசனும், ஆடல் வேல் - வெற்றிதங்கிய வேலையேந்திய, நிகும்பன்-நிகும்பனும், ஒள்வாள் அதிகாயன்-ஒள்ளிய வாளையேந்திய அதிகாயனும், நீள் கும்பன்-உயர்ந்தோங்கிய கும்பனும், நகும் கதிர்வேல் - விளங்காநின்ற ஒளியமைந்த வேலை ஏந்திய, இராவணி நராந்தகன் - இந்திரசித்தும் நராந்தகனும், திகழ்ந்த வேல் - விளங்காநின்ற வேலையேந்திய, மகோதரன் தேவராந்தகன் - மகோதரனும் தேவராந்தகனும்.

அகம்பனன் என்பதுமுதல் தேவரந்தகன்காறும் எண்ணும்மைதொக்குநின்றதொடர். (௩௫)

36. (இ-ள்.) ஈங்கு இவர் முதலிய - இவ்விடத்து இவ்வரக்கர் முதலாகிய, தலைவர் எண்ணிலர் - அளவில்லாத இராக்ஷதசேனபதிகள், வாங்கிய வில்லினர்-வளைத்த வில்லையேந்தினவரும், மடித்த வாயினர்-மடித்த வாயையுடையவரும், வீங்கிய தோளினர் - பருத்த தோள்களையுடையவரும், வெகுண்ட நெஞ்சினர் - கோபித்தெழுந்த மனமுடையவருமாய், பாங்கினில் - தனது பக்கங்களில், அளப்பு அரும்படை ஓடு ஏக - அளவு செய்தற்கரிய சேனையோடுவர.

அகம்பனன் என்னுஞ் செய்யுள் முதல் மாற்றலர் என்னுஞ் செய்யுள்காறும் குளகம் ஆதலால் ஏக என்னும் வினையெச்சம் பின்வரும் செய்யுளில் எய்தினான் என்னும் வினைமுற்றின் முதனிலைகொண்டது. (௩௬)

37. (இ-ள்.) மாற்றலர் - பகைவர்கள், வயிறு எரி தவழ்ந்து - தமது வயிற்றில் நெருப்புத்தவழ்தலால், மாழ்குற - மயங்கவும், கூற்றமும் - இயமனும், கண் புதைத்து அஞ்ச-தனது கண்களைமூடி அஞ்சி யொதுங்கவும், கொல் சினத்து-கொல்லுங் கோபமிக்க, ஏற்று உரி - இடபத்தின்றோலாற் போர்த்த, முரச இனம் - போர் முரசின் கூட்டங்கள், இடியின் ஆர்ப்பு எழ - இடியைப்போலக் கோஷிக்கவும்,ஆற்றல் சால்-வலிமைமிக்க, இராவணன்-இராவணனானவன், அமரில் எய்தினான் - போர்க்களத்தில் வந்தான்.

மாழ்குற நிகழ்காலவினையெச்சம், மாழ்குறு பகுதி. (௩௭)

38. (இ-ள்.) கொய் உளை - கொய்த புறமயிரினையுடைய, சுவல் பரி கோடி- பிடரினையுடைய கோடிகுதிரைகளை, பூட்டிய - தொடுத்த, வையம் ஊர்ந்து- தேரைநடத்தி, அடு கணை மழை - கொல்லுதற்குரிய சரவருஷத்தை, பொழிந்திடும் வெய்யனை - பெய்யும் இராவணனை, காண்டலும் - கண்ட அப்பொழுதே, மாருதி வெகுண்டு - அநுமன் கோபித்து, எய் எனும் அளவையின்- எய் யென்னுங்காலத்தில், எதிர்ந்து கூறுவான் - எதிர்ந்துசொல்லாநின்றான்.

பொழிந்திடும் நிகழ்காலப்பெயரெச்சம், பொழி பகுதி.து சாரியை, நகரத்தோற்றமும் உகரக்கேடும் சந்தி, இடு பகுதிப்பொருள்விகுதி. அனைத்தும் ஒருபகுதி, உம் பெயரெச்சவிகுதி இது நிகழ்காலத்தின்மேல்நின்றது.(௩௮)

39. (இ-ள்.) கரும் தடம் கண்ணி - கரிய பரந்த கண்களையுடைய உமாதேவியாரை, பங்கன் வாழ் - இடப்பாகத்திலுடைய சிவபெருமான் வாழாநின்ற, கயிலை எடுத்த - வெள்ளியங்கிரியை வேரோடுபறித்தெடுத்த, உன் புயம்வலி காண்பான் - உனது இருபதுபுயங்களின் வன்மையைக்காண, பொருந்தினன் - வந்தேன், எனது மார்பு இடை - எனதுமார்பினிடத்து, ஒருகால் குத்து என நின்று - ஒருதரங் குத்தாயென்று தாழ்ந்து நின்று, போர் இரப்ப- போரினை யிரந்துவேண்ட, என்னை முன்னர் விரைந்து-என்னை முன்பு விரைவாய், குத்துக என்று - குத்தக்கடவாயென்று, அரக்கன்-இராவணன், வெற்பு உறழ் - மலையையொத்த, மார்பு எதிர் கொடுப்ப - தனதுமார்பை யெதிர்ந்துகொடுக்க, இருந்தடம் கிரியின் அசனி வீழ்ந்தா லென்ன - பெரிய உயர்ந்தமலையின்மேல் இடிவீழ்ந்தாற்போல, எறும் வலிஅனுமன்-மிக்க வலிமையையுடைய அனுமனானவன், குத்தினன்-குத்தினான்.

குத்துக வியங்கோ ளீறுதொக்குநின்றது. வீழ்ந்தென்ன தொகுத்தல்விகாரம். முன்னர் காலவேறுபாட்டின்மேனின்ற இடைச்சொல். முன் இடைச்சொல் பகுதி, னகரமெய்சந்தி, அர் பகுதிப்பொருள்விகுதி. (௩௯)

40. (இ-ள்.) எறும் வலி தடம் தோள் - மிக்க வலிமையை யுடைய பரந்த தோளையுடைய, மாருதி புடைப்ப - அனுமன் குத்த, இழி பெரும் குருதி-சிந்தும் பெரிய உதிரவெள்ளம், கான்று ஒழுக - வெளிப்பட்டுப் பெருக்கெடுப்ப, அறிவு அழிந்து - உணர்வு அழிந்து, ஒல்லை - விரைவில், உணர்வு வந்து எய்தி - கெட்ட அறிவுவந்து கூடி, ஆற்றல் அம் கவியினை வியப்ப - வலிமையின் அழகுமிக்க அனுமனை இராவணன் மெச்ச, கறை கெழு வேலோய்-உ

போரிற்கொருவன் என்றாற்போலச் சிலைத்தொழிற்கொருவனென்றது வீரமிகுதியையுணர்த்திநிற்றலால் வீறுகோளணி. நூற்றலாவாகிய நூலை நூற்ற நூலென்றாற்போலப் படுமயர்ச்சியென்றது காரணப்பொருளில்வந்த பெயரெச்சமாதலால் நுனைழதலாலாகிய அயர்ச்சியெனக்கூறினும். அயர்ச்சி தீர்ந்து நீக்கப்பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.தொழுதனன் முற்றெச்சம். பூத்தலைய தொகுத்தல்விகாரம். ஐய பண்படியாகப் பிறந்த குறிப்புவினைப்பெயரெச்சம் ஐ பகுதி, யகரமெய்சந்தி, அ பெயரெச்சவிகுதி. இவரா செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகாலவினையெச்சம் இவர் பகுதி, ஆ இறந்தகாலவினையெச்சவிகுதி. (சச)

45. (இ-ள்.) காற்று உறழ் - காற்றினையொத்த, கடுப்பின் - வேகத்தையும், கலினம் - கடிவாளத்தையுமுடைய, மான் தடம் தேர் - குதிரைபூண்ட பரந்த தேரும், கழை சுளி-குத்துக்கோலைக்கண்டாற் கோபிக்கும், கவுள் மதம்-கபோலஞ்சிந்து மதத்தினையடைய, களிறு-யானையும், பால்திரை கவரி -பாற்கடலிற்றோன்றிய அலையையொத்த சாமரைபூண்ட, கூந்தல்மா - புறமயிரையுடைய குதிரைகளும், தறுகண்-அஞ்சாமையையுடைய, பாய்புலி போத்து அன்ன - பாயும்புலிப்போத்தையொத்த, வயவர் - காலாட்களும், வீற்றுவீற்றாக - துண்டு துண்டாக, மறிதர - மடங்கிவீழ, இராமன் - இராமமூர்த்தி, வரிசிலை - கட்டமைந்த வில்லை, குனித்தலும் - வளைக்க, அரக்கன்-இராவணன், வெகுண்டு - கோபித்து, கூற்று மெய்பனிப்ப - இயமன் உடல் நடுங்க, அனுமன்மேல் - அனுமன்மீது, கொடும் கணை பொழிந்து நின்று - கொடிய சரவருஷத்தைப்பொழிந்து நின்று, ஆர்த்தான்-கோஷித்தான்.

பிறர்க்கு வருத்தஞ்செய்யாது செல்லுதற்பொருட்டுப் புறத்திற்சூழ்ந்து செல்லுவோர் ஏந்திய குத்துக்கோலோடு மோதுதலால் கழைசுளி கவுண்மதக்களிறென்றார். பனிப்ப எதிர்காலத்தில் வந்த வினையெச்சம், பனிபகுதி பகரமெய்சந்தி, பகரமெய் விரித்தல் விகாரம். அ எச்சவிகுதி. வீற்று வீற்று இரட்டைக்கிளவி, இது பிரிந்து நின்றிசைப்பில் பொருள்படாதென்றறிக. ()

46. (இ-ள்.) மாருதி மருமம் பிளந்திட-அனுமனுடையமார்பு பிளவுபட, அரக்கன்-இராவணன், வடிகணை தொகுத்தமை-வடித்தலையுடையபாணத்தைப்பிரயோகித்ததை, நோக்கி - பார்த்து, கார்முகம் விநோதன்-வில்லின் விளையாட்டையுடையவனாகிய இராமமூர்த்தி, நிருதர்கோன் கவசம் - அரக்கர் தலைவனாகிய இராவணனுடைய கவசமும், கனல் உமிழ் - தீயைக்கக்கும், படைக்கலம்-ஆயுதமும், தடம் தேர் ஊர்தரு பாகன்-பரந்த தேரைநடத்தும் பாகனேந்திய, வரிசிலை அனைத்தும்-கட்டமைந்த வில்லும் ஆகிய இவையெல்லாம்,ஓர் ஒரு பகழியால்-ஒவ்வொரு பாணங்களால், துணிதது - துண்டுபடுத்தி, தார் புனை - வெற்றிமாலையையணிந்த, மவுலி ஒருபதும் - பத்துக்கிரீடங்களையும், கணையால் தள்ளி - பாணங்களால் வீழ்த்தி, ஈங்கு - இராவணனை நோக்கி, இவை புகல்வான் - இவற்றைச் சொல்லுகின்றார்.

ஒருபதும் என்பதினிறுதியிலுள்ள உம்மை இனைத்தென அறிபொருட்கண்வந்த முற்றும்மை. வடிக்கணை உருபும் பயனுமுடன்றொக்க இரண்டாம்

வேற்றுமைத் தொகைநிலைத்தொடராதலால் வருமொழிமுதல் வல்லெழுத்து மிக்கது. படர்க்கைக்குரிய ஆங்கென்பது முன்னிலைக்குரிய ஈங்கென்றது இடவழுவமைதி. மற்று அசைநிலை. (சசு)

47. (இ-ள்.) கூந்தல் மான்-புறமயிரையுடைய குதிரைபூண்ட, தடம் தேர்-பரந்ததேரும், அணிந்த பொன் கவசம் - அணிந்தபொன்னாலாகிய கவசமும், கொடும் சிலை - வளைந்தவில்லும், அடும் கணை புட்டில் - கொல்லாநின்ற அம்பறாத்தூணியும், காந்து - விளங்காநின்ற, எரிகவிழ்க்கும் - அக்கினியைச் சிந்தும், படைக்கலம்-ஆயுதங்களும், இன்றி நின்றனை-ஆகிய இவைகளில்லாமல்நின்றாய், சீதையை கடிதின் ஈந்து - சீதையைவிரைந்துதந்து, நின் ஆவி-உனது பிராணன், உய்தியேல்-பிழைப்பாயானால், உய்தி-பிழைப்பாய், அன்று எனில் - அல்லவாகில், இன்றுபோய்-இன்றைக்குப்போய், நாளைபோந்து-நாளைக்குவந்து, வெம் களத்தில் - கொடியபோர்க்களத்தில், நின் கிளை ஒடு விளிதியேல் - உன்சுற்றத்தாரோடு சாவாயாகில், போக என விடுத்தான்-போகக்கடவாயென்றேவினார்.

நின்னாவி அவனுமுயிரும் வேறன்மையால் ஒற்றுமைக்கிழமைப்பொருளில்வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். கிளை ஒன்றினின்றொன்று கிளைத்தல்போலத் தன்னினின்றுகிளைத்தோர் மேல்நிற்றலா லுவமையாகுபெயர். உய்தலும் விளிதலும், நிச்சயமாதலால் எதிர்காலத்தினாற் கூறவேண்டுவதை இறந்தகாலத்தாற்கூறியது தெளிவுபற்றிவந்த காலவழுவமைதி. ந-பொது. "வினைவினு மிகவினுந் தெளிவினும்" என்னுஞ்சூத்திரத்தாலுணர்க. உய் பகுதி, தகரமெய் இறந்தகால இடைநிலை, இ முன்னிலையொருமைவிகுதி. "ஆளையாவுனக்கமைந்தனவமைந்தமாருதம்போல், பூளையானது கண்டனையின்றுபோய்ப்போர்க்கு, நாளைவாவெனநல்கினான்" எனக் கம்பராமாயணத்தில் வருதல்காண்க. இது தழிஞ்சியென்னுந்துறை. (சஎ)

48. (இ-ள்.) வெள்ளி அம்பொருப்பும் எடுத்தவன் - கைலையங்கிரியையும் எடுத்த இராவணன், நாணம் சுமக்கலன் ஆகி - தோற்றநாணத்தைச்சுமக்க ஆற்றாதவனாகி, வெய்துயிர்த்து - பெருமூச்செறிந்து, பள்ளம் நீர்வேலி-கடலே அரணாகவுடைய, இலங்கையின் எய்தி - இலங்கைநகரையடைந்து, பரிவுடன் அமைச்சரோடு எண்ணி - வருத்தத்துடன் மந்திரிகளோடு ஆலோசித்து, எள் அரும் மதுகைக்கு - நிந்தித்தலில்லாத தனதுவன்மைக்கு, இணையில்லாத கும்பகன்னனை-வேறுநிகரில்லாத கும்பகன்னனை, படுதுயில் எழுப்பி-பெரியநித்திரையினின்றுமெழுப்பி, அள் இலை - கூரியதகட்டுவடிவாகிய, சூலம் திரித்து - சூலத்தைத்திரித்து, மானுடர்தம் ஆவி உண்டிடுக என-மனுடராகிய இராமலட்சுமணர்களுடைய உயிரைக் கொள்ளைகொள்ளக்கடவாயென்று, விடுத்தான்-ஏவினான்.

அமைச்சர் அமாத்தியர் என்னும் வடசொற்றிரிபு. அமா அருகில்,தியர் இருப்பவர். கும்பகன்னன் குடம்போலுங் காதினையுடையவன். பொருப்பு என்பதன் இறுதியின் உம்மை உயர்வுசிறப்புப்பொருட்டு. (சஅ)

49. (இ-ள்.) விடுத்தலும் இராவணன் ஏவ, இமைப்பில் - இமைகொட்டுத ற்குமுன்னமே, செருக்களத்து எய்தி - போர்க்களத்தை அடைந்து, வாநரவீ ரரை அள்ளி - வாநரவீரர்களைத் தனதுகைகளால் அள்ளி, வாய்ப்படுத்தும டுத்து - தனதுபெருவாயிற்பெய்து, கவுள்புடை குதட்டி-கவுளில் ஒதுக்கிக் குதட்டி, மலர்கதிர்-பரந்தகிரணத்தையுடைய, பரிதி சேய் தன்னைபிடித்து- சூரியன்புத்திரனாகிய சுக்கிரீபனைப்பிடித்து, உயர் இலங்கை புகுதலும் - செ ல்வமிக்க இலங்கைநகரிற்செல்ல, தடம் கண் அரக்கியர் - பரந்தகண்களையு டைய அரக்கமாதர்கள், பெய்த மென் சாந்தின் - (கும்பகன்னன்) மேல்வீ சிய மிருதுவாகிய சந்தனக்குழம்பாகிய சீதோபசாரத்தால், இரவிசேய்-சூரி யன்புத்திரனாகிய அச்சுக்கிரீபன், அடுத்தமெய் துயர்தீர்ந்து-(அரக்கனால்)த னக்குண்டாகிய தேகச்சோர்வினின்றுநீங்கி, அரக்கன்-அக்கும்பகன்னனுடை ய, மூக்கு செவி பறித்து - மூக்கையும் செவியையும் கொய்து, அகன்றான்- அவனினின்று நீங்கினான்.

குதட்டி இறந்தகாலவினையெச்சம் குதட்டு பகுதி, ஒடு எண்ணுப்பொரு ளில்வந்த இடைச்சொல். இரவிசேய் எனபதன்முதலில் அகரச்சுட்டுத்தொ குத்தல். துயர்தீர்ந்து நீக்கப்பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமைத் தொகை நிலைத்தொடர். (சகூ)

50. (இ-ள்.) திருகுவெம் சீற்றம் - மாறுபட்ட கொடியகோபத்தையுடைய, மடங்கல் ஏறு அனையான்-ஆண்சிங்கத்தையொத்த கும்பகன்னன், செவி மூ க்கினைகவர்ந்த-தனது செவியையு மூக்கையும் கொய்துசென்ற, இரவி காத லனைத்தொடர்ந்து - சூரியன்புத்திரனாகிய சுக்கிரீபனைப் பின்றொடர்ந்து,வெ ம் களத்திரன் ஏற்றவர் - வெய்யபோர்க்களத்தில் எதிர்த்த வாநரசேனாவீரரு டைய, உயிர் பிழிந்து உண்டு - உயிரை உடலினின்றுங் கொண்டு உண்டு, வ ருதலும் - வர, இராமன் கொடுமரம் குழைத்து - இராமமூர்த்தி வில்லினைவ ளைத்து, பற்பல-பலவாக, வடிகணை தூண்டி - வடித்தலையுடைய அம்புகளை யேவி, அருவரை-பெரியமலையையொத்த, தடம் தோள்-உயர்ந்ததோளும், ம ருமம்-மார்பும், நீள்சென்னி-நீண்டசிரசும், வீற்று வீற்றுய்விழ-துண்டு துண் டாய் நிலத்தில்விழ, அறுத்தான்-துண்டுசெய்தார்.

கவர்ந்த இறந்தகாலப்பெயரெச்சம், கவர் பகுதி, இது வினைமுதற்பொ ருள்கொண்டது. வருதலும் நிகழ்காலத்தில்வந்த எதிர்காலவினையெச்சம் வா பகுதி, குறுகலும் ரகரவுகரம் விரிதலும் விகாரம், து அல் இரண்டும்சாரியை, உம் எச்சவிகுதி. குழைத்து இறந்தகாலவினையெச்சம் குழை பகுதி. (ருo)

51. (இ-ள்.) களத்து இடை கும்பகன்னனை - போர்க்களத்தில் கும்பகன்ன னை, இராமன் கடிந்தமை கேட்ட - இராமமூர்த்திகொன்ற செய்தியைக்கேள் விப்பட்ட, வல் அரக்கன்-வலிய இராவணன், உளத்து இடை-தனதுமனத் தினிடத்து, வெகுளி மேற்கொள - கோபமேலெழுந்தோங்க, கண்ணின் ஒழுகு - தனது கண்களினின்றுஞ்சிந்தும், வெம் கனல் சிகை - கொடியகோ பாக்கினியின்கொழுந்தை, கதுவி-பற்றுதலால், துளி புயல் வறப்ப-துளித்த லையுடைய மேகங்கள்வறப்ப, கனன்று - கோபித்து, அதிகாயன் தன் மூகம்

நோக்கி - தனது புத்திரனாகிய அதிகாயனுடைய முகத்தைப்பார்த்து, நீ தனை வின் - நீவிரைந்து, அளப்பு அரும சேனை - அளவுசெய்தற்கரியசேனை, சூழ் வர செல்க என்று - பக்கத்திற்சூழ்ந்துவரச் செல்லக்கடவாயென்று, அறை தலும் - கூற, அடுகளத்து எதிர்ந்தான்-கொல்லும்போர்க்களத்தில் போருக்கு எதிர்ந்தான்.

அதிகாயன் பருத்தசரீரத்தையுடையவன். கதுவி காரணப்பொருளில் வந்த இறந்தகாலவினையெச்சம் கதுவு பகுதி, உகரக்கேடு சந்தி, இ எச்சவி குதி, வறப்ப காரியப்பொருளில் நிற்றலால் எதிர்காலத்தில்வந்த பண்படியா கப்பிறந்த வினையெச்சம் வற பகுதி, பகரமெய் சந்தி, பகரமெய் விரித்தல் விகாரம், அ எச்சவிகுதி, கனன்று இறந்தகாலவினையெச்சம், கனல் பகுதி, லகரம் னகரமாகத்திரிதல் சந்தி, றகரமெய் இடைநிலை, உ எச்சவிகுதி, வெ குளி தொழிற்பெயர் வெகுள் பகுதி, இ தொழிற்பெயர்விகுதி. (ருக)

52. (இ-ள்.) பொருப்பு உறழ் தடம் தோள் - மலையையொத்த பரந்ததோ ளையுடைய, வாநரம் எழுநூறு - எழுநூறுவாநரவீரரையும், உருவ-ஒருசேரவு ருவ, கதிர்பொழி-கிரணத்தைச்சிந்தும், ஓர்வேலால்-ஒருவேலினை, செருக்கள த்து எறியும் - போர்க்களத்தில் எறியும், நராந்தகன் தன்னை - நராந்தகனை, அங்கதன்-அங்கதனானவன், பரிவொடும் செகுத்தான்-வெறுப்பில்லாமற்கொ ன்றான், உருத்து வந்து உடற்றும் - கோபித்துவந்துபோர்செய்யும், தேவரந் தகனை-தேவாந்தகனை, அனுமன் ஓர் குத்தினால் - அனுமனானவன் ஓர்குத்தினா ல், ஒறுத்தான்-கொன்றான், பருப்பதம் அதனால் - ஒருமலையினை, மகோதரன் ஆவிபறிந்திட - மகோதரனென்னுமரக்கனுடைய உயிர்போக, நீலன் எறிந்த னன் - நீலனென்னும் வாநரசேனைத்தலைவன் வீசினான்.

மறிந்திட என்பதனைப் பறிந்திட எனப்பாடங்கொள்க. பருப்பதம் கணு க்களையுடையது. நராந்தகன் நரருக்கியமன். தேவரந்தகன் தேவர்களுக்கு இ யமன். செகுத்தான் இறந்தகாலவினைமுற்று செகு பகுதி, உருத்து உரிச்சொ ல்லடியாகப்பிறந்த இறந்தகாலவினையெசசம் உரு பகுதி, உடற்றும் எதிர் காலப்பெயரெச்சம் உடல் பகுதி, லகரமும், தகரமும் றகரமாகத்திரிதல் சந் தி, து சாரியை, உகரக்கேடு சந்தி, உம் எச்சவிகுதி. இரண்டனுருபுநிற்குமி டத்து மூன்றனுருபுவந்தது உருபுமயக்கம். (ருஉ)

53. (இ-ள்.) மாருதி சினவி - அனுமன் கோபித்து, திரிசிரா - திரிசிராவின் து, அம் கைவாள் பறித்து-அவனது கையிலேந்திய வாளைப்பிடுங்கி, அவன்த லை துமித்தான் - அவ்வரக்கனுடைய தலையைவெட்டினான், போர் முகத்து- யுத்தமுகத்தில், இடபன்-இடபனென்னும் வாநரசேனைத்தலைவன், மத்தனை- மத்தனென்னுமரக்கனை, கதையால் புகை எழ புடைத்து-தனது தண்டாயுத த்தால் புகைமேலெழ அடித்து, உயிர்குடித்தான்-அவன் உயிரையுண்டான், இலக்குவன்-இலட்சுமணர், கார்முகம் குழைத்து - வில்லினைவளைத்து, மலர் அயன் கணையால் - தாமரையில்வசிக்கும் பிரமாஸ்திரத்தால், அமரர்கண்களி ப்ப-தேவர்கள்கண்டு களிகூர, நேரலர்கடந்த-பகைவரைக்கடந்த, திறல் அதி

காயன்-வெற்றியையுடைய அதிகாயனது, நெடும் தலை துமித்து நின்று-பெரியதலையைத்துண்டித்து நின்று, ஆர்த்தான்-வீரகோஷஞ்செய்தார்.

துமித்து இறந்தகாலவினையெச்சம் துமி பகுதி, சினவி பெயரடியாகப் பிறந்த இறந்தகாலவினையெச்சம் சின பகுதி. சினம் பெயர். அமரர் இறப்பில்லாதவர். (௫௩)

54. (இ-ள்.) கறங்கு-ஒலிக்கின்ற, தெள் திரை நீர் - தெள்ளிய அலையையுடைய கடல்சூழ்ந்த, உலகு எல்லாம் வென்ற - உலகினையெல்லாம் வெற்றிகொண்ட, கதழ் சினத்து-மிக்ககோபத்தையும், அடல்-வெற்றியையுமுடைய, அதிகாயன் இறந்தமை - தனதுபுத்திரனாகிய அதிகாயன் இறந்தசெய்தியை, நிருதர்கோன் கேட்டு-இராவணன்கேட்டு, சினவி-கோபித்து, இந்திரசித்தினைவிடுப்ப-இந்திரசித்தினையேவ, செறிந்த கூர் இருள்வாய் - நெருங்கிய மிகக இருளில், வெம் சமர் உடற்றி - கொடியபோர்செய்து, திசைமுகன் பகழியால்-பிரமாஸ்திரத்தால், இராமன்-இராமமூர்த்தியும், போர் மறம் கள்-போரில் வெற்றியைக் கொள்ளைகொள்ளும், இளவல்-இலட்சுமணரும், வானரத்தலைவர்-வானரசேனைத்தலைவருமாகிய, யாரையும் - எல்லாரையும், மண் இடை வீழ்த்தான் - நிலத்தின்மேல்விழுத்தினான்.

கதழ் சினம் வினைத்தொகைநிலைத்தொடர். இதனடியாகக்கதழ்ந்த கதழ்ந்து, கதழ்ந்தான் எனவினைவிகற்பங்கள்வரும். அடல் வெற்றிமேல்நிற்றலால் தொழிலாகுபெயர் அடு பகுதி, உகரக்கேடு சந்தி, அல் தொழிற்பெயர் விகுதி. (௫௪)

55. (இ-ள்.) வரி சிலை கல்வி - கட்டமைந்த விற்றொழிற் கல்வியே, உருவு எடுத்தது அனைய - உருவெடுத்ததை யொப்ப வுருக்கொண்ட, வாள் எயிறு அரக்கன் - விளங்கும் வக்கிரதந்தங்களையுடைய இந்திரசித்து, வெம் சமரில்-கொடியபோரில், புரி தொழில் அனைத்தும் - தான்செய்த தொழில் முற்றும், இராவணற்கு உரைத்து - தனது பிதாவாகிய இராவணனுக்குச் சொல்லி, பொங்கு பேர் உவகையின் இருப்ப - மேலெழுந்த பெரியமகிழ்ச்சியோடு அவனிருக்க, நிருதர் புங்கவன் ஆம் - அரக்கர்களில உயர்ந்தவனாகிய, வீடணன் - விபீஷணன், சாம்பன் - சாம்பனும், நிகர் இல் போர் அனுமன் அருகு-தனக்கு ஒப்பில்லாத போர்த்தொழிலையுடைய அனுமனுமாகிய இவர்கள் பக்கத்து, துனைவினில் சென்று எய்தி - விரைவிற்சென் றடைந்து, நீர் பிழைத்தமையால் - நீங்கள் உயிரோடிருத்தலால், யாரும் இறந்திலர் என்று-எவரும் உயிர்கழிந்திலரென்று, அறைந்தான் - கூறினான்.

எடுத்தனைய தொகுத்தல்விகாரம். (௫௫)

56. (இ-ள்.) ஐய கேள் - அநுமனே கேளாய், மெய் புகு கருவி - சரீரத்திற்றுளைத்து அழுந்திய ஆயுதங்களை, மாற்றுறும் அதகம் - மேலெழுப்பும் சஞ்சீவியும், துணி படும் - பிளவுபட்ட, மெய் பொருத்து அதகம் - சரீரத்தைப் பொருத்துஞ் சஞ்சீவியும், எய்திய தழும்பு - அம்புகளேறிட்ட தழும்பினை, தீர்த்திடும் அதகம் - தீர்த்து முன்னிருந்தவடிவேயாக்கும் சஞ்சீவியும், இன்

உயிர் அளித்திடும் அதகம் - கழிந்த இனிய உயிரைமீட்டுக்கொடுக்குஞ் சஞ்சீ வியும் ஆகிய இவைகள், வெள்ளி வரைக்கும் - கயிலேயங்கிரிக்கும், நல் இடப கிரிக்கும் - நல்ல ரிஷபமலேக்கும், நாப்பண் - நடுவில், இனிது அமரும்-தனக்கொரு இடையூறின்றி இருக்கும், மை அறு - குற்றமற்ற, மருத்துவரையினில் உள - மருத்துமலேயிலுள்ளன, நீ கொணர்க என - நீ கொண்டுவரக்கடவாயென்று சாம்பன்கூற, மாருதி பாய்ந்தான் - அனுமன் (கொண்டுவரப்) பாய்ந்தான்.

ஐய அண்மைவிளி. மெய்புகுகருவி மாற்றுறுமதகமுதலியன நான்கு என்னும் எண் தொக்குநின்ற செவவெண். "மாண்டாரையுய்விக்குமருந்தொன்றுமெய்வேறுவகிர்களாகக, கீண்டாலும் பொருந்துவிப்பதொருமருந்துபடைக்கலங்கள்கிளர்ப்பதொன்று, மீண்டேயுந்தம்முருவேயருளுவதோர்மெய்மருந்துமுள" எனக்கம்பராமாயணத்தில் வருதல்காண்க. (ருசு)

57. (இ-ள.) பாய்தலும்-அனுமன் பாய, அதனில் மருந்து காண்கிலனுய்-அம்மலேயில் அந்தமருந்தைக் காணுதவனுய், பரு வரை பறித்து வந்து உய்ப்ப-பருத்த அம்மலேயை வேரோடு பறித்துக்கொண்டுவந்து போர்க்களத்தில்வைக்க, சேய - செவந்த, தாமரை கண் செல்வனே முதலோர் - தாமரை போன்ற கண்களேயுடைய இராமமூர்த்தி முதலியோர், துயில் உணர்ந்தார் என எழுந்தார் - நித்திரையினின்று எழுந்தவர்போல எழுந்தார்கள், ஏய - பொருந்த, அம் மலேயை - அந்த மலேயை, மாருதி - அனுமன், முன்னர் இருந்த உழி வைத்து - முன்பு இருந்த இடத்தில் வைத்து, மீண்டு எய்த - திரும்பிவந்தடைய, காய் சினம் கதுவி - மிக்க கோபத்திறகன்றி, இரவி சேய் முதலோர்-சூரியன்புத்திரனுகிய சுக்கிரீபன்முதலியோர், கடி மதில் இலங்கை - காவல்மிக்க மதில்சூழ்ந்த இலங்கையில், தீ மடுத்தார் - தீக்கொளுவினர்கள்.

சேய பண்படியாகப்பிறந்த குறிப்புவினேப்பெயரொச்சம் செமமைபகுதி, முதல்நீளுதலும், ஈறுகெட்டு மகரமெய் யகரமெய்யாகத் திரிதலும் சந்தி. அ எச்சவிகுதி. ஏய நிகழ்காலவினேயெச்சம் ஏய்பகுதி, அ வினேயெச்சவிகுதி.

58. (இ-ள்.) நிருதர் கோன் - அரக்கர்களுக்குத் தலேவனுகிய இராவணன். அன்னது கேட்டு - அதனேக் கேட்டு, கும்பகன்னன தன் மைந்தரை - கும்பகன்னனுடைய புத்திரர்களே, அழையா - அழைத்து, மின் நகு-மின்னல்போலவிளங்கும், சுடர் வேல் - விளக்கம் அமைந்த வேலேயேந்திய,தலேவரோடு ஏகி-சேனேத்தலேவரோடுசென்று,வெம் சமர் புரிக என விடுப்ப-கொடியபோரைச் செய்வீரென்று ஏவ, கல் நவில் திரள் தோள் - மலேயையொத்த திரண்டதோளேயுடைய, குரங்கு வெம் சேனே - கொடிய வானரசேனேயாகிய, கனே கடல் - ஒலிக்குங் கடலானது, உடைதர கலக்கி - உடைந்து புடைபெயர உழக்கி, கொல் நுனே - கொல்லுதறொழிலேயுடைய நுதிவாய்ந்த, அயில் வேல் கப்பணம் சிதறி - கூரியவேலாகிய கப்பணங்களேச் சிந்தி, கூற்றம் அஞ்சுற-இயமனும் அஞ்ச, எதிர் மலேந்தார் - எதிர் நின்று போர்செய்தார்கள்

கப்பணம் கைவேல் கும்பகன்னன்மக்களாவார் கும்பன், நிகும்பன். அழையா செய்யா என்னும வாய்பாட்டு இறந்தகால வினேயெச்சம். அழை

பகுதி, யகரமெய்சந்தி, ஆ எச்சவிகுதி, வேற்கப்பணம் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. குரக்குவெஞ்சேனை மென்றொடர் வன்றொடர் ஆதல் ந-உயிர்-௩௪-௬-இல் "மன்னே" என்ற மிகையால். (௫௯)

59. (இ-ள்.) அங்கதன் சினவி - அங்கதன் கோபித்து, அகம்பனன் என்னும் அரக்கனுக்கு - அகம்பனனாகிய அரக்கனுக்கு, அமரர் உலகு அளித்து-விண்ணுலகம்தந்து, வெம் கனல் நேர் - வடவாமுகாக்கினியை யொத்த, பிரசங்கனை - பிரசங்கனென்னு மரக்கனை, மறலி விருந்து எதிர் கொள்க என விடுத்தான் - இயமன் விருந்தெதிர் ஏற்கககடவனென்று யமபுரத்துக்கு அனுப்பினான், அடு சினம் துவிதன் - கொல்லுங் கோபமிக்க துவிதனென்னும் வானரசேனைத்தலைவன், செம் கை வள் உகிரால் - செவந்த கையிலுள்ள கூரியநகங்களால், சுரோணிதக் கண்ணனை செகுத்தான் - சுரோணிதாக்ஷனைக் கொன்றான், திறல் மயிந்தன் - வெற்றியையுடைய மயிந்தனென்னும் வானரசேனைத்தலைவன், பங்கம் இல் மயூபாக்கனை - குற்றமில்லாத மயூபாக்கனென்னும் அரக்கனை, பறவை கூட்டுண - கழுகுமுதலிய பறவைகள் கொள்ளை கொண்டுதசையுண்ண, உயிர் படுததான் - அவன் உயிரைப் போக்கினான்.

மறலி கொல்லுதலையுடையவன், மறல் (கொலை) பகுதி, இ பெயர்விகுதி. பறவை வினைமுதற்பொருளில்வந்த தொழிற்பெயர் பற பகுதி, வகரத்தோற்றம சநதி, ஐ விகுதி. அமரர் ஈறுதொக்கு அமர் என நின்றது. (௫௧)

60. (இ-ள்.) நள் இருள விழுங்கி - மிக்க இருளைவிழுங்கி, கதிர் எதிர் எடுக்கும் - கிரணங்களைச சத்திசெய்யும், பரிதி சேய் - சூரியன்புத்திரனாகிய சுக்கிரீபன், ஈகு இளய பிறை தாழ் - இளமைதங்கிய பிறையையொத்த, வெள் எயிறு அகல் வாய் - வெள்ளிய வக்கிரதந்தங்கள்பொருந்திய அகன்றவாயையுடைய, கும்பன் - கும்பனென்னுமரக்கன், வான் மகளிர - அரம்பையருடைய, நகை விருநது அயின்றிட - புன்னகையாகிய விருநதினை யனுபவித்துத்திளைக்க, விடுத்தான் - ஏவினான், கொள்ளை வண்டு-வண்டின் கூட்டங்கள் அறை தார் - மதுவுண்டொலிக்கு மாலையையணிந்த, நிகும்பனை-நிகுமபனென்னும் அரக்கனை, திறல் கூர் அனுமன் - வெற்றிமிக்க அனுமன், ஓர் குத்தினில் கொன்றான் - ஒரு குத்தாற் சிதைததான், வள்ளல்-இராமமூர்த்தி, ஓர் கணையால் - ஒருபாணததால், அடல் புரி - கொலைத் தொழிலைச் செய்யும், மகரக்கண்ணனை - மகராக்ஷனென்னும் அரககனை, ஆர் உயிர் மாய்த்தான்-அரிய உயிர்வாங்கினான்.

மகரக்கண்ணன் மகரமீன்போன்ற கண்களையுடையவன். பிறை தொழிற்பெயர் பிறபகுதி, ஈறுகெடுதல் சந்தி, ஐ தொழிற்பெயர் விகுதி, இது ஆகுபெயராய்ச் சந்திரன்மேல் நிற்றலால் தொழிலாகுபெயர். அயின்றிட நிகழ்காலவினையெச்சம் அயில் பகுதி, து சாரியை, லகரம் னகரமாதலும் உகரக்கேடும் சந்தி, இடு பகுதிப்பொருள்விகுதி, அனைத்தும் ஒருபகுதி. இல் எதுப்பொருளில் வந்த ஐந்தனுருபு. வள்ளல் பண்பாகுபெயராய் நிற்றலால் காரணப்பெயர் வண்மைபகுதி, ஈறுகெடுதலும் ளகரததோற்றமும் சந்தி, அல் பண்புப்பெயர் விகுதி. நாகிள ஒருபொருட் பன்மொழி. (௬0)

61. (இ-ள்.) ஈங்கு இவை - இவ்விடத்தில் நிகழ்ந்த செய்திகள், அரக்கன் செவிமுதல் உறலும - இராவணனுடைய காதிறபட, இந்திர சித்தினை ஏவ- அவன் இந்திரசித்தினை ஏவ, ஆங்கு - அவ்விடத்தில், அவன் - அவ்விந்திரசித்து, மாயா சீதையை - மாயையாலாக்கிய ஓர்சீதையை, விறல் கூர் அனுமன் முன் - வெற்றிமிக்க அனுமன் முன்பு, தடிந்து - கொன்று, இகல் வேள்வி - போர்க்குரிய யாகமாகிய, நிகும்பலைக்கு - நிகும்பலையை, தீங்கு அற புரிவான் - விதிப்படிசெய்ய, உறலும் - அடைய, மாருதி-அனுமன், திரு மறு மார்பன் - இலக்ஷ்மிவசிக்கும் ஸ்ரீவற்சமென்று மறுப்பொருந்திய மார்பையுடைய இராமமூர்த்தியின், பாங்கு வந்து - பக்கம்வந்து, அரக்கன் புரிந்தமை - அவ்விந்திரசிததுச்செய்த செய்தியை, உரைப்ப - கூற, பருவரல் கடலில் வீழ்ந்து - துன்பமாகிய கடலில் விழுந்து, அயர்ந்தான் - சோர்ந்தான்.

சீதை படைச்சாலிற்றோன்றினவள், இரண்டனுருபு நிற்குமிடத்து நான்கனுருபு நிற்றலுருபுமயக்கம். தடிந்து இறந்தகாலவினையெச்சம். தடி பகுதி. புரிந்தமை இறந்தகால இடைநிலைபெற்றுவந்த தொழிற்பெயர், செவிப்புலனைச் செவிமுதலென்றார். (௬௧)

62. இ-ள்.) ஆய போழ்து-இவ்வாறான காலையில், அனுமன் உரைத்தல் கேட்டு - அனுமன் கூறிய வார்த்தையைக்கேட்டு, ஐய - ஐயனே, அழுங்கிடேல்-வருந்தல்வேண்டாம், இராவணி-இராவணன் புத்திரனாகிய இந்திரசித்து, வஞ்ச மாயையில் - வஞ்சத்தையுடைய மாயையினால், சீதை வகுத்தனன் - சீதையினுருவகுத்து, தடிந்து - கொன்று, மகம் செய்வான்-யாகத்தைச் செய்ய, நிகும்பலைக்கு அகன்றான் - நிகும்பலைக்குச் சென்றான், மேய அவ்வேள்வி - பொருந்திய அந்தயாகம், முற்றுறின் - முடிந்தால், நம்மால் வெல்லுதல் அரிது - நம்மால் வெல்லுதல் முடியாது, அமர் உடற்றி - போர் செய்து, தீயினை செகுப்பான் - அந்தயாகத்தைச் சிதைக்க, இளவலை விடுத்தி என்று- இலட்சுமணனை யனுப்புவாயென்று, வீடணன் தெளிந்து உரைத்தான்-விபீணன் மனந்தெளிந்து சொன்னான்.

வீடணன் வண்டின் வடிவாகச் சென்று தெளிந்து கூறினமையால் தெளிந்தென்றார். இராவணி இராவணன் புத்திரன் இது தத்திதாந்தபதம். வகுத்தனன் முற்றெச்சம். அழுங்கிடேல் முன்னிலையொருமை யெதிர்மறையேவல் வினைமுற்று. அழுங்கிடு பகுதி. உகரக்கேடு சந்தி, ஏல் விகுதி. வண்டின்வடிவமாகச் சென்றானென்பது "வண்டினதுருவங்கொண்டுமானவன் மனத்திற்போனான், றண்டலையிருக்கைதன்னைப்பொருக்கெனச் சார்ந்ததானே, கண்டனனென்ப" எனவரும் கம்பராமாயணச்செய்யுளாலுணர்க. ௬௨

63. (இ-ள்.) உரைத்தலும் - இராவணன்கூற, கமலம் தடம் கண்ணன் - தாமரைமலரைப்போலப் பரந்தகண்களையுடைய இராமமூர்த்தி, இளவல் - இலட்சுமணனை (நோக்கி) ஒல்லை போக என - விரைந்து செல்லக்கடவாயென்று ஏவ, தொழுது ஏகி - வணங்கிச்சென்று, வரை தடம் திணி தோள் - மலைபோலுயர்ந்த திண்ணியதோளையுடைய, அனுமன் மேல் இவர்ந்து - அனுமன்

மேல் ஆரோகணித்து, வாநர வீரர் பின தொடர - வாநரசேனைவீரர் பின்றொடர்ந்துவரவும், அரக்கர் கோன் - அரக்கர்தலைவனாகிய இராவணனுடைய, இளவல் - தம்பியாகிய விபீஷணன், கனன்று முன் நடப்ப - கோபித்து முன்செல்லவும், அரன் விழித்து எரித்த முப்புரத்தின் - சிவபெருமான் நெற்றிக்கண் திறந்தெரித்த திரிபுரத்தைப்போல, செரு களம் செவப்ப - யுத்தகளம் உதிரத்தாற் செவப்பேற, சிறிது கண் சிவக்கும் - சற்றுக் கண்கள் சிவக்கும், சேவகன் - இலட்சுமணர், நிகும்பலை சோர்ந்தான் - நிகும்பலையாகத்தைச் சேர்ந்தார்.

தொழுது என்னும் வினையெச்சம் ஏகி யென்னும் வினையெச்சத்தின் முதனிலையையும், அவ்வெச்சமிவர்ந்து என்னும் வினையெச்சத்தின முதனிலையும், அது சிவக்குமென்னும் பெயரெச்சத்தின் முதனிலையும், அவ்வெச்சம் சேவகனென்னும் வினைமுதற்பொருளை முறையே கொண்டன. (௬௩)

64. (இ-ள்.) அரு மறை - அரிய வேதவிதிப்படி, தக்கன் புரி மகம் - தக்கன செய்தயாகத்தை, கணங்கள் அழித்தது என - சிவகணங்கள் அழித்தாற்போல, அடல் சினத்து - கொல்லுங் கோபத்தையுடைய, அரக்கன் புரிதரும வேள்வி - இந்திரசித்துச்செய்யும நிகும்பலையாகத்தை, வாநரத்தலைவர் அழித்தலும் - வாநரசேனைத்தலைவர் சிதைக்க, புண் திறந்தது அன்ன - புண்திறந்ததையொத்த, எரி உமிழ் - கோபாக்கினியைச் சிந்தும, தறு கண் - கொல்லுங்கண்களையுடைய, அரக்கர் கோன சிறுவன - இராவணன்புத்திரனாகிய இந்திரசித்து, இமை கரிந்து - இமைகளகருகி, அழல் உக விழித்து - கோபாக்கினி சிந்த கண்களைவிழித்து, பரிதி - சூரியனுடைய, மான் தடம் தேர் அனைய - குதிரைபூண்ட பரந்ததேரையொத்த, பொன் தேரில் - பொன்னாற்சமைந்த தேரில், பாய் புலி போத்து என்ன - பாய்ந்து மலையிலேறும் புலிப்போத்தைப்போல, இவர்ந்தான் - ஏறினன்.

முதல் சினைக்கொற்றுமை உண்மையால் சினைவினையை முதல்மேலேற்றி இமைகரிந்தழலுக விழித்தெனவும், உவமைக்கும பொருட்கும ஒற்றுமை உண்மையால் பொருளின் தொழிலை உவமைக்கேற்றியுங் கொள்க. என உவமையுருபிடைச் சொல்லடியாகப் பிறந்த நிகழ்காலவினையெச்சம். என இடைச்சொல் பகுதி. ணகரக்கேடு சந்தி. அ வினையெச்ச விகுதி. (௬௪)

65 (இ-ள்.) அந்தரத்து அமரர் - வானத்தினிறைந்த தேவர்கள், இமைப்பு உறுத கண்கள் இமைத்து - இமைகொட்டாத கண்களை இமைகொட்டி, வான் துறந்தனர் அகல - அவ்வாகாயத்தைவிட்டு நீங்கவும், மந்தரம் வெடிப்ப - மந்தரகிரி வெடிபடவும், மாதிரம் தலைவர் - திக்குப்பாலர்கள், வயிறு எரி தவழ்ந்து - தமதுவயிற்றில் அச்சமாகிய நெருப்புத்தவழ்தலால், நின்று ஏங்க - கம்பித்துநின்று மனம்வருந்தவும், கந்து அடு புழை கை - கட்டுத்தறியை முறிக்கும் துவாரம்பொருந்திய துதிக்கையையுடைய, திக்கயம் வெருவி - அஷ்டகஜங்களும் அஞ்சி, களி மதம் துறந்து - செருக்கால்வரும் மதநீங்கி, கான் படர - காட்டிற்செல்லவும், அண்டகோளகையும் வெடி தர - அண்டவட்டங்க

ளும் வெடிபடவும், இந்திரன் பகைஞன் - இந்திரசித்து, வரி வில் நாண் எறிந்தான் - கட்டமைந்த வில்லில் குணத்தொனிசெய்தான்.

மாதிரத்தலைவர் திக்கயம் இவற்றினிறுதியில் இணைத்தென அறிபொருளில்வந்த முற்றும்மைதொகுத்தல், வெருவுதலால் மதநீருகுதலின் வெருவி காரணப்பொருளில்வந்த இறந்தகாலவினையெச்சம். வெருவு பகுதி. பகைஞன் பொருட்பெயர் பகை பகுதி, ஞகரம் பெயரிடைநிலை, அன் விகுதி. (சுரு)

66. (இ-ள்.) களத்து எதிர் ஏற்ற - போர்க்களத்திலெதிர்த்த, ஓர் ஒரு கவிகட்கு - ஒவ்வொரு குரங்குகட்கு, வில் விசையின் - வில்லின்விசையால் ஏவிய, ஆயிரம் ஆயிரம் கணைகள் - ஆயிரமாயிரம் பாணங்களும், துளைத்து - ஒவ்வொருகுரங்கையுந்துளைத்து, நேமி அம் கிரியும் - சக்கரவாளகிரியும், துனைவினின் உருவி - விரைந்துபோயுருவி, விண் படர - ஆகாயத்திற்செல்லவும், வளை தலை புகும் அரவு என - வளையிற்செல்லும்பாம்பைப்போல, சில போய் - சிலஅம்புகள்சென்று, அநுமனது ஆகம் ஊடு உருவ - அநுமனுடையசரீரத்தினூடுருவிப்பட்டுருவவும், தனி புயல் ஏழும் - குளிர்ந்த ஏழுமேகங்களும், கடையுகத்து இறைக்கும் தாரைபோல் - யுகமுடிவிற் சிந்தும் மழையைப்போல, கணை மழை பொழிந்தான் - சரவருஷத்தைச் சொரிந்தான்.

ஓர் ஒரு கவிகட்கும் ஒவ்வோராயிரங் கணைகளை யேவினான் என்பார், ஓரொருகவிகட் காயிரமாயிரமென்றார். சிலபண்படியாகப் பிறந்த பலவின்பாற்படர்க்கைக் குறிப்புவினைமுற்றுப்பெயர். சின்மை பகுதி. (சுசு)

67. (இ-ள்.) கூற்று - இயமனுடைய, மெய் பனிப்ப - உடல் கம்பிக்க, அரக்கர் கோன் விடுத்த - இந்திரசித்து ஏவிய, கொடும் கணை யாவையும் - கொடிய அம்புகள் முழுமையும், கணையால் மாற்றி - தமதுகணைகளால் அறுத்து, வாள் அரக்கன் - வாளையேந்திய அந்த இந்திரசித்துவினுடைய, மருமம் - மார்பிலும், நீள் தடம் கை - நீண்டகையிலு மணிந்த, அணி - ஆபரணங்களும், முடி - கிரீடமும், நுண் துகள் படுத்தி - நுண்ணிய பொடிகளாகச்செய்து, காற்று உறழ் புரவி - காற்றையொத்த வேகத்தையுடைய குதிரைகளையும், கலினம் மான் தடம் தேர் - கடிவாளத்தையுடைய குதிரை பூண்ட பாரந்தேர்களையும், களிறு இனம் - யானைக்கூட்டங்களையும், துணித்து - துண்டுபடுத்தி, வெம் குருதி ஊற்று இருந்து ஒழுக - கொடிய உதிரமூற்றெடுத்தொழுகவும், கவந்தம் ஆட்டு அயர - கவந்தங்களாடவும், இலக்குவன் - இலட்சுமணர், உறு கணை பொழிந்தான் - மிக்க சரவருஷத்தைச்சிந்தினார்.

கவந்தம் உடற்குறை. (சுஎ)

68. (இ-ள்.) இந்திரன் மருமம் - (அந்தப்பாணம்) இந்திரனுடைய மார்பை, போழ்ந்தது - பிளந்தது, மறலி ஈருளின் - இயமனுடைய ஈரலின், தீம் சுவை அறிந்தது - இனியசுவையை யறிந்தது, அந்தரத்து இயங்கும் - ஆகாயத்தில் சஞ்சரிக்கும், புட்பக ஊர்தி - புட்பகவிமானமானது, அரத்த வெம் புனலின் ஆடியது - உதிரவெள்ளத்தில் முழுகியது, செம் தழல் கடவுள் - அக்கினிதேவனுடைய, பழு எலும்பு ஒடித்தது - பழுவெலும்பினை முறித்தது, தீய

ன் - இந்திரசித்து, வெம் திறல் முகப்பகழி - கொடிய வலிமைவாய்ந்த முகத்தையுடைய பாணத்தை, மந்தரம் தடம் தோள் - மந்தரகிரியை யொத்த உயர்ந்ததோள்களையுடைய, மாருதி - அனுமனது, மருமம் போழ்ந்திட - மார்புபிளவுபட, வல்தினின் விடுத்தான் - வலித்து ஏவினான்.

தீய என்பதைத் தீயன் எனப் பாடங்கொள்க. போழ்ந்தது ஒன்றன்பாற் படர்க்கை யிறந்தகாலவினைமுற்று போழ்பகுதி, நகரமெய்சந்தி, தகரமெய் இறந்தகாலவிடைநிலை, அ சாரியை, து விகுதி. இயங்கும் நிகழ்காலத்தின் மேல் நின்ற பெயரொச்சம் இயங்குடகுதி. இந்திரன் ஐசுவரியமுடையவன். ஊர்தி தொழிலாகுபெயராய் வாகனத்தின்மேல்நின்றது ஊர் பகுதி, தி தொழிற்பெயர் விகுதி. ஒடித்தது ஈறுதொக்கு ஒடித்த என நின்றது. இலட்சுமண ரம்பின்வலிமையின்பெருமையைக் கூறினமையால் மிகுதிநவிற்சியணி.

69. (இ-ள்.) உரு கெழு தோற்றத்து - அச்சமிகுந்த தோற்றத்தை யுடைய, அனுமன் மார்பு அகலத்து - அனுமனுடைய மார்பில், உடற்று வெம் பகழி - வருத்தாநின்ற கொடியபாணம், போழ்ந்து உருவ - பிளந்து உருவுதலால், குருதிகான்றிடலும் - உதிரஞ்சோர, இலக்குவன் - (அதுநோக்கிய) இலட்சுமணருடைய புருவத்தொடும் - புருவத்தோடும், உயர் கொடும சிலை குழைய - உயர்ந்த வளைந்த வில்லும் வளைய, வரி சிலை அற்றது - இந்திரசித்துவின் கட்டமைந்த வில் துண்டுபட்டது, ஊர் தரு பாகன் மறிந்தனன் - அவனது தேரைநடத்தும் பாகனுநிலைகலங்கியிறந்தான், வாம் பரி மறிந்த - அவனது தேரிற் பூட்டியதாவிச்செல்லும் குதிரைகளுமடங்கிவீழ்ந்தன, விரை செலும் - விரைந்துசெல்லும், மான் தேர் சிதர்ந்தது - குதிரைபூண்ட தேரும் பொடிபட்டது, அவ்வரக்கன் - அந்த இந்திரசித்து, வியன் நகர் - பரந்தநகரமாகிய, இலங்கையிற் புகுந்தான் - இலங்கைக்குச் சென்றான்.

மார்பகலம் ஒருபொருட்பன்மொழி. போழ்ந்து இறந்தகால வினையெச்சம் போழ் பகுதி, நகரமெய் சந்தி, தகரமெய் இடைநிலை, உ எச்சவிகுதி. வாவும் என்னும் பெயரொச்சத்தின் ஈற்றயலுயிர்மெய்கெட்டு வாம எனநின்றது. ந. வி. "செய்யுமெனெச்சவீற்றுயிர்மெய்சேறலும்" என்ற சூத்திரவிதியால். மறிந்தனன் மறி பகுதி. (௬௯)

70. (இ-ள்.) ஓர் இமை ஒடுங்கும் முன்னர் - ஒரு இமைப்பொழுதொடுங்குதற்குமுன், ஓர் தடம் தேர் பண்ணுறுத்து - ஓர் பரந்த தேரை அலங்கரித்து, ஒல்லையின் இவர்ந்து - விரைந்து ஏறி, போர் முகத்து எய்தி - யுத்தமுகத்தில் வந்து, கவி குலம் அனைத்தும் - வானரக்கூட்டங்கள் முழுமையும், பொன்ற - இறக்க, வெம் கணை மழை பொழியும் - கொடிய சரவருஷத்தைச் சிந்தும், கார் நிறத்து அரக்கன் - கரிய நிறத்தையுடைய இந்திரசித்துவினது, கொடிஞ்சி மான் தேரில் - மொட்டையுடைய குதிரைபூண்ட தேரில் கட்டிய, கவனம் - வேகத்தையுடைய, வாம் புரவிகள் அனைத்தும் - தாவிச்செல்லுங் குதிரைகள் முழுமையும், பாரிடை மறிய - நிலவுலகின்மேல் வீழ்ந்திறக்க, வீடணன் எதிர் போய் - விபீஷணன் அவன் எதிர்சென்று, பாழி அம் கதையினால் - பருத்த அழகிய தண்டாயுதத்தினால், புடைத்தான் - அடித்தான்.

இமை என்னு முதனிலைத்தொழிற்பெயர் காலத்தின்மேல் நிற்றலால் தொழிலாகுபெயர். பொன்ற இறந்தகாலவினையெச்சம் பொன்று பகுதி, உகரக்கேடு சந்தி, அ எச்சவிகுதி. மறிய காரியப்பொருண்மேல் நிற்றலால எதிர்காலவினையெச்சம் மறி பகுதி. (௭௦)

71. (இ-ள்.) நரை விடை - வெள்ளிய இடபத்தினையுடைய, ஒருத்த கடவுளும் - நடத்தியவனும் உருத்திரமூர்த்தியும், மலர் மேல் நான்முகம் கடவுளும் - தாமரைமலரின்மேல்வசிக்கும்பிரமதேவனும், வியப்ப - அதிசயிக்கவும், அருவரை தடம் தோள் - அரியமலையைப்போன்ற உயர்ந்த தோளையுடைய, இந்திரன் - தேவேந்திரன், இழந்த அரசு இயல் - கைவிட்ட அரசியலானது, கிடைத்தது என்று உவப்ப - இப்போது கிடைத்ததென்று மகிழவும், திரை எறி - அலை எறியும், குருதி புனல் - உதிரவெள்ளமானது, பரந்து ஓடி - பரவியோடிப் பாய்தலால், கரும கடல் முழுவதும் - கரியகடல்முழுதும், செவப்ப - செவக்கவும், இரவும் நன் பகலும் - இராப்போதிலும் பகற்போதிலும், மூன்று நாள் ஒழியாது - மூன்றுநாள்காறும் ஒழியாமல், இருவரும் - இலட்சுமணரும் இந்திரசித்தும், வெம் சமர் விளைத்தார் - கொடிய போர்செய்தார்கள்.

வியப்ப, உவப்ப, செவப்ப என்னும்மை தொக்குநின்ற எச்சங்கள் காரியப்பொருண்மேனிற்றலால் எதிர்கால வினையெச்சங்கள். விய உவ செவ பகுதிகள். பாய்தலால் இசையெச்சம். இழந்த அரசியல் கிடைத்ததென்றுவப்ப இது பொருண்முரணணி. கரும கடல முழுவதுஞ் செவப்ப இது சொன்முரணணி. (௭௧)

72. (இ-ள்.) அந்தரத்து அமரர் - ஆகாயத்தினின்ற தேவர்கள், மலர்மழை பொழிய - புட்பவருஷத்தைச்சிந்த, ஆடகம் பொருப்பினை - பொன்மலையை, குழைத்த - வளைத்த, சந்திரன் மௌலி கடவுள் ஆம் என்ன - சந்திரனையணிந்த கிரீடத்தையுடைய சிவபிரானைப்போல, தடம் சிலை - பெரிய தனுசு, குழைவுற வாங்கி - வளையக் காதுகாறுஞ் செல்ல வளைத்து, கந்து அடு - கட்டுத்தறியை முறிக்கும், புழைக்கை - துவாரம்பொருந்திய துதிக்கையையும், கடாமத்தையுமுடைய, களிறு அனைய - யானையை ஒத்த, இலக்குவன் - இலட்சுமணர், விசும்பு காத்தருளும் - விண்ணுலகைக் காக்கும், இந்திரன்கணையால் - இந்திராஸ்திரத்தினால், இராவணி சென்னி - இந்திரசித்துவினுடைய தலையை, இரு நிலத்து - பெரிய நிலவுலகின்மேல், அறுத்து வீழ்த்தினன் - அறுத்து விழுத்தினான்.

வாங்கி இறந்தகாலவினையெச்சம் வாங்கு பகுதி, உகரக்கேடு சந்தி, இ எச்சவிகுதி. வாங்கி அறுத்து என்னும் வேறுபல அடுக்கிய வினையெச்சங்கள் வீழ்த்தினனென்னும் வினைமுற்றின் முதனிலையைத் தனித்தனிகொண்டன. ந-பொது "உருபுபலவடுக்கினும்" என்னும் சூத்திரத்தால். சிவபிரான் மேருவை வளைத்த அன்றே திரிபுரம் பாழ்பட்டதுபோல வில் காது காறுஞ் செல்ல வளைத்த அன்றே இராவணி பட்டானென்பது தோன்றச் சந்திரமௌலி கடவுளாம் என்னத் தடஞ்சிலை குழைவுறவாங்கி என்றார். (௭௨)

73. (இ-ள்.) விண்ணவர் இயக்கர் - தேவர்களும் யக்ஷர்களும், விஞ்சையர் முனிவர் - வித்தியாதரரும் முனிவர்களும், வானரர் - வானர சேனைவீரரும், வியந்தனர் ஏத்த - அதிசயித்துத் துதிக்கவும், கண் அகல் - இடம்பரந்த, ஞாலம் முழுதும் - நிலவுலகமுற்றும், களிப்ப - களிகூரவும், கார் முகம் கல்வியின் - வில்வித்தையின், துறைபோம் - மார்க்கத்திற் கைதேர்ந்த, அண்ணல் சேவடி[illegible] - இராமமூர்த்தியின் செவந்த திருவடிகளை, இளவல் போய்வணங்க - இலட்சுமணர் சென்று வணங்க, வாய் - தனது வாயால், பிழி குறும்

துளி - மதுவாகிய சிறுதுளியை, பிலிற்றும் - சிந்தும், தண்-குளிர்ந்த, நறும் கமலம் - நறுமணங்கமழும் தாமரைபோன்ற, கண்ணன் - கண்களையுடைய இராமமூர்த்தி, உள மகிழ்ந்து - மனமகிழ்ந்து, தழுவி நின்று ஆசி கூறினன் - புல்லி ஆசிவசனங்கூறினார்.

வியந்தனர் முற்றெச்சம், பிலிற்றும் எதிர்காலப் பெயரெச்சம், பிலிற்று பகுதி, உகரங்கெடு சந்தி, உம் எச்சவிகுதி, இது கமலமென்னும் வினைமுதற் பொருள் கொண்டது. தழுவிநின்று இடைவிடாமைப்பொருள்மேல் வந்த இறந்தகாலவினையெச்சம். தழுவு பகுதி. உகரங்கெடு சந்தி. இ சாரியை, நில் இடைவிடாமைப்பொருள்மேல் வந்தவிகுதி. அதுவனைக்கும் ஓர்பகுதி, றகர மெய் இறந்தகால இடைநிலை. உ எச்சவிகுதி. நுமொழி முதல் மெல்லெழுத்துவர றறுலகரம் னகரமாய் நின்றாலும் எனவருதல் ந-மெய். உசு-சூ-இல. "மெய்ம்மேவினவை" என்றனமையால். (எங)

74. (இ-ள்.) ஈங்கு இசை நிற்க - இவ்விடத்தில் இச்செய்திகணிகழ, இராவணி - இந்திரசித்து, மாமீன - போரில், இறந்தமை - இறந்தசெய்தியை, ஒற்றர் போய் இசைப்ப - தூதுவர் சென்று கூற, தாங்கு இசை மிழற்று - என்றுநீங்காத எழிலை கூறுமொழிசகுல, ... - முறுக்காணியையுடைய, யாழ் உயர்த்தோன் - வீணைக்கொடியையுயர்த்திய இராவணனை, துன்ப வாரிதியில் வீழ்ந்து - துன்பகடலில் விழுந்து, அழுந்தி - நிலைகாணாது ஆழ்ந்து, பாங்கு உறை - தனதுபக்கத்திலிருக்கும், பரி தேர் - குதிரையும் தேரும், வெம் சினம் களிறு பதாதி - கொடிய கோபத்தையுடைய யானையும் காலாளும், என்று உரைக்கும் நால் படையும் - என்று சொல்லப்படு நான்குசேனையும், வீங்கு நீர் வேலை - பெருத்த நீர்மயமாகிய கடல்சூழ்ந்த, புவி முழுது உருக்க - நிலமாது முழுதுகுலுக்க, வெம் சமர் புரிக என விடுத்தான - கொடிய சண்டைசெய்யக்கடவீரென்று ஏவினான்.

யாழ் தானமாகிய கொடிமேனிற்றலால் தானியாகுபெயர். நிற்க-நிற்றலென்னுஞ்சொல்நிகழ்ச்சியால்நிகழ்ந்தவேலையும் பொருணிகழ்ச்சிதோன்ற உபசரித்தார். உருக்க-காரியப்பொருண்மேனிற்றலால் எதிர்காலவினையெச்சம், உரு பகுதி. கு சாரியை ககரந்தோற்றமும் உகரக்கேடுஞ்சந்தி, அ எச்சவிகுதி, இதனடியாக உருத்த உருதக உருத்தால என வினைவிகற்பங்கள்வரும். முழுதுருக்க என்றதனால் தனது படைமுற்றும் ஒருசேரச்செல்க என ஏவினனென்னும் பொருள்போதரலால் இது உதாரவணி. "உதாரமென்பது ஓதியசெய்யுளில் - குறிப்பினொருபொருள் நெறிப்படத்தோன்றும்" என்றது தண்டியலங்காரம். (எச)

75. (இ-ள்.) ஆயிரம் நா - ஆதிசேடன் தனது ஆயிரநாவுகளாலும், ஓர் அளப்பில் நாள் வருந்தி - ஒரு அளவில்லாத நாள்தோறும் வருந்தி, எண்ணினும் - வரையறுக்கப்புகினும், எண்ணுதற்கு அரிதாம் - வரையறுத்தற்கரிய, போர் மேய - போர்த்தொழிலை விரும்பிய, மூலபலத்தினை - மூலப்படையை, இராமன் - இராமமூர்த்தி, வில் விளையாட்டு அயர்ந்து - சிறிது வில்விளையாட்டுச்செய்து, எளிதில்-தனக்கு ஓர் அருமைதோன்றாது, காயும் வெம் களத்தில் - வருத்துங் கொடிய போர்க்களத்தில், கடிகை ஓர் ஏழில் - ஓர் ஏழுநாழிகைப்பொழுதில், கனல் விழி - தீப்பறக்குங் கண்களையும், புலவு நாறு அழல் வாய் - புலால்நாற்றம்வீசும் தீக்கொப்புளிக்கும் வாயையுமுடைய, பேயும் - பேய்க்கணமும், வெம் குறும் தாள் பூதமும் - கொடிய சிறிய கால்களையுடைய பூதகணங்களும், உவப்ப - சந்தோஷிக்க, பெய் கணை மாரியின் - சொரியும் தனது சரவருஷத்தால், அறுத்தான் - துணிபடுத்தினார்.

சேனையாறினுள் மூலப்படை ஒன்று, அப்படையிலுள்ளோர் தனது மூதாதை முதலியோர் காலந்தோறும் தொன்றுதொட்டுவரும்சேனாவீரர்கள். அறுவகைப்படையாவன மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை. கம்பராமாயணத்தில் எழுநூறாழிகை என்க் கூறியிருக்கின்றது. "ஆனையாயிரந்தேர்பதினாயிர மடல்பரியொருகோடி, சேனைகாவலராயிரமபேர்படில்செழுமணிகின்றுடுங், கானமாயிரமாயிரங்கோடிக்குக்கலின்மணிகணீனொன்றும், ஏனையம்மணியேழுநூறாழிகையாடியதினிதன்றே." என வருதல்காண்க. (எரு)

76. (இ-ள்.) உரவு நீர் - பெரிய நீர்மயமாகிய, தரங்கம் - அலைகளையுடைய, கடல் பெரும் தானை - கடலையொத்த பெரிய மூலசேனை, சிதைந்தவாறு - அழிந்தசெய்தியை, ஒற்றர் போய் உரைப்ப - தூதுவர்கள் சென்றுகூற, புருவம் - புருவங்கள், வாள் நுதலில் ஏறின - ஒள்ளிய நெற்றியின்மேல் ஏறின, விழித்த விழிகள் ஓர் இருபதும் - விழித்த இருபதுகண்களும், புகைந்த - புகைந்தன. அரு வரை - பெரியமலையையொத்த, தடம் தோள் இருபதும் - உயர்ந்த இருபதுதோள்களும், பணையா - பணைத்து, அண்ட கோளகை முகடு அளந்த - அண்டவட்டத்தின் சிகரத்தை அளந்தன, (அதனால்) அரக்கன் வெகுளி - இராவணன்கோபம், என் ஆம் என நினைந்து - யாதாய் முடியுமோ என்று கருதி, வானவர்கள் - தேவர்கள், வெருவி ஓடினர் - அஞ்சியோடினார்கள்.

பணையா செய்யா வென்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். தோளிருபது ஒருமையிற் பன்மைவந்த வழுவமைதி. புகைந்த அளந்த அன்சாரியை பெறாதுவந்த பலவின்பால் படர்க்கைவினைமுற்றுகள். பெற்றுவரில் புகைந்தன அளந்தன எனவரும். (எசு)

77. (இ-ள்.) பொருப்பு உறழ் - மலையையொத்த, தடம் தோள் - உயர்ந்த தோள்களையுடைய, மாபெரும் பக்கன் மகோதரன் - மாபெரும்பக்கனும் மகோதரனும், பொருநரைக் கடந்த - போர்செய்யும் வீரரைவென்ற, உருப்பம் வெம் சினத்த - உஷ்ணமிகுந்த கொடியகோபத்தையுடைய, திறல் விருபாக்கன் - வெற்றிவாய்ந்த விருபாக்கனும், புனை அமுபுகர் முகம் - பட்டத்தையணிந்த அழகியபுள்ளிதங்கியமுகமும், பருஉ தாள் - பருத்ததாள்களையும், மருப்பு உடைய தடம் கை - கொம்பினையுடைய நீண்ட துதிக்கையுமுடைய, வாரணம் - யானையும், தடம்தேர் - பாகத்தேரும், வாமபரி - தாவிச்செல்லும் குதிரையும், பரிதி வாள் உழவர் - சூரியனைப்போல ஒளிவாய்ந்த வாளால்பகைப் புலத்தையுழும் வீரரும், இரைத்து எழு கடலின் - சத்தித்து எழாநின்ற கடலைப்போல, ஆர்த்து முன் செல்ல - கோஷித்தது முன்னே போக, இகல் அமர் வேட்டு - பகைவரோடு போர்செய்தலை விரும்பி, எதிர் எழுந்தான் - எதிர்த்தெழுந்தனன்

எழும்போதே பகைவரோடெதிர்தலைக்கருதி யெழுந்தனனாகலால் எதிரெழுந்தானென்றார். மகோதரன் பெருவயிறுடையவன், பொருநர் பொரு பகுதி, நகரமெய் பெயரிடைநிலை, அர் பலர்பால்விகுதி, இகல் பகைவர்மேல் நிற்றலால் தொழிலாகுபெயர். வேட்டு இறந்தகாலவினையெச்சம். வேள் பகுதி, ளகரம் டகரமாகததிரிதல் சந்தி, டகரமெய் இடைநிலை, உ எச்சவிகுதி.

78. (இ-ள்.) மூவகை உலகும் - மூன்று உலகங்களும், தனது அடிபடுத்த - தனது காலின்கீழ்ப்படுத்திய, முழவு உறழ் - மத்தளத்தையொத்த, தடம்புயத்து அரக்கன் - உயர்ந்தபுயத்தையுடைய இராவணன், வாவு மான் தேரில் - தாண்டிச்செல்லுங் குதிரைபூண்டதேரில், மதி குடை நிழற்ற - சந்திரனையொ

தத் தவளவட்டக்குடை ஒருபால் நிழலைச்செய்யவும், வயங்குவெண் சாமரை இரட்ட-விளங்கும் வெள்ளியகவரி ஒருபால்வீசவும், கோ எடுத்து அருந்து - விண்ணாலகையெடுத்துக்கொண்டும், குருதிவாள் அவுணர் - உதிரந்தோய்ந்த வாளையேந்திய அசுரர்கள், துற்றுடைவாள் சுமந்து ஏக-துற்றுடை வாளைச் சுமந்து ஒருபால்வரவும், தேவர் மெய் நடுநடுங்கி-தேவர்கள் உடல் நடுநடுங்கி, திசைதொறும் வணங்க - திசைகடோறுநின்று ஒருபால்வணங்கவும், செருக்களத்து - போர்க்களத்தில், ஒல்லென அடைந்தான் - விரைந்துவந்து சேர்ந்தான்.

தேவருயிர்பயிறாதுவிறைவ் கோவெடுத்தருந்துமென்றார். சேர இடவாகுபெயர். இரட்ட நிகழ்காலவினையெச்சம், இரட்டு பகுதி, அருந்தும் நிகழ்காலத்திலவந்த பெயரெச்சம், அருந்து பகுதி, உகரக்கேடுசந்தி, உம எச்சவிகுதி, இது வாள என்னும் வினைமுதற்பொருளகொண்டது. (எஅ)

79 (இ-ள்.) ஆயிரம்செருவில் - அநேகந்தரஞ்செய்யும்போரில், மறலியை புறம் கண்டு - இயமனை முதுகுபார்த்து. அமர்பெறாது-அவனிடத்தில் போர் பெறாமையால், அரும சமம வேட்டு-பெறுதற்கரிய போரைவிரும்பி, மாயிரு ஞாலம முழுவதும - பெரிய நிலவுலகமுற்றும், திரிந்த - திரிந்துழன்ற, வாகை-வெற்றிமாலையையணிந்த, வேல்திறல்-வேலின்வலிமைவாய்ந்த, விருபாக்கன்-விருபாக்கனென்னு மரக்கன், காய்கதிர-சுட்டுவருத்துங் கிரணத்தையுடைய, பரிதி சிறுவனை எதிர்ந்து - சூரியன்புத்திரனாகிய சுக்கிரீபனையெதிர்த்து, ஓர்கதையினால் புடைத்தலும - ஓர்தண்டாயுதத்தாலடிக்க, வெகுண்டு-அச்சுக்கிரீபன்கோபித்து, தீ உமிழ - கோபாக்கினியைச்சிந்தும், தறுகண பிதுங்கி - கொடியகண்கள் பிதுங்கி, வாள் அரக்கன் மறிதர - வாளையேந்திய அவ்விருபாக்கன் மடங்கிவீழ்ந்து உயிர்கழிய, சென்னியை நெரித்தான-அவன்தலையைக கைகளானெரித்தான்.

ஞாலம இடவாகுபெயர். மாயிரு ஒருபொருட் பன்மொழி. வருமொழி முதல் உயிர்வர வகரவுடம்படுமெய் தோன்றாது யகரமெய்தோன்றியது உரிச்சொற்றொடராதலால் ந-மெய் "இடை யுரிவசொலின் இயல்பியகொளாதவும" என்ற சூத்திரத்தால், புறம்கண்டு பெறாதுவேட்டு என வேறுபல அடுக்கிய வினையெச்சங்கள் தனித்தனிததிரிந்த என்னும முதனிலையையும் அப்பெயரெச்சம் வேல் என்னும வினைமுதற்பொருளையுங் கொள்ளவைத்தது உடையவன்தொழிலை உடைமைமேலேற்றிக் கூறுமவழக்கால். (எகூ)

80. (இ-ள்.) உலகு எல்லாம் விழுங்கும் - எல்லாவுலகங்களையும்விழுங்கும், மறலி நா என்ன - இயமனது நாவைப்போல, உமிழ - கக்காநின்ற, கொடும் தழல் சிகைபரப்பி - கொடிய நெருப்பின் கொழுந்துவீசி, இலகு வாள் விதிர்த்து-விளங்கும்வாளை யசைத்து, கேடகம திரித்து - கேடகத்தைத்திரித்து, மகோதரன-மகோதரனென்னும அரக்கன, களத்து எதிர் ஏற்ப - போர்க்களத்தில் எதிர்க்க, கொலை பழுத்து ஒழுகும-கொலைத்தொழில்கனிந்து ஒழுகும், குருதிவாள் ஏந்தி-உதிரந்தோய்ந்த வாளையேந்திய, கூன்புறம - வளைந்த முதுகையுடைய, பலகை கைகொண்டு - கேடகத்தைக்கையிலேந்தி, மலையும் வெம் சமத்தின் - போர்செய்யும் கொடியபோர்க்களத்தில், வாலி தன் துணைவன்-வாலிசகோதரனாகிய சுக்கிரீபன, அவன தலை - அம்மகோதரனுடையதலையை, துமித்து எறிந்தான் - வெட்டிவீசினான்.

விதிர்த்து தமித்து இறந்தகாலவினையெச்சங்கள். விதிர் துமி வினைப்பகுதிகள். (அ0)

1. (இ-ள்.) கங்கமும் கழுகும் - பருந்துகளும் கழுகுகளும், ஆர்க்கும் வெங்களத்தில் - ஒலிக்கும் கொடியபோர்க்களத்தில், கவிகுலம் தலைவரை தூரந்த - வாநரசேனைததலைவர்களை முதுகுகண்டு, சிங்க ஏறு அன்ன - ஆண்சிங்கம் ஒத்த, கொடும் சமர்விளைக்கும் - கொடியபோர்செய்யும், மாபெரும் பக்கன்முன் - மாபெரும்பக்கன்முன்பு, அங்கதன் சினவி சென்று - அங்கதன் கோபித்துப்போய, துங்கம் மால்வரையின் - உயர்ந்த பெரியமலையைப்போல, திரண்ட தோளவலியால் - திரண்டதோளின்வலியால், சோரவுற-சோர்வடைய, நிலத்து இடை வீழத்தி - நிலவுலகின்மேல்விழுத்தி, ஆள் அரிபோத்தின் - நரசிங்கத்தைப்போல, ஆங்கு-அவ்விடத்தில், அவன் உடல் பிளந்து - அந்தமாபெரும்பக்கனுடைய சரீரத்தைப்பிளந்து, அளைந்தான்-அவனுதிரத்திற்கலந்தான்.

தூரந்து இறந்தகாலவினையெச்சம். இல் ஒப்புப்பொருளில்வந்த ஐந்தனுருபு. திரண்ட இறந்தகாலப்பெயரெச்சம். திரள் பகுதி, ளகரம் ணகரமாகத் திரிதல் சந்தி, டகரமெய் இறந்தகால இடைநிலை, அ எச்சவிகுதி. அளைந்தான் இறந்தகாலவினைமுற்று. அளை பகுதி. ஆங்கு அசைநிலை, (அக)

2. (இ-ள்.) தானை அம் தலைவர் - தனதுசேனைத்தலைவர்கள், விளிந்தமை - இறந்துகிடந்தலை, வல் அரக்கன் நோக்கி - வலிய இராவணன்பார்த்து, தழல் எழ விழித்து - கோபாக்கினிசிந்த இருபதுகண்களையும் விழித்து, வான் இடைபூத்த - ஆகாயத்தினிடத்துப்பூத்த, உடுகணம் சிதற - நக்ஷத்திரக்கூட்டங்கள் சிதறவும், மற்றைய அண்டமும்-வேறுள்ளபல அண்டங்களும், வெடிப்ப-வெடிபடவும், தேன் அவிழ - தேனொடுமலர்ந்த, கமலம் பொகுட்டு - தாமரைப்பொகுட்டில், இனிது உறையும் தேவனும் - மகிழ்கூர்ந்துவசிக்கும் பிரமனும், செவிதலம் புதைப்ப - தனதுகாதுகளைமூடவும், பால்நிறம் - வெளியநிறத்தையுடைய, சங்கம் ஒருபதும் - பத்துச்சங்கங்களையும், தனது ஆழிவாய் தொறும்படுத்து - தனது பிளந்தவாய்கள்தோறுமவைத்து, ஒலித்தான் - கோஷஞ்செய்தான்.

பூத்த இறந்தகாலப்பெயரெச்சம், பூ பகுதி, இது உருவென்னுவினைமுதற்பொருள்கொண்டது. மற்றைய - பிறிதுபொருளில்வந்த இடைச்சொல்லடியாகப்பிறந்த குறிப்புவினைப்பெயரெச்சம், மற்று பகுதி, ஐ சாரியை, உகரக்கேடும யகரத்தோற்றமும சந்தி, அ பெயரெச்சவிகுதி. வெடிப்ப நிகழ்காலவினையெச்சம் வெடி பகுதி, பகரமெய் சந்தி, பகரமெய் விரித்தல்விகாரம், அ எச்சவிகுதி. (அஉ)

3. (இ-ள்.) பை அரா - படத்தையுடைய ஆதிசேடனது, நெற்றி சுடிகையில்கிடந்த - நெற்றியின்கணுள்ள உச்சிக்கொண்டையில் சுமையாகக்கிடந்த, பார்முகம் கிழிய-நிலவுலகம கிழிபட, மைதவழ் குடுமி - மேகந்தவழுஞ் சிகரத்தையுடைய, ஓர் எட்டுவரை பறித்து-ஒரு அட்டகுலபருவதங்களையும வேரோடும்பறித்து, எறியும்-வீசாநின்ற, வாநரம் தலைவர்கள எவரும் - வாநரசேனைவீரர்கள் எல்லோரும், கை இணை - தமது இரண்டுகைகளிலும், முழந்தாள் மருமம் நீள்சென்னி எங்கணும் - முழங்காலிலும் மார்பிலும் உயர்ந்த சிரசிலும் எவ்விடத்தும, காய்கணை செருகி - சுட்டுவருத்தும் அம்புகளால் செருகப்பட்டு, எய் எனகிடப்ப-முள்ளம்பன்றிபோற்கிடப்ப, உலகு எல்லாம்,

வென்ற இராவணன் - எல்லாவுலகங்களையும் வென்றிகொண்ட இராவணன் இரும் சிலை குழைந்தான்-பெரியவில்லினைவளைத்தான்.

கிழிய என்னும் நிகழ்காலவினையெச்சம் எறியுமென்னும் பெயரெச்சத்தின் முதனிலைகொண்டது. செருகி படுவிகுதி தொக்குநின்ற செயப்பாட்டுவினையெச்சம். செருகு பகுதி, உகரக்கேடு சந்தி இ எச்சவிகுதி. எய் முதனிலை எய்பன்றி. (அ

84. (இ-ள்.) அவை நோக்கி - வானரவீரர்கள் பாணங்களால் எறிபட்டுக்கிடந்ததைப்பார்த்து, இலக்குவன் சினவி - இலட்சுமணர் கோபித்து, வடவரை அனைய - மகமேருவையொத்த, வில்குழைத்து-வில்லைவளைத்து, பொன்தடம் பொன்னாற்சமைந்த பாரத, திணிதோள் வலவனை-திண்ணியதோட்பாகனுடைய, நீள் சென்னி-உயர்ந்தோங்கியதலையை, பொங்கு-கொதிக்கும், அழல்கணையினால்-ஆக்கினேயாஸ்திரத்தினால், வீழ்த்தி - அறுத்துவிழுத்தி, பற்றலர் முதுகுகண்டால் அல்லால்-பகைவரைப்புறங்கண்டாலன்றி, நெடும் கண் சிவப்பு அறாத - தனது நெடியகண்களின் கோபச்சிவப்புச் சற்றுநீங்காத, பணைப்புயத்து-பருத்தலையுடைய புயங்களையுடைய, அரக்கன்-இராவணனேந்திய, கொற்றம்-வெற்றியையுடைய, வெம் சிலைகள் ஒருபதும் - கொடிய பத்துவில்லுகளும், துமிய-துண்டுபட, குருதிதோய் - உதிரந்தோய்ந்த, கணையினால் அறுத்தான் - தமதுபாணங்களினால் துண்டுசெய்தார்.

கண்டலால தொகுத்தல்விகாரம், அல்லாமல் என்னும் எதிர்மறைக்குறிப்பு வினையெச்சத்தில் மகரந்தொகுத்தல் - அறாத எதிர்மறைத்தெரிநிலைப்பெயரொச்சத்தில் துச்சாரியையும் அகரவிகுதியும் தொகுத்தல். (அ

85. (இ-ள்.) பாடகம்தொடர்ச்சி - பாதகடகத்தின்தொடர்ச்சிபோல, பழவினைசிமிழ்ப்பு-வளைந்துவிடாதசூழ்ந்த பழவினைகட்டின், பற்று அற-பற்றுக்கெட, பசும்புயல் அனையான்-சூற்கொண்ட மேகநிறம்போலக் கரியநிறம்வாய்ந்த இராமமூர்த்தியின், ஆடகம் பசும்பொன் - ஆடகமாகிய ஓட்பொன்னொத்த, செய்ய தாமரைதாள் - செந்நிறம்வாய்ந்த தாமரைமலர்போன்ற திருவடியை, சரணம் என்று அடைந்த-அடைக்கலமென்று புகலடைந்த, பேர அறிவின வீடணன் - பேரறிவையுடைய விபீஷணன், வெகுண்டு - கோபித்து, ஓர்கதையினால் அடித்து - ஒருதண்டாயுதத்தினாலடித்து, வெம் சினத்து-கொடியகோபத்தையுடைய, அரக்கர் கோன் நடவும் - இராவணனடத்தும், கேடு உயர்-சிகரத்தாலுயர்ந்த, பசும்பொன் கொடிஞ்சி - பசியபொன்னாலாகிய மொட்டையுடைய, அம் தடம் தேர்-அழகிய பரந்ததேரில் பூட்டிய, குரகதம் அனைத்தையும் கொன்றான் - குதிரைமுழுமையுஞ்செகுத்தான.

பாதகடகம் பாடகம் மரூஉ. அது விடாதுவளைந்த வுறுப்பாலமைந்ததலால் பழவினைக்கு உவமையாகின்றது, உவமைக்கும்பொருட்கும் ஒற்றுமை உண்மையால் உவமையின்றொழிலைப்பொருட்கேற்றி வளைந்து விடாதுசூழ்ந்த பழவினையென்றும். பசுமை என்னும் பண்பு இளகுதல்மேனிற்றலால் ஓட்டுபொன் என்றும். ஆடகம நால்வகைப்பொன்னுள் ஒன்று. ஆடகப்பசும்பொன் பசும்பொன் என்னும பொதுப்பெயரை விசேஷித்துநின்ற இருபெ

யொட்டுப் பண்புத்தொகை நால்வகைப்பொன் ஆடகம், கிளிச்சிறை, சாம்புநதம், சாதரூபம். (அ[illegible]

86. (இ-ள்.) கொடிஞ்சி அம் சடம் சேர்-மொட்டையுடைய அழகியபாரத்த தேரில்பூட்டிய, சொய் உளை பரிகள் - கொய்த பிடரிமயிரையுடைய குதிரைகளும், மறிதலும்-மடங்கிவீழ, இரணியனை செகுத்த - இரணியனைக்கொன்ற, மடங்கல் ஏறு அனைய-நரசிம்மத்தையொத்த, இராவணனை சினவி-இராவணன் கோபித்து, வாய்மடித்து [illegible] - வாயிதழைமடித்து [illegible] பாகனை அதுக்கி, அரப்பி-அதட்டி, விடம் கவிழ்த்து - பாணங்களைப் புண்ணில் விஷத்தைச்சொரிந்து, எரிகால்-அக்கினியைக்கக்கும், சுடர் இலை நெடும் வேல்-விளங்குகின்ற கூர்மையான இலைவடிவாகிய நெடியவேலை, வீடணன்மேல் எறிந்திடவும்-விபீஷணன்மேல் எறிய, கடம் கவிழ் - மதத்தைச்சிந்தும், கடம் கரி-சுவட்டையுடையயானையை, நிகர் இளையோன்-ஒத்த இலட்சுமணன், கணையினால்-தமதுபாணத்தால், அது துணித்தான்-அவன் எறிந்தவேலைத் துண்டுபடுத்தினான்.

ஆங்கு அசைநிலை, உரப்பு பகுதி, உகரக்கேடு சந்தி, இ எச்சவிகுதி. (அசு)

87. (இ-ள்.) புயல் நிறம் விளர்ப்ப - சூல்கொண்ட மேகத்தினிறம் வெளுப்புற, கருகிய மேனி - கறுத்த சரீரத்தையும், புலவு வாய் - புலாலுற்றம் வீசும் வாயையுமுடைய, அரக்கர் கோன் சினவி-இராவணனைகோபித்து, வெயிலினை இழைத்து-சூரியனையே வேல்வடிவாக்கி, கொலை தொழில் பயிற்றி-கொலைத்தொழிலை யதற்குக் கற்பித்து, வெம் விடம் தோய்வில் - கொடியவிஷமாகிய தோய்யிலை, மேல் பூசி - அதன்மேற்பூசி, மயன் - அசுரதச்சன், உளம் வருந்த - தனது உளம் வருந்த, அளப்பு இல நாள் சமைத்து - அளவில்காலம் சிறிது சிறிதாக வுருப்படுத்தி, வரத்தினால் - (தான்பெற்ற) வரத்தினால், மறை ஓம்பும் அளித்த - அதற்குரிய மந்திரத்தாலுங் கொடுத்த, அயிலினை எறிய - வேலையெறிய, இளையோன் உரம் பிளந்து - இலட்சுமணர்மார்பு பிளந்து, மண் மிசை வீழ்ந்து-நிலவுலகின்மேல்விழுந்து, உயிர் அயர்ந்தான்-உயிர்சோர்ந்தான்.

சினவி என்னும் இறந்தகாலவினையெச்சம் எறிய என்னும் நிகழ்காலவினையெச்சத்தின் முதனிலைகொண்டது. இழைத்து பயிற்றி, பூசி சமைத்து என்னுமனவினைகளாகிய வேறுபல அடுக்கியவினையெச்சங்கள், அளித்த என்னும் இறந்தகாலப்பெயரெச்சத்தின் முதனிலையைத்தனித்தனிகொண்டு முடிந்தன. அளி பகுதி, தகரமெய் சந்தி, தகரமெய் இடைநிலை, அ பெயரெச்சவிகுதி. [illegible] அயிலென்னும் செயப்படுபொருள்கொண்டது. இளையோன் உரம் [illegible] உயர்திணையொடு சார்ந்த அஃறிணை உயர்திணைமுடிபேற்றது வழுவமைதி. (அஎ)

88. (இ-ள்.) கலினம் மான் தடம் தேர் - கடிவாளம்பூண்ட குதிரைகள் கட்டிய [illegible]தேரை, கொணர - சாரதி கொண்டுவர, வல் அரக்கன் - வலிய இராவணன், கடி மதில் இலங்கையில் புகலும் - காவலாகிய மதில் சூழ்ந்த இல[illegible]ற்செல்ல, மலை உறழ் தடம் தோள் - மலையையொத்த பரந்ததோளையு[illegible], மாருதி - அனுமன், முன் போல மருத்து மாமலை - முன்போலப் பெரிய சஞ்சீவிமலையை, கொணர்ந்து உய்ப்ப-அங்குக்கொணடுவந்துவைக்க, அலகு இல் சீர் சுசேனன் - அளவில்லாத கீர்த்தியையுடைய சஞ்சீவிக்குத்த

லேவனாகிய சுசேஷணனென்பவன், மாருதியை அளிப்ப - உயிர்கொடுக்குஞ் சஞ்சீவியைத்தர, ஐயன் - இலட்சுமணர், முன் போல உய்ந்து எழுந்தான் - முன்புபோலச் சீவித்தெழுந்தார், சிலை விழுங்கு உயர் தோள் - வில்லால் விழுங்கப்பட்ட உயர்ந்த தோளையுடைய, இராமன் - இராமமூர்த்தி, மாருதியைத் தழுவி - அநுமனை இறுகத்தழுவி, ஈங்கு இவை தெரிப்பான் - இவ்விடத்தில் இவற்றைக் கூறுகின்றார்.

ஈங்கென்னுந் தாங்கென்றது தம்மிடத்து நிகழும் மூன்சொல்லின் ... னின்றது. உய்ந்து இறந்தகாலவினையெச்சம், உய பகுதி. உறழ என்னும் ... னிலையடியாக உறழ்ந்து, உறழ்ந்து, உறழ்ந்தான என வினைவிகற்பங்கள்வரும்.

89. (இ-ள்.) உற்ற உழி - ஆபத்துவந்த இடத்து, ஆவி உதவினர்க்கு - பிராணனைத்தந்தவர்க்கு, உயிரை நிகர் பொருள் - அவ்வுயிரையொத்த பொருள் உண்டு எனில் அந்தோ - இருந்தாலல்லவா, மற்று ஒரு கைம்மாறு அளிப்பர் என்று - வேறொரு பிரதி உபகாரம் உலகினர் செய்வாரென்று, உவப்ப - (இராமமூர்த்தி) மகிழ்ந்துகூற, மருந்து மா மலையினை - பெரிய சஞ்சீவி மலையை மீட்டும் - மீளவும், தலை தடம் திணி தோள அநுமன் - மலைபோலப்பருத்த திண்ணியதோளையுடைய அநுமன, முன போல வைத்து - முன்புபோல அங்குவைத்து, இவண் கடிது வந்துறலும் - இவ்விடத்தில் விரைந்து வந்தடைய, வெற்றி வேல் அரக்கன் - வெற்றியையுடைய வேலையேந்திய இராவணன், வேறு ஒரு மணி தேர் இவர்ந்து - வேறே ஒரு மணிகட்டிய தேரின்மேலேறி, வெம் களத்து இடை புகுந்தான் - கொடிய போர்க்களத்தில்வந்தான்.

மற்றொரு கைம்மாறு அளிப்பரென்று வப்ப என்னுந் தொடரில் யா... செய்யுங் கைம்மாறு பிறிதில்லை என்னும் பொருள் போதருதலால் குறிப்பெச்சம்.

(அ...)

90. (இ-ள்.) மலர் அயன் நடவும் - தாமரை மலரில் வசிக்கும் பிரமனடத்தும், எகினம் மென் புள்ளும் - அன்னமாகிய ஊர்தியும், வலி அழிந்து இரிய மோதியது - வலிகெட்டோடப் போர்செய்ததும், நிலவு வெம் கதிரோனை - விளங்குஞ் சூரியனுடையதும், பரி கொள் தேர் நூறாந்து - ஏழு குதிரைகள் பூண்ட தேரைவென்று, நேமி அம் கிரி வலம் வந்தது - சக்கிரவாளகிரியைப் பிரதக்ஷிணஞ்செய்ததும், அலகு அறு - அளவில்லாத, புவனம் முழுவதும் திரிந்தது ஆய - அண்டமுழுவதுஞ் சுற்றித்திரிந்ததுமாகிய, விண் இடை ... து உலவும் - ஆகாயத்திற் பரவிச் சஞ்சரிக்கும், கலினம் மான - கடிவாளம் பூண்ட குதிரைகட்டிய, தடம் தேர் கடவி - பரந்ததேரைநடத்தி, வல் ... கன் - வலிய இராவணன், கவி குலம் இரிய - வானரசேனைகூட்டம் புறங்காட்டியோட, வந்து ஏற்றான் - வந்து எதிர்த்தான்.

எகினமென்புள்ளின் இறுதியினின்ற உம்மை உயர்வு சிறப்பு... டு. மோதியது வலமவந்தது திரிந்தது என்னும் வினைமுற்றுப் பெயர்களின் இறுதியிலெண்ணும்மைதொகுத்தல். கடவி இறந்தகாலவினையெச்சம். கட பகுதி, வகரமெய்சந்தி, இ எச்சவிகுதி, தடம் உரிச்சொற்றொடராதல் ... வருமொழி வல்லெழுத்து இயல்பாதல் ந-மெய் "இடையுரிவடசொலின்" என்னுஞ் சூத்திரத்தால். (கூ0)

மகாமஹோபாத்யாய, டாக்டர்